# திட்டம்

## மாத இதழ்

மலர்: 47
இதழ்: 7

மார்ச் 2016
பால்குண – சைத்ர 1937–38



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**


கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.


**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூ. **10.00** |
| ஓர் ஆண்டு | : | ரூ. **100.00** |
| இரண்டாண்டு | : | ரூ. **180.00** |
| மூன்றாண்டு | : | ரூ. **250.00** |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை – 600 006.
தொலைபேசி: 2827 2382



- **மத்திய பட்ஜெட் 2016–17: வேளாண்மைக்கு ஓர் உத்வேகம்**
  – சி.எஸ்.சி. சேகர்
- **மத்திய பட்ஜெட்டில் ஊரகக் கட்டமைப்பும் மின்மயமாக்கமும்**
  – ஹிரண்மோய் ராய்
- **உள்கட்டமைப்புக்கு ஒதுக்கீடு: முக்கியமானது ஆனால் சுலபமல்ல**
  – ஜி. ரகுராம்
- **காந்தியின் கனவை நிறைவேற்றும் நிதிநிலை அறிக்கை**
  – இரா.ம. பாவேந்தன்
- **வளர்ச்சி இலக்கை மதிப்பிடுவதில் ஏன் பழைமைப் போக்கு?**
  – டி.எச். பய் பனான்டிகர்
- **பயணிகளின் வசதிகளை மேம்படுத்த வகை செய்யும் இரயில்வே பட்ஜெட்**
  – கே.என். ஸ்ரீனிவாசன்
- **சுகாதார பட்ஜெட் 2016**
  – உர்மி ஏ. கோஸ்சுவாமி
- **மத்திய பட்ஜெட் வங்கித்துறையை மீட்டெடுக்குமா?**
  – என்.ஆர். பானுமூர்த்தி & மனிஷ் பிரசாத்
- **பெண்களுக்கான திட்ட ஒதுக்கீடுகள்**
  – டாக்டர் ஷாஹின் ராஸி
- **ரயில்வே பட்ஜெட் – நிறைகளும், குறைகளும்!**
  – சாந்தி நாராயண்
- **இந்தியாவில் தயாரியுங்கள், வளர்ச்சியையும் எண்ணற்ற வேலை வாய்ப்புகளையும் அளிக்கக் கூடிய ‘ஸ்டார்ட்அப்’ ஆகியவற்றுக்கான வலுவான சூழல் அமைப்பு**
  – நீரஜ் பாஜ்பாய்

# மத்திய பட்ஜெட் 2016–17:
# வேளாண்மைக்கு ஓர் உத்வேகம்

– சி.எஸ்.சி. சேகர்

**2016–17** ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை வேளாண்மைக்கும், ஊரக வளர்ச்சிக்கும் மிகுந்த உத்வேகத்தை அளிக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. பல புதிய முன்முயற்சிகள், குறிப்பாக நீர்ப்பாசனம் தொடர்பான முன்முயற்சிகள் பட்ஜெட்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. வேளாண் வளர்ச்சி தொடர்பாக நீண்டகாலமாக இருந்துவந்த பிரச்னைகளை நோக்கி பட்ஜெட் பேசுகிறது. அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக கடந்த இருபது ஆண்டுகளாக வேளாண் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலைமையை பின்புலமாகக் கொண்டு இந்த பட்ஜெட் வந்திருக்கிறது.

11வது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ஏற்பட்ட சிறப்பான வளர்ச்சிக்குப் பின்னர், வேளாண் வளர்ச்சி ஓரளவு தடுமாற்றம் கண்டது. 2012–13இல் வேளாண் வளர்ச்சி விகிதம் 1.5 விழுக்காடாக இருந்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த விகிதம் முறையே 4.2 விழுக்காடாகவும், –0.2 விழுக்காடாகவும் இருந்தது. 2015–16இல் வேளாண் வளர்ச்சி 1.1 விழுக்காடு வளர்ச்சியைக் கண்டு ஓரளவுக்கு மட்டுமே சிறப்புறும் என்று CSOவின் அண்மை மதிப்பீடு தெரிவிக்கிறது. அடுத்தடுத்து நேரிட்ட இரண்டு வறட்சிகள் மட்டுமின்றி நீர்பாசனம், இடுபொருள் வழங்கீடு, சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள கட்டுமான ரீதியான பிரச்னைகளும் கூட வேளாண் வளர்ச்சி பின்தங்குவதற்குக் காரணமாகின்றன. இவை போன்ற நீண்டகால பிரச்னைகளில் சிலவற்றை இந்த பட்ஜெட் எதிர்கொள்கிறது. நீர்ப்பாசனம், ஊரகக் கட்டமைப்பு, சந்தைப் படுத்துதல் ஆகியவற்றோடு தொடர்புடைய நேர்மறையான முயற்சிகள் முன்மொழியப்பட்டுள்ளன.

பட்ஜெட்டில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் நேர்மறை விளைவுகள் என்ன என்பது பற்றி ஒட்டுமொத்த வேளாண்



வளர்ச்சி, உணவு உற்பத்தி ஆகியவற்றின் அடிப்படையில் கணிக்கும்போதுதான் தெளிவாகத் தெரியவரும். 1990களில் மத்தியவாக்கில் வேளாண் வளர்ச்சியில் தேக்கத்தையும், உணவு உற்பத்தியில் பின்னடைவையும் இந்த தேசம் சந்தித்தது. 1997–98, 2004–05 ஆகிய ஆண்டுகளில் உள்நாட்டு வேளாண் உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு சராசரியாக வெறும் 2.2 விழுக்காடாக இருந்தது. பசுமைப் புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் இருந்த வளர்ச்சி விகிதத்தை ஏறத்தாழ ஒத்ததாக இது இருந்தது. உணவு உற்பத்தி அதிவேகப் பின்னடைவைக் கண்டது. வேளாண்மையில் மூலதன முதலீட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்ட வீழ்ச்சியே இத்தகைய எதிர்மறை நிலைமைக்கு முக்கியமான காரணமாகும். விவசாயத்தில் லாபம் இல்லாததால் ஏற்பட்ட இடுபொருள் பயன்பாட்டுக்குறைவினால் இந்த நிலை மேலும் தீவிரம் அடைந்தது. 2005–06ல் மாற்றத்தின் முதல் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. நேர்மறையான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் 2007–08இல் செயல்படுத்தப்பட்ட அடுத்தடுத்த சில திட்டங்கள் வேகம் கண்டிருந்த வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தியது. வேளாண்மையில் மாநிலங்களின் முதலீட்டை அதிகரிக்கும் திட்டங்களும் (RKVY), உணவு உற்பத்தி இலக்கின் நீட்சியும் (NFSM) இந்த செயல்முறைக்கு உதவின.

---

**சி.எஸ்.சி. சேகர்,** இணைப் பேராசிரியர், பொருளாதார வளர்ச்சி நிறுவனம், தில்லி பல்கலைக்கழகம்.

கடந்த சில ஆண்டுகளில் வளர்ச்சியை நோக்கிய நகர்விற்கு இந்தத் திட்டங்கள் உதவின. இருப்பினும், உற்பத்தியில் நிலைத்த தன்மை இல்லாமல் போனது, சந்தைப் படுத்துவதில் உள்ள சங்கடங்கள் ஆகியவை இன்னமும் வேளாண்துறையை பீடித்து வரு கின்றன. இதுபோன்ற நீண்டகால பிரச்னை களில் சிலவற்றை இந்த பட்ஜெட் எதிர் கொள்ள முயற்சித்துள்ளது.

இந்தியாவில் வேளாண்மை சந்தித்து வரும் முக்கியமான பிரச்னைகளில் ஒன்று பருவமழையை நம்பி இருப்பது. இந்தியாவில் பயிர்செய்யப்படும் நிலப்பகுதியில் 45 விழுக் காடு பகுதி மட்டுமே பாசன வசதி கொண்ட தாக இருக்கிறது. இதன் காரணமாக விவசாய உற்பத்தியில் நிலையில்லாத தன்மை காணப் படுகிறது. பிரதம மந்திரியின் வேளாண் நீர்பாசனத்திட்டம் (PMKSY) திட்டத்தின் மூலம் இந்தப் பிரச்னையை பெரிய அளவில் எதிர்கொள்ள பட்ஜெட் முயன்றுள்ளது. பெரிய அளவிலான நீர்ப்பாசனத்திட்டம் 17 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 28 லட்சம் ஹெக்டேர் நிலத்திற்குப் புதிதாக நீர்ப் பாசனம் கிடைக்கச் செய்யும் நோக்கத்தில் உருவாகியுள்ளது. நீர்பாசன ஆதாயங்களை விரைவுபடுத்தும் திட்டத்தின்கீழ் (AIBP), செயல்படாமல் இருக்கும் 89 நீர்ப்பாசனத் திட்டங்களை மீட்டுருவாக்கம் செய்வதற் கான கருத்துருக்களும் கூட முன் மொழியப் பட்டுள்ளன. இதனால் 81 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும். 6000 கோடி ரூபாய் செலவில் நிலத்தடி நீர்வளத்தைப் பயன் படுத்திக்கொள்ளும் திட்டம் ஒன்று உருவாக் கப்பட்டுள்ளது. இதன்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பண்ணைக்குட்டைகள், கிணறுகள் போன்றவற்றை தூர்வாரி ஆழப் படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும். 25 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் முன் மொழியப்பட்டிருக்கும் நீர்ப்பாசன நிதியும், மற்ற முன்முயற்சிகளும் வேளாண் வளர்ச்சிக்கு மிகுந்த ஆதாயத்தைத் தரக்கூடிய வகையில் அமையப்போவது நிச்சயம்.

## கடனும் காப்பீடும்

கடன்பெறுவதில் நிலவக்கூடிய இடர்ப்பாடு வேளாண்மையில் ஏற்பட்டிருக்கும் ஒரு முக்கியமான நெருக்கடியாகும். வேளாண் கடனுக்கும், உள்நாட்டு மொத்த உற்பத்திக்கும் இடையே உள்ள விகிதம் 1999–2000 ஆண்டில் 10 விழுக்காடாக இருந்தது. 2012–13இல் இந்த விகிதம் 38 விழுக்காடாக அதிகரித்துள்ள போதிலும் நீண்ட காலக்கடன்களின் பங்கு விகிதமானது 2011–12இல் 39 விழுக்காடாகக் குறைந்துள்ளது. 2006–07இல் இது 55 விழுக்காடாக இருந்தது. வேளாண் துறையின் நீண்டகால நன்மையை கருத்தில்கொண்டு பார்க்கும்போது கடன் விழுக்காடு சரிவைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் இருக் கிறது என்பது தெரிகிறது. இந்த நோக்கத்தை கருத்தில் கொண்டுதான் சென்ற பட்ஜெட்டில் 8.5 லட்சம் கோடியாக இருந்த வேளாண்மைக் கான கடன் இலக்கு இந்த பட்ஜெட்டில் 9 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதோடுகூட, விவசாயிகளுக்கு கடன் வட்டி யில் நிவாரணம் தருவதற்காக அரசு வழங் கும் உதவித்தொகை 15 ஆயிரம் கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் விவசாயிகளிடம் நிலங்களுக்கான சட்டப்பூர்வ உரிமை இருக்கிறதா? அவை குத்தகை நிலங்களா? என்பதை எல்லாம் பொறுத்துத்தான் பயிரிடுபவர்களுக்கு கடன் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பருவநிலையின் விளங்காப் போக்குகளினால் ஏற்படக்கூடிய பயிர்களின் இழப்பு விவசாயிகளை தளர்ந்து போகச்செய்து விடுகிறது. பயிர் இழப்பிற்கென புதுப்பிக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டம் ஒன்று அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு பிரதம மந்திரியின் பயிர்க்காப்பீட்டுத்திட்டம் (PMFBY) என்று பெயர். புதிய காப்பீட்டுத் திட்டத்திற்கு 5500 கோடி ரூபாய் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பயிர் இழப்புகள் ஏற்படும்போது இழப்பீட்டுத் தொகை வழங்கப் படுவதற்கு இந்தத் திட்டம் வகை செய்கிறது. உணவு தானியங்களுக்கும், எண்ணெய் வித்துக் களுக்கும் மிகக் குறைவான 2 விழுக்காடு காப்பீட்டுக் கட்டணமே பெறப்படுகிறது. தோட்டக்கலைப் பயிர்களுக்கும், பருத்திக்கும் காப்பீட்டுக் கட்டணம் 5 விழுக்காடு மட்டுமே. இந்தத் திட்டத்தின் கவர்ச்சிகரமான அம்சம் என்னவென்றால் காப்பீட்டுக் கட்டணத்திற்கு உச்சவரம்பு ஏதுமில்லை என்பதும், உறுதி செய்யப்படும் காப்பீட்டுத் தொகையில் மாற்றம் செய்யப்படமாட்டாது என்பதுமே.

உர மானியமாக வழங்கப்படும் தொகையை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தும் முன்னோடித் திட்டம் ஒன்றும் முன்மொழியப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் நேர்முறை நடவடிக்கைகள். ஆனாலும் இவற்றை நடை முறைப்படுத்துவது என்பது விவசாயிகளுக்கு நிலத்தின் மீதிருக்கும் உரிமை, குத்தகையின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே இருக் கிறது. இந்தப் பிரச்னை பற்றி பின்னர் மேலும் அலசுவோம்.

## கொள்முதல், பங்கீடு, சந்தைப்படுத்துதல்

ஒரே இடத்தில்தான் கொள்முதல் செய்யப் படும் என்ற நிலைமையை மாற்றி இணைய வழி கொள்முதலையும் வெளிப்படையான நடைமுறைகளையும் கொண்டுவரும்படி மாநிலங்களை ஊக்குவிப்பது என்பது ஆர்வத்தைத் தூண்டக்கூடிய ஒரு முன் மொழிவாகும். நாட்டில் மொத்தமுள்ள 5.35 லட்சம் நியாய விலைக் கடைகளில் 3 லட்சம் நியாயவிலைக் கடைகளை முழுவதும் இயந்திரம் மூலம் இயங்கச் செய்யும் திட்டம் உள்ளது. தேசிய விவசாயச் சந்தை (NAM)யை அமைப்பதற்கான வழிமுறைக்கு ஜூலை 2015இல் அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கின்றது. 200 கோடி ரூபாய் வேளாண் உள்கட்டமைப்பு நிதி இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 585 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை இந்தத்திட்டம் மூலம் ஒன்றிணைப்பதற்கு பட்ஜெட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், இதற்கு குறிப்பிடத்தக்க தடைகளும் இருக் கின்றன. இந்தத் திட்டத்தை செயல்படுத்து வதற்காக, வேளாண் உற்பத்திப் பொருள் சந்தைப்படுத்தும் குழு சட்டங்களை திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கிறது. மாநிலம் முழு வதும் செல்லுபடியாகக்கூடிய ஒற்றை உரிமத் துடன் கூடிய ஒரு முறையை உருவாக்க வேண்டியுள்ளது. இந்தத் திட்டத்தை முழுமை யாக செயல்படுத்த மாநிலங்களின் விரைவான நடவடிக்கைகள் தேவையாகின்றன.

அறுவடைக்குப் பிந்தைய சேதாரங்கள் என்ற மிகப்பெரிய பிரச்னை இந்தியாவின் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி சந்தித்து வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த பழ உற்பத்தியில் 20 முதல் 22 விழுக்காடு வரை பல்வேறு நிலைகளில் அறுவடைக்குப் பிந்தைய இழப்பு ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது (APEDA, 2007). பழங்கள், காய்கறிகள் 15 விழுக் காடு சேதமடைவதாக சமீபத்திய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.(பொருளாதார ஆய்வறிக்கை 2015–16, தொகுதி 2 பக்கம் 115). சேதாரங்கள் அதிகம் ஏற்படுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனைக் குறைக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்தியாவில் விளை விக்கப்படும் பொருள்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருள்களை சந்தைப் படுத்துவதில் 100 விழுக்காடு அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் முடிவு உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு ஊக்கம் தரக் கூடியது. அறுவடைக்குப் பிந்தைய சேதா ரங்கள் ஓரளவுக்கு குறைவதற்கு இது உதவும்.

## ஊரக வளர்ச்சி:

ஊரக வளர்ச்சிக்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 87765 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இதில் 38500 கோடி ரூபாய் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்திற்கு (MGNREGS) ஒதுக்கப் பட்டுள்ளது. 2.87 லட்சம் கோடி அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து கிராம பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கு அதிகமான நிதி கிடைக்க இருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்கு 80 லட்சம் ரூபாய் என்ற அளவில் இந்த நிதி கிடைக்கும். இது போது மான அளவுடையது. பிரதம மந்திரியின் கிராம மேம்பாட்டு சாலை (PMGSY) திட் டத்தின்கீழ் ஊரக சாலைகளுக்கு ஒதுக்கப் படும் நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இது சரியான திசை நோக்கி வைக்கப்படும் ஒரு அடியாகும். ஊரகப் பகுதிகளில் உள்ள வேளாண் அல்லது பிற பிரிவுகளும், ஊரகக் கட்டுமானம், போக்குவரத்து, சேவைத்துறை போன்றவையும் ஊரக வேலைவாய்ப்பில் அண்மைக்காலத்தில் முக்கியமான ஆதாரப் புள்ளியாக உள்ளன. பட்ஜெட் ஒதுக்கீட்டில் செய்யப்பட்டிருக்கும் அதிகரிப்புகள் ஊரகப் பகுதிகளில் வேளாண் அல்லது பிரிவுகளில் சாதகமான விளைவுகளை உருவாக்கும். இத னால் ஊரக வேலைவாய்ப்பு பெருகும்.

### பட்ஜெட்டில் உள்ள குறைபாடுகள்:

பின்வரும் கூறுகளில் பட்ஜெட் மிக முக்கியமாக பின்தங்கியுள்ளது. முதலாவதாக, வேளாண் முதலீடுகளைச் செய்வதற்கு மாநிலங்களுக்கு தரப்படவேண்டிய ஊக்கம் பற்றி காணலாம். விவசாயம் மாநிலப் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றது. இந்தத் துறையில் வளர்ச்சியை எட்டுவதற்கு முதலீடு செய்ய வேண்டிய தேவை மாநிலங்களுக்கு உள்ளது. வேளாண் முதலீடுகளில் வேகம் குறைந்திருப்பது சமீப காலமாக தெளிவாகத் தெரிகிறது. 2011–12இல் வேளாண்மையில் 18.3 விழுக்காடாக இருந்த மொத்த மூலதன உருவாக்கம் 2014–15இல் 15.8 விழுக்காடாக வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக முதலீட்டில் காணப்படும் இந்த வீழ்ச்சி 2004–05இல் தென்பட்ட அபரிமிதமான வளர்ச்சிக்கு நேர் எதிரானதாக இருக்கிறது. வளர்ச்சியில் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கும் ஒரு சில தேக்க நிலைகளுக்கு முதலீடுகளில் காணப்படும் வேகமின்மை காரணமாக சொல்லப்படுகிறது. விவசாயத்தில் மாநிலங்கள் அதிகமாக முதலீடுகளை செய்வதற்கு ஊக்கமளிக்கக்கூடிய ஆக்கப்பூர்வமுன்மொழிவுகள் எதுவும் இந்த பட்ஜெட்டில் செய்யப்படவில்லை.

இரண்டாவதாக காணப்படும் குறைபாடு இதுதான். பருவநிலைகளில் மிக அதிகமான வித்தியாசங்களைக் கொண்ட பல்வகை தேசம் நம்முடையது. பெருமளவிலான நீர்ப்பாசனத்திட்டமோ, பயிர்க்காப்பீட்டுத் திட்டமோ அல்லது வேறெந்தத் திட்டமோ எதுவாயினும் ஆங்காங்கே நிலவக்கூடிய உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படுவதுதான் வெற்றிக்கு வழி கோலும். மேலிருந்து கீழாக செயல்படுத்தப்படும் திட்டம் எதுவுமே வேளாண்துறையின் வளர்ச்சிக்கு ஏற்றதாக அமையாது. RKVY திட்டத்தின்கீழ் பல்வேறு மாநிலங்கள் மாவட்ட வேளாண் திட்டங்களை (DAP) தயாரித்துள்ளன. இதில் அடங்கியுள்ள விவரங்களின்படி அந்தந்தப் பகுதிக்கு இசைவான உள்ளீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் (சென் 2016).

பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கும் விவசாயக்கடன், பயிர்க்காப்பீடு, DBT எனப்படும் மானியங்களை நேரடியாக விவசாயியின் வங்கிக் கணக்கில் செலுத்தும் திட்டம் ஆகியவற்றின் வெற்றியுடன் நேரடியாக தொடர்புடையது குத்தகை சீரமைப்பும், நில ஆவணங்களை நவீனமயமாக்குவதுமாகும். பட்ஜெட்டில் சொல்லப்பட்டுள்ள முன்முயற்சிகளின் வெற்றி பயனாளிகளை துல்லியமாக அடையாளம் கண்டறிய வேண்டிய மையப் புள்ளியில் இருந்துதான் ஆரம்பிக்கும். நில ஆவணங்களை நவீனமாக்குவது, சொத்தின் உரிமையை நிறுவுவது, குத்தகை சீரமைப்பு ஆகியவை இல்லாமல் இத்தகைய முன்முயற்சிகள் பயனளிக்காது. குத்தகைச் சட்டங்களில் சீர்திருத்தம் உடனடியாகத் தேவைப்படுகிறது. விவசாயி கடன் பெறுவதை இது எளிதாக்கும். பயிர்க்காப்பீடு, மானியங்களை நேரடியாக வழங்குவது போன்றவற்றிற்கு பயனாளிகளை எளிதாக கண்டறிவதற்கு குத்தகை சீரமைப்பு உதவும். தற்போது இத்தகைய பயன்கள் யாவும் விவசாயிகளை நேரடியாக சென்றடையாமல் நில உரிமையாளர்களையே அடைந்து வருவது கண்கூடு. நில ஆவணங்களை நவீனப்படுத்தி நில உரிமைகளை முறைப்படி நிறுவுவதுதான் இப்போது தேவைப்படக்கூடிய மிக முக்கியமான சீர்திருத்தமாகும். நிலவருவாயை ஒத்த காலத்ததாக செய்வது, நிலப்பதிவு, நிலத் தகராறு தொடர்பான ஆவணங்களை மின்னணு முறையில் பதிவு செய்வது ஆகியவை முக்கியமாக தேவைப்படும் சீர்திருத்தங்கள் (நிதி ஆயோக் 2015).

விரிவாக்க சேவைகளை நவீனப்படுத்துவது இறுதியாகத் தேவைப்படும் ஒன்று. சமீபகால பட்ஜெட்களில் இதற்கு கவனம் சரிவர தரப்படவில்லை. இந்த பட்ஜெட்டிலும் அது இல்லை. தொழில் நுட்பங்களைக் கடைபிடிக்காத தன்மை, அரசின் திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது போன்றவற்றில் பெரும்பகுதி விரிவாக்க சேவையில் உள்ள குறைபாட்டின் காரணமாக ஏற்படுகிறது. விரிவாக்க சேவைகளைப் பரவலாக்கி மேம்படுத்துவதுதான் வேளாண்மையை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்சென்று நிலைநிறுத்துவதற்கு மிகவும் அவசியமானதாகும். •

# மத்திய பட்ஜெட்டில் ஊரகக் கட்டமைப்பும் மின்மயமாக்கமும்

– ஹிரண்மோய் ராய்

இந்தியப் பொருளாதாரம் தொடர்ந்து சீராக சுமார் ஏழு சதவீத வளர்ச்சியில் முன்னேறு கிறது. 2014ஆம் ஆண்டில் உலகப் பொரு ளாதார வளர்ச்சி 3.4 சதவீதத்தில் இருந்து 2015ல் 3.1 சதவீதமாகக் குறைந்துவிட்ட சூழலிலும், இந்தியப் பொருளாதாரம் மெச்சத் தக்க வகையில் வளர்ந்து வருவதால் அது ஓர் 'ஒளிப்புள்ளி'யாகத் திகழ்கிறது என்று சர்வதேச செலாவணி நிதியமும் கூறிவிட்டது. உள் நாட்டிலேயே இந்திய உற்பத்தி உள்வாங்கிக் கொள்ளப்படுவதால், 2014–15ஐப் போலவே 2015–16லும் இந்தியாவின் வளர்ச்சி பெரிதாக இருந்தது.

பலதரப்பும் எதிர்பார்த்ததுபோலவே அண்மையில் அறிவிக்கப்பட்ட பட்ஜெட்டும் ஒரு 'பெரு முழக்கமாக' விளங்குகிறது. வேளாண்மை, ஊரக வளர்ச்சி, சமூக நலம், கட்டமைப்புத்துறை, வேலைவாய்ப்பு உருவாக் குதல், வங்கிகளுக்கு மறு முதலீடு அளித்தல் போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கு பட் ஜெட்டில் முக்கிய கவனம் செலுத்தப்பட் டுள்ளது. அரசு முன்னர் அளித்த வாக்குறுதி களை நிறைவேற்றவும், கட்டமைப்புத்துறை வளர்ச்சியை அடைந்துள்ள தடைகளை நீக்கவும், அரசு விருப்பத்தோடு உள்ளதையே பட்ஜெட் அறிவிப்புகள் காட்டுகின்றன.

## 2016–17 நோக்கு

அடுத்த நிதியாண்டில் நாட்டில் எவ்வாறு செலவீனங்கள் இருக்கும் என்ற ஒட்டு



மொத்தப் பார்வையை பட்ஜெட் தருகிறது. அடுத்தடுத்து வரும் ஆண்டுகளிலும் எந் தெந்தத் துறைகளில் எந்த அளவுக்குச் செலவு கள் தொடரும் என்பதும் நடப்பு ஆண்டு பட் ஜெட்டில் அறிவிக்கப்படுவதால், நீண்ட கால நோக்கில் பொருளாதாரத்தில் தரக்குறைவை ஏற்படுத்துவதாகத்தான் ஒவ்வொரு பட் ஜெட்டும் இருக்கிறது. இந்த பட்ஜெட் (2016–17) பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான ஒன்பது தூண்களைக் குறிப்பிட்டு அவை முன்னுரிமை பெறுவதாகக் கூறியுள்ளது. அந்த ஒன்பது தூண்களாவன:

1. வேளாண்மையும் விவசாயிகள் நலமும்.
2. கிராமப்புற வேலைவாய்ப்பும் கட்டமைப்பும்
3. சுகாதாரம் உள்ளிட்ட சமூக நலம்
4. கல்வியும் திறன் மேம்பாடும்
5. உள்கட்டமைப்பும் முதலீடும்
6. நிதித்துறை சீர்திருத்தங்கள்

**டாக்டர் ஹிரண்மோய் ராய்,** உதவிப் பேராசிரியர், பெட்ரோலியம் மற்றும் எரிபொருள் ஆய்வுப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் மற்றும் சர்வதேச வாணிகவியல்.

**டாக்டர் அனில்குமார்,** தலைவர், மின்சாரம் – கட்டமைப்புத்துறை.

**டாக்டர் பிரஸூம் துவிவேதி,** தலைவர், பொருளாதாரம் மற்றும் சர்வதேச வாணிகவியல் துறை.

7. தொழில் செய்வதை எளிதாக்குதல்
8. நிதித்துறையில் ஒழுங்கு
9. வரிச்சீர் திருத்தங்கள்

## உள்கட்டமைப்புத் துறையின் பங்கு

எந்த ஒரு பொருளாதாரம் ஆனாலும் உள்கட்டமைப்புத்துறையே வளர்ச்சிக்கும் அபி விருத்திக்கும் முதுகெலும்பாகத் திகழ்கிறது. அமெரிக்காவின் 42வது குடியரசுத் தலைவராக இருந்த வில்லியம் ஜே.கிளிண்டன் ஒரு முறை சொன்னார்; "சமவாய்ப்பையும், பொருளாதார ரீதியான அதிகாரமளித்தலையும் முன்னெடுத்துச் செல்லுதல். நம் பொருளாதாரத்தின் கடமையும், சரியான நடவடிக்கையும் ஆகும். ஏனெனில், பாரபட்சமும், வறுமையும், அறியாமையும் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகின்றன. மாறாக கல்வியிலும் கட்டமைத்துறையிலும், அறிவியல்–தொழில்நுட்ப ஆய்விலும் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் வளர்ச்சியைத் தூண்டிவிடுகின்றன. அதனால் நல்ல வேலை வாய்ப்புகள் பல உருவாகி, எல்லோருக்கும் செல்வம் சென்று சேர்கிறது." இந்தியப் பொருளாதாரத்தின் இப்போதைய நிலைக்கு இக்கூற்று மிகவும் பொருத்தமுடையது. கட்டமைப்புத்துறை வளர்ச்சி என்பது இந்தியாவில் முக்கியமானதோடு, வருங்காலத்தின் அவசியத் தேவையும் ஆகும். இதனை 2016–17ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் தெளிவாகக் காணலாம். பட்ஜெட்டில், வரும் ஆண்டில் ரயில்வே, நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட ஏனைய கட்டமைப்புத்துறைகளுக்கு 2.21 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற துறைகளின் வளர்ச்சிக்கும் கட்டமைப்புத்துறையே ஆதாரமாக உள்ளதால், அது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் சுமார் பத்து சதவீதம் கட்டுமானத் துறையின் மூலம் கிடைக்கிறது. எனவே, அடுத்த ஐந்தாண்டுகளில் இத்துறைக்கு சுமார் ஒரு லட்சம் கோடி டாலர் தேவை. இதில் பாதியளவு தனியார் துறையில் இருந்து வரவேண்டும். வீட்டு வசதித்துறைக்குக் கூடுதலாக வரிச்சலுகையும் வட்டிச்சலுகையும் அறிவிக்கப்பட்டுள்ளதால், வீடு கட்டும் தொழில் வளர்ச்சி பெறும்.

## நெடுஞ்சாலைத்துறை

சாலைகள் – நெடுஞ்சாலைகளுக்கு ரூ.97 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 55 ஆயிரம் கோடி மத்திய அரசின் பங்கு. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வரியற்ற பத்திரங்கள் மூலம் ரூ. 15 ஆயிரம் கோடியைத் திரட்டும் பிரதம மந்திரியின் கிராமப்புற சாலைகள் திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ. 27 ஆயிரம் கோடி செலவிடப்படும்.

கட்டமைப்புத் துறைகளுக்கு நிதியுதவி கிடைப்பதற்காக அவற்றின் திட்டங்களை மதிப்பீடு செய்யும் புதுமுறை அறிமுகப்படுத்தப்படும். 2016–17ஆம் ஆண்டில் பத்தாயிரம் கி.மீக்குப் புதிய சாலைகள் அமைக்கப்படும். மேலும் சாலைகளில் "பயணியர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த" மோட்டர் வாகனச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். பல்வேறு தடங்களில், குறிப்பிட்ட திறன் மற்றும் பாதுகாப்பு நெறிகளோடு போக்குவரத்தை நடத்தத் தொழில்முனைவோர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இது அமையும்.

சிறியவகை பெட்ரோல் கார்கள், எரிவாயுவில் இயங்கும் கார்கள், (LPG மற்றும் CNG) ஆகியவற்றுக்கு ஒரு சதவீதமும், டீசல் கார்களுக்கு 2.5 சதவீதமும், எஞ்சின் திறன் கூடிய வாகனங்களுக்கு நான்கு சதவீதமும் கட்டமைப்புத்தீர்வை விதிக்கப்படுகிறது. இந்தத் தீர்வையைத் தவிர்ப்பதற்கோ, செலுத்தாமல் இருப்பதற்கோ வழி இல்லை. எனவே பெட்ரோல் மற்றும் LPG, CNG கார்களுக்கும், மின்சாரத்தால் இயங்கும் கார்களுக்கும் தேவை அதிகரிக்கும்.

## மின்சாரம் மற்றும் எரிசக்தித்துறை

பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரம் மற்றும் எரிசக்தித்துறையின் பங்கினை யாரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. கடந்த இருபதாண்டுகளில் இல்லாத அளவுக்கு நாட்டில் நிலக்கரி உற்பத்தி அதிகரித்துள்ளது. மின் உற்பத்தித் திறன் இதுவரையான உச்சபட்ச எல்லையை அடைந்துள்ளது. மின்சாரப் பாதைகளின் விரிவாக்கம் முன்னெப்போதும் இருந்ததைவிட அதிகம். அதேபோலவே LED பல்புகளின் விநியோகமும்.

## கிராமப்புற மின்மயமாக்கலும் புதுப்பிக்கும் எரிசக்தியும்

2015 ஏப்ரல் முதல்தேதி நிலவரப்படி, நம்நாட்டில் 18,542 கிராமங்களுக்கு மின்வசதி கிடையாது. இவையாவற்றுக்கும் அடுத்த ஆயிரம் நாளில் மின்சார இணைப்பு வழங்கப் பட்டு விடும் என்று பிரதமர் கூறியுள்ளார். 2018ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் இந்தப்பணி நிறைவடையும்போது, மின்சாரத்திற்கான தேவையும் அதிகரிக்கும்; அதேமாதிரி மின்சார உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தித்திறனும் பெருகும். இதற்காக தீனதயாள் கிராமீன் வித்யூதிகரண் திட்டத்திற்கும், ஒருங்கிணைந்த மின்சக்தி வளர்ச்சித் திட்டத்திற்கும் கூடுத லாக அதாவது ரூ. 8500 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

## அணுமின்சக்தி

அடுத்த 15–20 ஆண்டுகளில் அணுமின் நிலையங்களின் மூலம் பெறப்படும் மின் சாரத்தைப் படிப்படியாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. நம் நாட்டில் தோரியம் மிக அபரிமிதமாகக் கிடைப்பதால் இது சாத்தியம்தான். மேலும் நிலக்கரி, எரிவாயு போன்றவை எரிக்கப்படாமல், சுற்றுச் சூழலுக்கு உகந்த மின்சக்தி கிடைக்கும். அணு மின் சக்தித் துறைக்கான ரூ. 3000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தூய்மை எரியாற்றல் தீர்வை

நிலக்கரி, பழுப்பு நிலக்கரி ஆகியவை மீது விதிக்கப்பட்டுவரும் 'தூய்மை எரியாற்றல் தீர்வை' இனி தூயசுற்றுச் சூழல் தீர்வை என்று பெயர் மாற்றப்படும். மேலும் தற்போது டன்னுக்கு ரூ. 200 ஆக உள்ள தீர்வை ரூ. 400 ஆக உயர்த்தப்படும். இதனால் நிலக்கரியைப் பயன்படுத்தும் மின் நிலையங்களின் விரி வாக்கம் மட்டுப்படுவதுடன், மாற்று எரி யாற்றல் வளங்களுக்கு ஆதரவு கிடைக்கும்.

## எண்ணெய் – எரிவாயுத்துறை

ஆழ்கடலில் புதிய எண்ணெய் மற்றும் எரி வாயு வளங்களைக் கண்டறியும் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. இதனால் மேலும் பல நிறுவனங்கள் உள்நாட்டு எண்ணெய் – எரிவாயு வளங்களைக் கண்டறியும் வேலை யில் இறங்கும். எனவே கச்சா எண்ணெய் இறக்குமதி குறைந்து அன்னியச் செலா வணியும் மிச்சப்படும்.

## அரசு–தனியார் கூட்டுத்திட்டங்கள்

இந்த பட்ஜெட்டில் அரசு–தனியார் கூட்டுத்திட்டங்களுக்கு ஊக்கம் அளிக்கப் படுகிறது. தனியார் துறையின் முதலீடும், தொழில் நுட்பத்திறனும் சேர்ந்து, செயல் படுத்துவதற்கு நீண்டகாலம் ஆகின்ற பெரிய கட்டமைப்புப்பணிகளை விரைந்து முடிக்க உதவி அளிக்கப்படும். இதனால் அரசுக்கு நிதிச்சுமை குறைவதோடு, தனியார் துறையின் மற்ற அனுகூலங்களும் கிடைக்கும். தற்சமயம் அரசு–தனியார் பங்களிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவது ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. போகப்போக இது துரித வளர்ச்சியை எட்டும். இதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாவன:

1. பொதுப்பயன்பாடு (தகராறுகளைத் தீர்க்கும்) சட்டம் 2016–17ல் கொண்டு வரப்படும்.



2. தனியார் – அரசு கூட்டுத் திட்டங்களில் சலுகை உடன்படிக்கைகளை மறு பேரத்திற்கான வழிகாட்டு நெறிகள் அறிவிக்கப்படும்.

3. கட்டமைப்புத்திட்டங்களுக்கான புதிய கடன்மதிப்பீடு முறை கொண்டு வரப்படும்.

இவையாவும், அரசு–தனியார் கூட்டுத் திட்டங்களை வலுப்படுத்துவதற்கு என ஆலோசனை வழங்க அரசு நியமித்த கேல்கர் கமிட்டியின் பரிந்துரைகளில் சில அரசு–தனியார் கூட்டுத் திட்டங்களுக்கான புதிய மறுபேர வழிகாட்டி நெறிகள், மின்னுற்பத்தி நிறுவனங்களுக்கு அனுகூலமாய் இருக்கும். முன்னர், சாத்தியப்படாத கட்டணங்களைக் குறிப்பிட்டு ஒப்பந்தத்தைப் பெற்றதனால், பல திட்டங்கள் அரைகுறையாக நிற்கின்றன.

மேலும், மின்சாரத் துறை மற்றும் கட்டமைப்புத்துறைக்கான செலவினை இன்னும் அதிகரிக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம், மின்நிதிக்கழகம், கிராமப்புற மின்மயமாக்கம் கழகம், நபார்டு, உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து ஆணையம் போன்றவை 2016–17ல் சுமார் ரூ. 31,300 கோடி அளவுக்கு நிதி திரட்டிக் கொள்ளவும் அனுமதிக்கப்படும்.

### நேரடி அன்னிய முதலீட்டுத்திட்டங்கள்

நேரடி அன்னிய முதலீட்டுக் கொள்கைகள் மாற்றப்பட உள்ளன. உணவுப் பதப்படுத்துதல் மற்றும் உணவு சேமிப்புத் துறையில் நூறு சதவீத அன்னிய முதலீட்டுக்கு அனுமதி அளிக்கப்படும். இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் வெளிநாட்டினரை இது மேலும் ஈர்க்கும். இதனால் அரசுக்கு முதலீட்டுச் செலவு இல்லாமல் போவதுடன், நிச்சமயமற்ற தன்மை எதுவும் இருக்காது.

### வேளாண்துறையில் கட்டமைப்பு

இந்திய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஐம்பது சதவீதம் பேர், வேளாண்துறையில் (தோட்டக்கலை உட்பட) ஈடுபட்டுள்ளனர். எனவே கீழ்க்காணும் கட்டமைப்பு வசதிகள் வேளாண்துறைக்கென பிரத்யேகமாக மேற்கொள்ளப்படும்.

- உணவு உறுதிப்பாட்டுக்கென சேமிப்புக் கிடங்குகளும், குளிர்சாதன கிட்டங்கிகளும் அதிகமாக அமைக்கப்படும்.
- விளைச்சலை அதிகரிக்க அங்கக உரங்கள், இயற்கை உரங்கள் பெருமளவில் கிடைக்க வழி செய்யப்படும்.
- நிலத்தடி நீரின் தேவையைக் குறைக்கிறவாறு நீடித்த நிலைபெறும் பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.
- இதுவரை பாசன வசதியில்லாத பண்ணை நிலங்களுக்குப் புதிய பாசன வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- விவசாயிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைப்பதற்காக, ஆன்–லைன் மூலமாக விலை பொருட்களை விற்கவும், இரு பொருள்களை வாங்கவும் வழி செய்யப்படும்.

- உரமானியம் நேரிடையாக விவசாயி களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**ஊரகப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகள்:**

இந்தியாவின் மக்கள் தொகையில் 72.2 சதவீதம் பேர் கிராமப்பகுதிகளில் வாழ்கின் றனர். நகர்ப்புறங்களில் எழுத்தறிவு மிகுந்தும் மக்கள் தொகை நெருக்கமாகவும் இருப்பதால், கட்டமைப்பு வசதிகளைப் பயனுள்ள வகையில் உருவாக்குவதுபோல், கிராமப்புறங்களில் அவற்றை அமைப்பது சரிப்படவில்லை. தற்போது கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு நிதி அதிகாரமும், சுதந்திர மாகச் செயல்பட அனுமதியும் கிடைத்திருப் பதால், ஊரகப்பகுதிகளில் நவீன கட்ட மைப்பு வசதிகள் விரைவாக ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.

1. ஷியாமா பிரசாத் முகர்ஜி கிராநகர் (RURBAN) (கிராமம்–நகர்) இயக்கத்தின் கீழ் 300 குடியிருப்புப் பகுதிகள் உரு வாக்கப்பட உள்ளன.

2. 2018 மே முதல் தேதிக்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப் படும்.

3. அடுத்த மூன்றாண்டுகளில் மேலும் ஆறு கோடி குடும்பத்தினருக்குப் பயன் தரும் புதிய டிஜிட்டல் எழுத்தறிவு இயக்கம் (DISHA) செயல்படுத்தப்படும்.

4. திறந்த வெளியில் மலம் கழிப்பதை அறவே இல்லாமல் செய்துவிட்ட கிராமங்களுக்கு மத்திய அரசின் திட்டங் கள் மூலமாக ஒதுக்கீடு பெறுவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தோடு, பிரதமமந்திரி கிராம சாலைத்திட்டத்தை மிகுந்த எழுச்சியுடன் அரசு நிறைவேற்றி வருகிறது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமல் இத்திட்டத்தில் கடந்த காலங்களில் தொய்வு ஏற்பட்டது. 2012–13ஆம் ஆண்டில் ரூ.8885 கோடியும், 2013–14ஆம் ஆண்டில் ரூ.9805 கோடியும் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டது. தற்போது 2016–17ஆம் ஆண்டுக்கு மட்டும் ரூ.19,000 கோடியை பட் ஜெட்டில் அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் இந்தத் தொகையோடு மாநில அரசுகளின் பங்கான தொகையும் சேர்ந்து சுமார் ரூ.27,000 கோடி கிராமப்புற சாலை மேம்பாட்டுக்குச் செலவிடப்படும். 65,000 குடியிருப்புப் பகுதிகளை இணைக்கும் வகை யில் சுமார் 2.23 லட்சம் கி.மீ. சாலைகளை வரும் 2019ஆம் ஆண்டுக்குள் அமைத்துவிட வேண்டும் என்பதே நமது இலக்கு. 2011–14 காலகட்டத்தில் நாளொன்றுக்குச் சராசரியாக 73.5 கி.மீக்குச் சாலைகள் அமைக்கப்பட்டன. தற்போது தினந்தோறும் சுமார் 100 கி.மீ தொலைவுக்கு சாலைகள் போடப்படுகின்றன.

கட்டமைப்புத்துறைக்கும் கிராமப்புற வளர்ச்சிக்கும் இந்த ஆண்டு பட்ஜெட் முக்கியத் துவம் அளித்திருப்பதைப் பார்க்கும்போது, ஊரகப்பகுதிகளில் கட்டமைப்புத்துறை முதலீட்டை முடுக்கிவிடுவதில் அரசு கொண் டுள்ள உறுதி தெரிகிறது. கட்டமைப்புத் துறைக்கான புதிய நிதியங்களை ஏற்படுத்தியும், அரசு – தனியார் பங்களிப்புத் திட்டங்களில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தும் வெளி யிடப்பட்டுள்ள அரசின் அறிவிப்புகள், உள் நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் பலகாலமாகத் தெரிவித்துவந்த கவலைகளைக் களைவதாக உள்ளன. நீண்டகால வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசின் நிதி செலவிடப் படுவதோடு, தனியாரின் நிதி ஆதாரமும் இதற்கென விரும்பிப்பெறப்படும் எனவும் தெரிகிறது. விவசாயம், கிராமப்புற வளர்ச்சி, சமூக நலம், கட்டமைப்புத்துறை ஆகிய மிகமுக்கிய துறைகளுக்கு அதிக கவனம் செலுத்தும் இந்த பட்ஜெட், நாட்டின் ஒட்டு மொத்த நலனையும் தெளிவாகக் கருத்தில் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. ●

# உள்கட்டமைப்புக்கு ஒதுக்கீடு: முக்கியமானது ஆனால் சுலபமல்ல

– ஜி. ரகுராம்

### அறிமுகம்

*2016–17 மத்திய பட்ஜெட் நாட்டின் உள் கட்டமைப்பு வளர்ச்சியில் சரியான பாதையிலேயே முன்னேறியுள்ளது. மத்திய பட்ஜெட்டின் பங்காக ரூ.2,20,000 கோடி ஒதுக்கப்பட்டு இது ஒரு நல்ல முயற்சியாக அமைந்துள்ளது. இதில் அதிக பட்சமாக ரூ.70,000 கோடி தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.15,000 கோடி பத்திரங்கள் வெளியீடு மூலம் நிதி திரட்டப் படும்.*

*மற்ற பிற உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு என்ன ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை ஊடகங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள முடியவில்லை. காணப்படும் தொகைகள் மத்திய பட்ஜெட்டின் ஒதுக்கீடா அல்லது ரயில்வே பட்ஜெட் மற்றும் மாநிலங் களின் பட்ஜெட் ஒதுக்கீட்டையும் உள்ள டக்கியதா? மத்திய நிதி அமைச்சகத்தில் இதற்கான தெளிவு இருக்கும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் தானே பல தலைப்பு களில் ஒதுக்கீடு செய்கிறார்கள். இவைகள் தெளிவுபடுத்தப்படாமல் உள்ளன.*

*உண்மையில் இவைகளுக்கான செல வினங்கள் அதிகமாகவே இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஏனெனில் மாநிலங் களும்; உள்ளாட்சி அமைப்புகளும் இந்தத் துறைகளுக்கு செலவிடுகின்றன. இதுபோலவே மத்திய பட்ஜெட்டில் ரயில்வே பணிக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ.45,000 கோடியும், ரயில்வேயின் மற்ற செலவினங்களுக்கும், அதன் சொந்த செயல்பாட்டு வருமானம், பத்திரங்கள், கடன்கள் மற்றம் பொதுத்துறை தனியார் துறை திட்டங்கள் மூலம் நிதி கிடைக்கும்.*

*மத்திய பட்ஜெட்டின் சில ஒதுக்கீடுகளுக்கு மாநிலங்களிலிருந்தும் ஓரளவு நிதி ஒதுக்கீடு கிடைக்கும். உதாரணமாக பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்திற்கு மத்திய பட்ஜெட்டில் ரூ.19,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் மாநிலங்கள் தங்கள் ஒதுக்கீடாக ரூ.8000 கோடி வழங்கும். அது போலவே, மத்திய பட்ஜெட்டில் பெருநகர் திட்டங்களுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.*

*சாலை மற்றும் ரயில் போக்குவரத்துக்கு, அதன்பின் வீட்டுவசதி, சுத்தமான பாரதம் திட்டம், பெருநகர், மின்துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சி திட்டங்களுக்கு மிக அதிக முனைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அளவு அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் மிக முக்கிய சவால்களும் உள்ளன குறிப்பாக முன்னேற்றத்தின் அளவு மற்றம் பங்கு பெறு பவர்களின் செயல்திறமைகள் ஆகியன.*

### சவால்கள்

*அரசு மறக்காமல் போதிய அளவு நிதி வினியோகிக்குமா என்பதே முதல் சவா லாகும். சாலைத்துறையில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மற்றும் தேசிய கிராமப்புற சாலை வளர்ச்சி (NRRDA) அமைப்பின் ஆழ்ந்த அனுபவங்கள் உள்ளன. ஆனால், இந்திய உள்நாட்டு நீர்வழி போக்கு வரத்து நிறுவனத்திற்கு (IWAI) தேவையான செலவுகளை செய்யும் அனுபவம் இல்லை. உள்நாட்டு நீர்வழி போக்குவரத்திற்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதிலிருந்து*

---

**ஜி. ரகுராம்,** பேராசிரியர், பொது செயல்முறைகள் குழுமம், இந்திய மேலாண்மை கழகம், அஹமதாபாத்.

மற்ற பிற உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரம்:

| வரிசை எண் | சாலை, ரயில், பெருநகர் திட்டங்கள் அல்லாத | பட்ஜெட் கணிப்பு 2016-17 ரூ. கோடியில் |
|---|---|---|
| 1. | பிரதம மந்திரி வீட்டு திட்டம் | 20075 |
| 2. | சுத்தமான பாரதம் திட்டம் | 11300 |
| 3. | தீனதயாள் உபாத்யாய் கிராம ஒளி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மின்சார உற்பத்தி திட்டங்கள் | 8500 |
| 4. | நகர்புற மறுமலர்ச்சி திட்டம் மற்றும் 100 பொலிவுறு நகரங்கள் உருவாக்கும் திட்டம் | 7296 |
| 5. | தேசிய கிராமப்புற குடிதண்ணீர் திட்டம் | 5000 |
| 6. | தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு திட்டம் | 4000 |
| 7. | அணுமின் உற்பத்தி திட்டம் | 3000 |
| 8. | தேசிய தொழிற் உற்பத்தி மையங்கள் | 1448 |
| 9. | உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து மேம்பாடு | 800 |
| 10 | நாட்டை சுற்றி தேசிய நெடுஞ்சாலை சாகர்மாலா திட்டம் | 450 |
| 11. | 160 விமானதளங்கள் வரை மீண்டும் செயல்பாடு | 50 to 100 |

இது தெரிய வருகிறது. இது போலவே தான் சாகர் மாலா திட்டமும். பெரிய திட்டங்கள் உண்டு. ஆனால் அமைப்பு சார்ந்த திறமைகள் இல்லை. மார்ச் 4, 2016ல் நடைபெற்ற சாலை போக்குவரத்து சிறப்பு திறமை சாதனை பரிசளிப்பு விழாவில் சாலை போக்குவரத்து, தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல் போக்குவரத்து துறைகளுக்கு பொறுப்பான போக்குவரத்து அமைச்சர் பேசியது கவனிக்க வேண்டியதாக உள்ளது.

பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய வற்றை பாதுகாக்கும் வண்ணம் நாடு நீர்வழி, ரயில் மற்றும் சாலை போக்குவரத்து என்ற வரிசையில் கவனம் செலுத்த விரும்புகிறது என்றார். சாலை போக்குவரத்து துறையில், கடந்த கால அனுபவங்களையும் வரும் காலத் திற்கான தேவைகளையும் மனதில் கொண்டு முதலீட்டாளர்களை ஈர்க்க ஒரு புதுவகையான கலவை திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து மற்றும் ரயில்வே துறைகளில் பொதுத்துறை மற்றும் தனியார் இணைந்து செயல்படும் திட்டங்களை செயல்படுத்துவதற்கான செயல் முறைகள் இன்றும் செய்யப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளன.

இந்த திட்டங்களை செயல்படுத்த ஒப்பந் தக்காரர்களுக்கும், பொதுத்துறை தனியார் துறை திட்டங்களில் முதலீடு செய்பவர் களுக்கும் போதிய திறமைகளும் ஆர்வமும் உள்ளதா என்பதே இரண்டாவது சவாலாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் பொதுத்துறை தனியார் கூட்டு திட்டங்களை துவக்கியவர்கள் சாலை மற்றும் பெருநகர் திட்டங்களிலிருந்து விலகிக் கொண்டனர். இதற்கு முக்கியக் காரணம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளுக்கான ஒப்பந்தங்கள், சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் நிலக் கொள்முதல் போன்றவைகளில் ஏற்பட்ட இருதரப்பு பிரச்சினைகளாகும். தற்போது, சாலை திட்டங்களில் அறிவிக்கப்பட்டிருக்கும் புதிய முயற்சிகளுக்கு அதிகம் பேர் ஆர்வம் காட்டு வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், மற்றவர்களுக்கு இந்த நிலைமை தெளிவாக தெரியவில்லை. ஏனெனில் பல ஒப்பந்தக்காரர்கள் தங்களுக்கு சாதகமான சில திட்டங்களையே தேர்ந்தெடுக்கிறார்கள். L&T போன்ற நிறுவனங்கள் உருவாக்கி செயல்படுத்தும் திட்டங்களைத் தவிர்த்து உருவாக்கும் திட்டங்களையே விரும்பு கிறார்கள்.

*மூன்றாவது சவால், இந்தத் திட்டங்கள் சார்ந்த வழக்குகளை விரைவாகவும், திறமை யாகவும் மேற்கொள்ள தேவையான சட்ட வழிமுறைகள் இருக்கிறதா என்பதை பற்றியே ஆகும். பல உள் கட்டமைப்புத் திட்டங்கள் வழக்குகள் காரணமாக தாமதமாக உள்ளன. உள்கட்டமைப்பு வழக்குகள் சார்பாக நிதி அமைச்சர் பொதுச்சேவைகளுக்கான வழக்குத் தீர்ப்பு சட்ட முன் வடிவு ஒன்று மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருக் கிறார். இது அல்லாமல், இந்தத் திட்டங் களுக்காக அளிக்கப்படும் சலுகைகள் சார்ந்த ஒப்பந்தங்களையும் மறு ஆய்வு செய்ய வழி உள்ளது. சாலை திட்டங்களில் உள்ள பல திட்டங்களில் இருந்த வழக்கு பிரச்சினைகளை தீர்த்து அவைகள் மீண்டும் செயல்பட வைப்பதில் தற்போதைய அரசுக்கு பெரும் பங்குண்டு.*

நான்காவது சவால் உள் கட்டமைப்புத் திட்டங்களுக்கு வங்கிகள் மூலம் குறிப்பாக பொதுத்துறை வங்கிகள் மூலம் கடன் வசதி அளிப்பதாகும். இந்த வங்கிகளில் ஏற்கனவே, இம்மாதிரியான திட்டங்களுக்கு கொடுத்த கடன்கள் வாராக் கடன்களாக மாரியுள்ளன. நிதியமைச்சர் பொதுத்துறை வங்கிகளின் மூலதனத்தை வலுவாக்குவதற்கு மேலும் ரூ.25000 கோடி ஒதுக்கி இருந்தாலும், இவை உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு மேலும் கடனளிக்க இயலாத நிலைமையில் உள்ளன.

ஐந்தாவது முக்கிய சவால், அமைப்பு சார்ந்த திறமைகள் சார்ந்தவைகளாகும். இதில், பயிற்சி, கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டுத்துறைகள் முக்கியமானதாகும். இந்தத் துறையில் பயிற்சித் திறமை, மேலாண்மைக் கழகங்கள் உள்ளிட்டவைகளில் கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்திருந்தாலும் நல்ல கல்வி போதுமான அளவு இன்னும் இல்லை. எனக்குத் தெரிந்த வரை மும்பை பல்கலைக்கழகம், சில தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதானி உள் கட்டமைப்பு, மேலாண்மை கல்வி நிலையம் ஆகியவற்றில் உள் கட்டமைப்புத் துறையில் பட்ட மேற்படிப்புகள் உள்ளன. இதைத் தவிர இது சார்ந்த ஆய்வு மற்றும் மேம்பாடு வசதிகள் குறைவே. பொதுத்துறை, தனியார் துறை கூட்டு திட்டங்கள் செயல்பாட்டில் உலகத்திலேயே இந்தியாவில் தான் அதிகமாக உள்ளன என்ற நிலையில் இது சார்ந்த அனைத்து அனுபவங்களையும் செயல்வடிவமாக்கும் நிலைமை போதிய அளவு இல்லை. இது பற்றி, நவம்பர் 2015ல் **“பொதுத்துறை, தனியார்துறை கூட்டு உள் கட்டமைப்பு திட்டங்களின் மாதிரி மறு ஆய்வு செயல்திறமை வலுவாக்குதல்”** என் பது பற்றிய கேள்கர் கமிட்டி அறிக்கை கூறிய தாவது:

***கடந்த பட்ஜெட்டில் அறிவித்ததுபடி பொதுத்துறை, தனியார் துறை கூட்டு திட்டங் களுக்கான தனி கல்வி அமைப்பு உடனடியாகத் தேவை என்பதை இதில் ஈடுபட்டுள்ள அனைத்து துறையினரும் வலுவாக வலி யுறுத்துகின்றனர். இதைப்போன்ற ஒரு கல்வி அமைப்பு அமைய வேண்டும் என்று இந்தக் குழு வலுவாக வற்புறுத்துகிறது. இந்த அமைப்பு பொதுத்துறை, தனியார் துறை கூட்டு திட்டங்கள் துறையில் ஒரு மேன்மிகு மையமாக விளங்குவதோடு, திறமைகளை வளர்க்கவும் நவீன இந்தத் தருணத்திற்கு தேவையான ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும் வழக்குகளை விசாரித்து தீர்க்கவும் செயல் முறைகளை ஏற்படுத்த வேண்டிய ஆய்வுகளையும், தணிக்கைகளையும், செயல்முறைகளையும் பரிந்துரை செய்யும். துடிப்பான இந்தக் கல்வி நிறுவனம் உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு துடிப்பான வடிவமைப்பு கட்டுமான மற்றும் செயல்படுத்தும் வழி முறைகளை தெரிவு செய்வதன் மூலம் எல்லா மக்களுக்கும் தேவையான நம்பத்தக்க உள் கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள இயலும்.***

நான் பல உள் கட்டமைப்பு திட்டங்களை ஆய்வு செய்த வகையில் திட்ட வடிவமைப்பு, ஆபத்துகளை மதிப்பீடு செய்து நிர்வகிப்பது, அந்த திட்டங்களிலிருந்து சமுதாயத்துக்கு விளையக்கூடிய லாப நஷ்டங்களை ஆய்வு செய்வது,இந்தத்திட்டங்களுக்கான செலவினங்

கள் மற்றும் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்தல், ஒப்பந்த பத்திரங்கள் தயாரித்தல், பொது ஏல விதிமுறைகள், சலுகைகள்சார் ஒப்பந்தங்கள், நிதி வழி வகை செய்தல், திட்ட செயல்பாட்டு ஒழுங்குமுறைகள், ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களை இணைத்தல் மற்றும் ஒன்றை மற்றொருவர் வாங்குதல் போன்ற பிரச்சினைகள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

### கொள்கைகள்

இந்த சவால்களை எதிர்பார்த்து தீர்க்கும் வகையில் நல்ல கொள்கைகள் உருவாக்கப் பட்டால்தான் நாம் செலவு செய்யும் பணத் திற்கு ஏற்ற திட்டங்களை அமைக்க முடியும். உதாரணமாக தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள கவனமும், தற்போதுள்ள 96,000 கிலோ மீட்டர் தூர நெடுஞ்சாலைகளை 2,00,000 கிலோ மீட்டர் தூரமாக அதாவது, தற்போதுள்ள மொத்த சாலைகளில் இரண்டு சதவிகிதத்திலிருந்து நான்கு சதவிகிதமாக உயர்த்துவதற்கான திட்டங்கள் ஆகியன வரவேற்கப்படுபவைகளாகும். இதே சமயம், தற்போது மிக அவசியமான உள் நாட்டு நீர்வழி மற்றும் கடலோர கப்பல் போக்கு வரத்து ஆகியவைகளுக்கான ஒருங்கிணைந்த கொள்கை உருவாகாமலேயே உள்ளது. இந்த திட்டங்களை பல வழிகளில் உருவாக்குவது, ஒழுங்குமுறைகளை தளர்த்துதல், வரிகளை குறைத்தல் மற்றும் இந்தத் திட்டங்களை செயல்படுத்த மானியங்களை அளித்து திட் டங்களை விரைவாக துவக்குவது ஆகியவை களை இதன் முக்கிய அம்சங்களாக கூறலாம். உள் நாட்டு நீர்வழி திட்டத்தின் செயல் எதிர்பார்ப்பு உண்மை நிலைமைகளைவிட மிகப்பெரிய அளவில் உள்ளதாக நான் கருதுகிறேன். தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள எல்லா ரயில் இருப்புப்பாதை கடப்பு களையும் நீக்க சேது பாரத திட்டத்தில் குறிப் பிட்ட அணுகுமுறை உருவாகியுள்ளது வர வேற்கத்தக்கதாகும்.

இரயில்வே துறையில், பொதுத்துறை, தனியார்துறை கூட்டு முயற்சியில் இரயில் நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டம் வர வேற்கத்தக்கதாகும். ஆனால், பிரச்சினை இன்னமும் ஏலம் எடுக்கும் மற்றும் ஒப்பந் தங்கள் மேற்கொள்வது ஆகியவைகளில் உள்ளன. தற்போது, இந்திய இரயில்வே நிலையங்கள் மேம்பாட்டு கார்ப்பரேஷன் வலைதளத்தில் ஆறு ரயில் நிலையங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில், மூன்றுக்கு மட்டும்தான் பத்திரங்கள் உள்ளன. 400க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் ஸ்விஸ் சவால் வழியில் மேம்படுத்தப்பட உள்ளன. அதன்படி ஒரு இரயில் நிலையத்தை ஒரு நிறுவனம் மேம்படுத்துவதை சவாலாக ஏற்றுக்கொண்டு அதை மற்றொரு நிறுவனம் மேலும் மேம் படுத்தலாம். ஆனால், இந்த முறையில் சிக்கல்களிலிருப்பதாக கேள்கர் அறிக்கை கமிட்டி அறிக்கை கூறுகிறது. ஸ்விஸ் சவால், வழியில் நாம் போகக் கூடாது என்றும் அது கூறுகிறது.

ரயில்வே துறையில் ரயில் மேம்பாட்டு ஆணையம் என்ற மிகவும் தேவையான சுதந்திர மான ஒழுங்குமுறை அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் கொள்கைகள் உருவாக்குவது மற்றும் ஒழுங்குமுறைகள் செயல்படுத்துவதை பிரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இது எந்த அளவிற்கு, எந்த அதிகாரங்களோடு சுயமாக செயல்படுகிறது என்பதை இதற்கான சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் போது பார்க்கலாம். கொள்கை வடிவமைத்தல் மற்றும் திட்டங் களை செயல்படுத்துவது ஆகியவற்றை பிரித்து வைப்பது மிகவும் அவசியமாகும்.

மீதமுள்ள 13,010 கிராமங்களுக்கு 2018 மே முதல் தேதிக்குள் மின்சாரம் வழங்கப்பட்டு நாட்டில் 100 சதவிகித கிராமப்புற மின்சார இணைப்பு மற்றும் 2019க்குள் மீதமுள்ள 65000 கிராமங்களுக்கு சாலை இணைப்பு ஏற்படுத்தும் திட்டங்களுக்கு ஒரு தெளிவை கொடுக்கும் வண்ணம் இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோலவே, வீட்டு வசதித் துறைக்கும்.

சுத்தமான பாரதம் திட்டம், பொலிவுறு நகரங்கள், விமான நிலையங்களை புதுபித்தல் ஆகியவைகளை செயல்படுத்துவதற்கான கொள்கைகளில் தெளிவற்ற தன்மை இருப் பதால் அவைகளுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு இருக்குமா என்று தெரியவில்லை. சுத்தமான இந்தியா திட்டம் செயல்படுவதற்கு மக்களிடையே பெரிய அளவில் மன மாற்ற த்தை ஏற்படுத்த வேண்டும். பொலிவுறு நகரங்களை உருவாக்குவதற்கான நோக்கமும் கொள்கைகளும் இன்னமும் தெளிவாக்கப் படவில்லை. ஏற்கனவே உள்ள விமான நிலையங்கள் பல அதிகம் பயன்படுத்தப்படாத நிலையிலும், நஷ்டமடைந்து வரும் நிலையிலும் இருக்கும் போது, செயல்படாத பலவற்றை ஏன் புதுபிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.

பயணிகள் போக்குவரத்து சார்ந்த ஒரு புதுமையான கொள்கை அறிவிப்பு வந்திருக் கிறது:

**பர்மிட் வழங்கு ராஜ்ஜியம் ஒழிப்பு நமது மத்தியக் கால இலக்காகும். அரசு மோட்டார் வாகன சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு பயணிகள் சாலைப் போக்கு வரத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும். புதிய சட்ட சூழ்நிலையை உருவாக்கி மாநில அரசுகள் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் சுற்றுச்சூழல் சூழ்நிலைகள் உருவாக்கப்படும். தொழில்முனைவோர் பல வழித்தடங்களில் திறமை மற்றும் பாதுகாப்பு இலக்குகளுக்கு ஏற்ப பேருந்துகளை இயக்குவார்கள். இதனால், மேலும் திறமையான சாலைப்போக்குவரத்து வசதிகள், பொதுமக்களுக்கு மேலும் பல வசதிகள், மந்தமான இந்த துறைக்கு மேலும் முதலீடுகள், இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள், புதிய தொழில் முனைவுகள் போன்ற பயன்கள் கிடைக்கும். இதனால், முன்னேற்றப்பாதையில் நாம் வேகமாக செல்லமுடியும்.**

இந்த துறையில் மாநிலங்களுக்குத்தான் வாய்ப்புகள் அதிகமாக உள்ள நிலையில் ஏற்கனவே இருந்த நிலைமைதான் நீடிக்க வாய்ப்புள்ளது.

கடந்த காலங்களில் சில கொள்கைகள் தீவிரமாக சிந்திக்கப்பட்டு மேற்கொள்ளப் படவில்லை. இதற்கு இரண்டு உதாரணங் களைக் கூறலாம். முதலாவதாக, முதலில் விண்ணபிப்பவர்களுக்கு முதலாவதாக அனு மதி என்ற 2ஜி தொலை தொடர்பு அலை வரிசை வழங்கு திட்டத்தையும் அதனால் ஏற்பட்ட ஊழல்களையும் கூறலாம். அதைத் தொடாந்து பொதுத்துறை, தனியார்துறை கூட்டுமுயற்சியில் துறைமுக கட்டுமானத்திற்கு ஏலம் விட்ட முறையைக் கூறலாம். இதனால், அதிக வழக்குகள் உருவாகி தாமதங்கள்தான் ஏற்பட்டன.

## மறு ஆய்வு

மொத்தத்தில் ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டிற்கான பொருளாதார ஆய்வு அறிக்கை வெளியிடப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் பட் ஜெட்டுகளைப் பற்றி ஆய்வுகள் செய்து முடிவுகள் வெளியிடப்படுவதில்லை. பட் ஜெட்டில் திருத்தப்பட்ட மதிப்பீடுகள், உண்மையாக செலவிடப்பட்ட தொகை மற்றும் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ஆகியவைகள் மேல்மட்டத்தில் ஆராயப் பட்டாலும், ஒவ்வொரு குறிப்பிட்ட செயல் பாட்டிற்கும் எவ்வளவு செலவு செய்யப் பட்டது, அதற்குண்டான கொள்கைகள் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும். உதாரண மாக, முன் ஆண்டுகளுக்கான ஒரு பட்ஜெட்டில் உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்துக்கு அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், எவ்வளவு செலவிடப்பட்டது என்பது தெரியவில்லை.

ஆகவே, திட்ட செயல்பாடுகளில் ஏற்பட்ட விளைவுகளை இனி நாம் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு தேவையான வகையில் செலவுகள் செய்ய முடியும். ●

# காந்தியின் கனவை நிறைவேற்றும் நிதிநிலை அறிக்கை

**– இரா.ம. பாவேந்தன்**

"இந்தியாவில் கிராமங்கள் அழிந்தால், இந்தியாவும் அழியும். அதன்பின் இந்தியா இந்தியாவாக இருக்காது. உலகில் இந்தியாவின் லட்சியப் பயணம் முடிவுக்கு வந்து விடும். கிராமங்கள் இனியும் சுரண்டப்படாமல் இருந்தால் தான் கிராமங்களுக்கு புத்துயிர் ஊட்டுவது சாத்தியமாகும் *(I would say that if the village perishes India will perish too. India will be no more India. Her own mission in the world will get lost. The revival of the village is possible only when it is no more exploited)*" என்பதில் காந்தியடிகள் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருந்தார். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் விவசாயம் குறித்தும், ஊரக மேம்பாடு குறித்தும் அவர் பேசி வந்தார். இப்போது மிகச்சரியான கால கட்டத்தில் காந்தியடிகளின் இந்த கனவுக்கு உயிர் கொடுக்கும் முயற்சிகளில் மத்திய அரசு இறங்கியிருக்கிறது. அதற்கான முதல்படி 2016–17 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் பொது நிதிநிலை அறிக்கை ஆகும்.

நாடாளுமன்றத்தில் கடந்த பிப்ரவரி 29ஆம் தேதி மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தாக்கல் செய்த 2016–17 ஆம் ஆண்டிற் கான நிதிநிலை அறிக்கையில் விவசாயத் திற்கும் ஊரக வளர்ச்சிக்கும் தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருக்கிறது. விவசாயமும், ஊரக வளர்ச்சியும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒன்றுடன் ஒன்று பின்னிபிணைந்தவை. இவை இரண்டும் இணைந்து வளர்ந்தால் கிராமப்புறங்களில் புதிய மறுமலர்ச்சி ஏற்படும். அப்போது தான் சமத்துவமான சமுதாயம் ஏற்படும். அதுமட்டுமின்றி நகரங் களை ஆட்டிப்படைக்கும் நெரிசலுக்கும் தீர்வு கிடைக்கும்.

## நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

வேளாண் தொழில் ஆண்டுக்கு ஆண்டு நலிவடைந்து வருவதற்கு முக்கிய காரணம், அது லாபம் தரும் தொழிலாக இல்லை என்பது தான். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காக, அடுத்த ஐந்து ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெறும் அறிவிப்பு டன் நின்று விடாமல் இந்த இலக்கை எட்டு வதற்காக சில நடவடிக்கைகளையும் மத்திய அரசு அறிவித்துள்ளது. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைக்கான நிதி ஒதுக்கீடு 2016 –17ம் ஆண்டில் ரூ.35,984 கோடியாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது, கடந்த ஆண்டின் நிதி ஒதுக்கீடான ரூ.28,050 கோடி யுடன் ஒப்பிடும் போது சுமார் 28 விழுக்காடு அதாவது, 7934 கோடி அதிகமாகும். இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த அளவுக்கு எந்த துறைக்கும் நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளை பாதிக்கும் மற்றொரு முக்கிய பிரச்னை வேளாண் விளை பொருட் களை சந்தைப்படுத்துவதற்கு போதிய வாய்ப்புகள் இல்லாதது. நிதிநிலை அறிக்கை திட்டத்தின்படி, நாடு முழுவதும் உள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட 285 மொத்த விற்பனை சந்தைகளில் மின்னணு சந்தை முறை அறிமுகப்படுத்தப்படும். இந்த மின்னணு சந்தை முறைப்படி மொத்த விற்பனை சந்தை களில் விற்பனைக்கு வைக்கப்படும் வேளாண் விளைபொருட்கள் நாடு முழுவதும் உள்ள விற்பனையாளர்களால் மின்னணு கொள் முதல் முறையில் வாங்கப்படும். இதனால், வேளாண் விளை பொருட்களை கொள்

**இரா.ம. பாவேந்தன்,** பத்திரிக்கையாளர், சென்னை.

முதல் செய்வதில் மொத்த வணிகர்கள் இடையே கடுமையான போட்டி நிலவும். அதன் காரணமாக, விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. மின்னணு சந்தைகளை ஏற்படுத்துவதற்கு வசதியாக 12 மாநிலங்கள் வேளாண் சந்தை சட்டத்தில் திருத்தங்களை செய்துள்ளன. வரும் ஆண்டில் மேலும் பல மாநிலங்கள் இந்த திட்டத்தில் இணையும் என்று மத்திய நிதி அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்த புதிய திட்டம் அம்பேத்கரின் பிறந்த நாளான வரும் ஏப்ரல் 14ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொள்முதல் திட்டங்கள்

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு ஆண்டும் பயிர்களுக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தி வழங்கி வருகிறது. எனினும், தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா போன்ற சில மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களில் கொள்முதல் கட்டமைப்பு வலிமையாக இல்லாததால் மத்திய அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலை உழவர்களைச் சென்றடைவதில்லை. இந்த நிலையை மாற்றுவதற்காக, 2016 – 17ம் ஆண்டில் மூன்று புதிய திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. மத்திய அரசின் கொள்முதல் திட்டத்தை செயல்படுத்தும் மாநிலங்களைத் தவிர, பிற மாநிலங்கள் மையப்படுத்தப்படாத கொள்முதல் முறையை கடைபிடிக்க ஊக்குவிக்கப்படும். இந்திய உணவு கழகத்தின் மூலம் ஆன்லைன் கொள்முதல் முறை மேற்கொள்ளப்படும். மூன்றாவதாக, பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படும். இவற்றில் ஆன்லைன் முறையில் வேளாண் விளைபொருட்களை கொள்முதல் செய்யும் திட்டம் விவசாயிகளுக்கு பெருமளவில் பயனளிக்கும். இந்த முறையில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பயிர்களை முன்கூட்டியே பதிவு செய்து, குறித்த காலத்தில் விற்பனை செய்து பணம் பெறலாம். இதன்மூலம் தங்களின் எதிர்காலத் திட்டங்களை அவர்களால் முன்கூட்டியே தீர்மானிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களும் நிதி நிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. கோதுமை, நெல் உள்ளிட்ட உணவு தானியங்கள் தேவைக்கும் அதிகமாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன. அதே நேரத்தில் பருப்பு வகைகளின் தேவை அதிகரித்து வரும் சூழலில், உற்பத்தி குறைவாக இருப்பதால், இந்திய சந்தைகளில் பருப்புவிலை பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்கு முடிவுகட்டும் வகையில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பருப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்காக ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்தும் நோக்குடன், ரூ.900 கோடியில் விலை கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## பாசனத் திட்டங்கள்

வேளாண் துறை வளர்ச்சியடைய அடிப்படை தேவை பாசன வசதி என்பதை உணர்ந்துள்ள மத்திய அரசு, பாசனத்திட்டங்களுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தியாவில் வேளாண் சாகுபடி செய்யப்படும் 14.10 கோடி ஹெக்டேர் நிலப்பரப்பில் 46 விழுக்காடு அளவுக்கு மட்டுமே பாசன வசதி செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 54 விழுக்காடு நிலங்களுக்குஇன்னும்பாசனவசதிசெய்து தரப்படவில்லை. இந்த பகுதிகளில் மழையை நம்பித்தான் விவசாயம் நடைபெறுகிறது. இந்த நிலையை மாற்றி ஒட்டுமொத்த 14.10 கோடி ஹெக்டேர் நிலங்களிலும் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டால், இந்தியாவின் உணவு உற்பத்தி இப்போது இருப்பதை விட 50 முதல் 60 விழுக்காடு உயரும். இது வேளாண் துறை வளர்ச்சிக்கு மிகப்பெரிய அளவில் உதவி செய்யும்.

இதை உணர்ந்துள்ள மத்திய அரசு பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டம் வலுப்படுத்தப்பட்டு ஓர் இயக்கமாக செயல்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 28.5 லட்சம் ஏக்கர் நிலங்களில் பாசன வசதி ஏற்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி விரைவுபடுத்தப்பட்ட பாசன பயன் திட்டத்தின் கீழ், 89 பாசனத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், பல்வேறு காரணங்களால் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்தன. இப்போது இந்த திட்டங்கள் அனைத்தையும் விரைவுபடுத்த மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் மூலம் 80,60,000 ஹெக்டேர் நிலங்களில் பாசன வசதி ஏற்படுத்தப்படும். 2016 – 17ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 17,000 கோடி ரூபாய் நிதி தேவைப்படும். இந்த நிதியைக் கொண்டு 23 பாசனத் திட்டங்கள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும். இந்த திட்டத்திற்காக அடுத்த 5 ஆண்டுகளில் 86,500 கோடி ரூபாய் நிதி தேவைப்படும். இந்த நிதியைக்கொண்டு 89 பாசனத் திட்டங்களையும் செயல்படுத்தி முடிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

### நபார்டு வங்கியில் நிதியம்

நீர்பாசனத் திட்டங்களுக்கு உதவுவதற்காக நபார்டு வங்கியில் அர்ப்பணிக்கப்பட்ட நீண்டகால பாசன நிதியம் ரூ.20,000 கோடி முதலீட்டில் ஏற்படுத்தப்படும். இந்த நிதியத்திற்கு 2016 – 17ம் ஆண்டில் 12,517 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். அரசு நிதியில் இருந்தும், சந்தைகளில் கடன் வாங்குவதன் மூலமும் இந்த நிதி திரட்டப்படும். அதுமட்டுமின்றி, நீடித்த நிலத்தடி நீர் மேலாண்மைக்காக புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 6,000 கோடி செலவிடப்படும். இந்த நிதி பல்வேறு ஆதாரங்களில் இருந்து திரட்டப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 5 லட்சம் பாசனக் குளங்களும், 10 லட்சம் உரக் குழிகளும் அமைக்கப்படும். பாசன வசதி இல்லாத பகுதிகளில் பாசனக் குளங்கள் அமைக்கப்படும். இதனால், அப்பகுதிகளில் விவசாயம் செழிக்க வாய்ப்பு ஏற்படும். உரக் குழிகள் அமைப்பதன் மூலம் இயற்கை உரங்களை அதிகளவில் தயாரிக்க முடியும். இதன்மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்படும்.

மண் வளமாக இருந்தால் தான் உற்பத்தி அதிகரிக்கும் என்ற தத்துவத்தின்படி, நாடு முழுவதும் உள்ள விவசாய நிலங்களை ஆய்வு செய்து அந்தந்த நிலங்களுக்கு ஏற்ற வகையில் உரம் இடுவதற்காக மண் வள அட்டை திட்டம் இப்போது முழு வீச்சில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயிக்கு சொந்தமான நிலமும் ஆய்வு செய்யப்பட்டு, அந்த நிலத்தில் எந்தவகையான உரங்களை பயன்படுத்தலாம் என்பது குறித்து அறிவுரை வழங்கப்படும். இதன்மூலம் உரத்தை சிக்கனமாக பயன்படுத்த முடியும் என்பதுடன் செலவும் குறையும். 2017ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நாடு முழுவதும் உள்ள அனைத்து வேளாண் நிலங்களிலும் இந்த ஆய்வுகளை முடிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்கிறது. இதற்காக உர நிறுவனங்கள் நடத்தி வரும் 2,000 மாதிரி சில்லறை விற்பனை நிலையங்களில் மண் மற்றும் விதைகளை சோதனை செய்யும் வசதிகள் அடுத்த மூன்று ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

### இயற்கை விவசாயத்துக்கு முன்னுரிமை

மத்திய அரசு இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றில் முதலாவது பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகும். இந்த திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 5 லட்சம் ஏக்கர் நிலங்களில் இயற்கை விவசாயம் மேற்கொள்ளப்படும். இரண்டாவது திட்டம், வடகிழக்கு மாநிலங்களில் இயற்கை மதிப்பு வளைய திட்டம் ஆகும். இத்திட்டத்தின்படி



வடகிழக்கு மாநிலங்களில் மதிப்பு வளையம் சார்ந்த இயற்கை விவசாயம் மேற்கொள்ளப் படும். இந்த திட்டத்தின் மூலம் விளைவிக்கப் படும் பயிர்களுக்கு உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் அதிக சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும்நோக்குடன், அவை, மதிப்பு கூட்டப்பட்டு சந்தைப்படுத்தப்படும். இந்த திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையில் 412 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டி ருப்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளுக்கும்,வேளாண் பயிர்களுக்கும் எதிர்பாராத வகையில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துபவை, இயற்கை சீற்றங்கள் ஆகும். இயற்கை சீற்றங்களால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதை தடுப்பதற்காக தேசிய பேரிடர் நடவடிக்கைகளில் சில மாற்றங் களை மத்திய அரசு கடந்த ஆண்டே செய் துள்ளது. அதன் தொடர்ச்சியாக பிரதமரின் பசல் பீமா யோஜனா என்ற பெயரில் புதிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்காக 2016 – 17ம் ஆண்டில், 5,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் கடன் கிடைப்பதை உறுதி செய்வதற்காக 2016 – 17ம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனின் அளவை, 9 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்தவும் நிதி நிலை அறிக்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### பல்வகை வாழ்வாதாரங்கள்

விவசாயிகள் வேளாண்மையை மட்டுமே ஒரே வருவாய் ஆதாரமாகக் கொண்டி ருக்காமல், அவர்களுக்குச் சொந்தமான விளை நிலங்களிலேயே கால்நடைகளை வளர்த்தல், தேனீ வளர்ப்பின் மூலம் தேன் உற்பத்தி செய்தல் போன்ற பண்ணை சாரா தொழில்களைச் செய்வதன் மூலமும் வருவாயை ஈட்ட முடியும். இவற்றை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் விவசாயத்தை தான் தங்களின் வாழ் வாதாரமாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால், வேளாண் தொழில் என்பது அண்மைக் காலமாக, ஆட்சியாளர்களால் கவனம் செலுத்தப்படாத துறையாகவே இருந்து வருகிறது. நீண்ட இடைவெளிக்குப் பின், வேளாண் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. இதில் இடம் பெற்றுள்ள திட்டங் கள் அனைத்தும் முறையாகவும், முனைப் பாகவும் செயல்படுத்தப்பட்டால் அடுத்த, 5 ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானம் இரு மடங்காக அதிகரிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

### ஊரக வளர்ச்சி

இந்தியா கிராமங்களில் தான் வாழ்கிறது என்று தேசத்தந்தை மகாத்மா காந்தி அடிக் கடி கூறுவதுண்டு. அது மறுக்க முடியாத உண்மை. கிராமங்கள் வளர்ந்தால் தான் நாடு வளரும் என்ற உண்மையை உணர்ந்துள்ள மத்திய அரசு, 14வது நிதி ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று நாடு முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில், 2.87 லட்சம் கோடி ரூபாய் மானியம் வழங்க முடிவு செய்திருக்கிறது. இது, முந்தைய ஐந்து ஆண்டு காலத்துடன் ஒப்பிடும் போது, 228 விழுக் காடு அதிகமாகும். இதன்மூலம், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அடுத்த ஐந்து ஆண்டு களில் சராசரியாக 80 லட்சம் ரூபாயும், நகராட்சிகளுக்கு, 21 கோடி ரூபாயும் மானிய



மாகக் கிடைக்கும். இந்த நிதியைக் கொண்டு கிராமங்களில் அடிப்படை வசதியை ஏற்படுத்த முடியும். சில இடங்களில் கிராமங்களை சிறிய நகரங்களாக மாற்ற முடியும். இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான விதிமுறை களை மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ் சாயத்து ராஜ் அமைச்சகம் வகுத்து தரும்.

கிராமங்களில் வளர்ச்சிக்கும், முன்னேற்றத் திற்கும் பெரும் தடையாக இருப்பது சாலை வசதி குறைபாடு ஆகும். கிராமப்புற சாலை களை மேம்படுத்துவதற்காக பிரதம மந்திரியின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வரு கிறது. எனினும், கடந்த 2012 –13ம் ஆண் டில் ரூ.8,887 கோடி ரூபாயும், 2013 – 14ம் ஆண்டில் 9,805 கோடி ரூபாயும் மட் டுமே இந்த திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது, கிராமப்புற சாலைகளை மேம்படுத்துவதற்கு போதுமானதாக இல்லை. இதை உணர்ந்துள்ள மத்திய அரசு, 2016 – 17ம் ஆண்டில் கிராமப்புற சாலை மேம் பாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டை மொத்தம், 19,000 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

### ரூ. 38,500 கோடி நிதி

வறட்சியால் விவசாயம் பாதிக்கப் படுவதைப் போலவே கிராமங்களும் பாதிக்கப்படுகின்றன. வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளை விரைந்து களைய வசதியாக தீனதயாள் அந்தியோதயா இயக்கத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மக்களுக்கான வாழ்வாதாரங்களை அதிகரிப் பதற்காக சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப் படும். இந்த நடவடிக்கைகளில் பெரும் பாலானவை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இதற்காக இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவு 2016–17ஆம் ஆண்டில் ரூ. 38,500 கோடியாக அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உரு வெடுத்துள்ள போதிலும், அனைத்து கிராமங் களுக்கு மின்சார இணைப்பு வழங்குவது மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. 2015ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி நிலவரப்படி 18,542 கிராமங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை. கடந்த ஆண்டு விடு தலை நாள் விழாவின் போது தில்லியில் தேசியக் கொடி ஏற்றி வைத்து பேசிய பிரதமர், அடுத்த 1000 நாட்களில் இந்தியாவின் அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். அதன்பின்னர் 23.02.2016 வரை 5542 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தரப் பட்டிருக்கிறது. ஆனால், அதைவிட இரு மடங்கு அளவு கிராமங்களுக்கு இன்னும் மின்சார வசதி செய்துதரப்பட வேண்டும். இந்த இலக்கை 2018ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதிக்குள் எட்ட வேண்டும். இந்த இலக்கை எட்டுவதற்காக தீனதயாள் உபாத் யாயா கிராமப்புற மின்னொளி திட்டத்தின் கீழ் ரூ. 8500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு பொருத்த மில்லாமல் இருக்கும் அம்சங்களில் மற் றொன்று திறந்த வெளிகளில் மலம் கழிக்கும் வழக்கமாகும். தூய்மை இந்தியா திட்டத் தின் மூலம் தான் இதை சாதிக்க முடியும் என்பதால், அத்திட்டத்திற்கு வரும் ஆண்டில் ரூ. 9,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊக்கமளிப் பதன் மூலம் இந்த வழக்கத்தை ஒழிக்க முடியும் என்பதால், திறந்த வெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தை ஒழிக்கும் கிராம

ஊராட்சிகளுக்கு மத்திய அரசு திட்டங்களில் அதிக ஒதுக்கீடு செய்யப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

கிராமங்கள் வளர்ந்தால் தான் நாடு வளரும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊரக வளர்ச்சித் துறைக்கு 2016–17 ஆம் ஆண்டில் ரூ. 87,765 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இவற்றைக் கடந்து கல்வி, மருத்துவம் உள்ளிட்ட துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் நாட்டின் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைக்கும் வகையில் விவசாயம், ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் பயன் இன்னும் சில ஆண்டுகளில் வெளிப்படையாக உணரப்படும் என்பது உறுதி! •


## FORM IV

*Statement about ownership and other particulars about Thittam (Yojan-Tamil)*

| | |
|---|---|
| 1. Place of publication | CHENNAI |
| 2. Periodicity of its publication | MONTHLY |
| 3. Printer's Name | Dr. Sadhana Rout |
| Nationality | INDIAN |
| Address | Publications Division,<br>Soochana Bhawan,<br>New Delhi - 110 003. |
| 4. Publisher's Name | Dr. Sadhana Rout |
| Nationality | INDIAN |
| Address | PUBLICATIONS DIVISION,<br>SOOCHNA BHAWAN,<br>LODHI ROAD, NEW DELHI,<br>Pin Code: 110 003. |
| 5. Editor's Name | A. ELANGOVAN |
| Nationality | INDIAN |
| Address | THITTAM, PUBLICATIONS DIVISION<br>SHASTRI BHAWAN, CHENNAI - 600 00. |
| 6. Name and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding More than one per cent of the total Capital. | wholly owned by Ministry of Information & Broadcasting, Government of India,<br>New Delhi - 110 003. |

I, Dr. Sadhana Rout, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 08.02.2016

(Dr. Sadhana Rout)
Signature of Publisher

# வளர்ச்சி இலக்கை மதிப்பிடுவதில் ஏன் பழைமைப் போக்கு?

**– டி.எச். பய் பனான்டிகர்**

எந்தப் பின்னணியில் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது என்பதையே பொருளாதார ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. தற்போதைய பொருளாதார நிலவரத்தை மதிப்பீடு செய்துள்ளதோடு, பொருளாதாரத்தை வலுவாக நிலைகொள்ளச் செய்வதற்கென விரிவான கொள்கைகளையும் ஆய்வறிக்கை முன் மொழிந்துள்ளது. பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு அப்பால், நிதிநிலை அறிக்கையில் செலவினங்களை முன்னிலைப் படுத்துவதிலும், வளங்களைத் திரட்டுவதிலும் அரசியல் காரணிகளும் பெரும்பங்கு வகிக்கின்றன. மேலும் பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து பெறப்படும் யோசனைகளும் நிதியமைச்சகம் வாயிலாக நிதிநிலைத் தயாரிப்பிலும் பொருளாதார ஆய்வறிக்கையிலும் இடம்பெறுகின்றன.

இந்த நிதியாண்டில் எட்டிவிடுவோம் என்று சொல்லிவந்த வளர்ச்சி இலக்கு அதீத நம்பிக்கையினால் சொல்லப்பட்டு வந்தது என்பதனால், 2016–17 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி இலக்கினை 7 முதல் 7.5 சதவீதமாக ஆய்வறிக்கைக் குறைத்துவிட்டது. தற்போது நிலவும் உலகப் பொருளாதார மந்த நிலைமையை எதிர்பார்க்காததும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்த நிலை அடுத்த ஆண்டில் எப்படி வேண்டுமானாலும் மாறலாம். இத்தகைய நிச்சயமற்ற பொருளாதாரச் சூழலில், நிலைகுலையாத பொருளாதாரங்களின் எச்சமாகத் தொடரும் இந்தியா, மற்ற நாடுகளைவிடவும் தொடர்ந்து உயர் வளர்ச்சியை எட்டிவருகிறது. நீண்ட காலத்தில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி எட்டு முதல் பத்து சதவீதம் வரை இருக்கலாம்.

உலகின் மற்ற நாடுகளின் பொருளாதார நிலைமை மோசமாகவே இருக்கிறது. ஜப்பானும் ஐரோப்பாவும் பொருளாதாரச் சரிவின் விளிம்புக்கு வந்துவிட்டன. அமெரிக்காவின் வளர்ச்சி, கடந்த காலாண்டில் சுருங்கிவிட்டது. பிரிக்ஸ் நாடுகள் (பிரேஸில், ரஷ்யா, சீனா, தென்னாப்பிரிக்கா) கூட பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றன. பிரேஸிலிலும், ரஷ்யாவிலும் வளர்ச்சி எதிர்மறையாகி மைனஸ் நான்கு சதவீதமாக உள்ளது. தென்னாப்பிரிக்காவும் சிரமப்படுகிறது. சீனாவின் வளர்ச்சி பத்து சதவீதத்தில் இருந்து ஆறரை சதவீதமாகக் குறைந்துவிட்டது.

உலக நாடுகளின் இந்த மந்தப்போக்கில் இருந்து எந்த நாடும் பாதிக்கப்படாமல் இருக்க முடியாது. வாணிகம், முதலீடு என்று பலவாறு நாடுகளுக்கு இடையே பொருளாதாரத் தொடர்புகளால் பிணைப்புகள் உள்ளன. தமது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதியைப் பிரதானமாகக் கொண்ட நாடுகள் முன்னேற்றப் பந்தயத்தில் இருந்து பின் தங்கிவிட்டன. தொடக்கத்தில் இந்தியா, இறக்குமதிக்கு மாற்றான உற்பத்தியில் ஈடுபட்டது. ஆனால், அந்த உற்பத்தியை ஏற்றுமதியாக மாற்றமுடியவில்லை. தற்போது 'இந்தியாவில் தயாரிப்போம்' என்று உத்தியை மாற்றியுள்ளோம். உள்நாட்டுக் காரணிகளையே பெரிதும் சார்ந்திருப்பதால், வெளிநாடுகளுடனான நமது பொருளாதாரத் தொடர்பு மிகவும் மெல்லியது. எனவே உலகப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு சதவீதம் குறைந்தால் இந்தியாவில் அது 0.2 சதவீதம் மட்டுமே குறையும் என்று பொருளாதார ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. எனினும் 2008–09ல் நிகழ்ந்தது போன்ற பெரும்

**டி.எச். பய் பனான்டிகர்,** தலைமைச் செயலர் (ஓய்வு), இந்திய தொழில் வணிகக் கூட்டமைப்பு, புதுதில்லி.



சரிவுகள் ஏற்பட்டால் நமது நிலைமையும் மோசமாகிவிடும்.

உலகப் பொருளாதாரச் சூழல் மந்தமாக இருந்தாலும், இந்தியாவின் தொடர்ந்த வளர்ச்சிக்கு காரணம் என்ன? பல சின்னஞ் சிறு தூண்டு விசைகளை ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மத்தியில் கிட்டத்தட்ட ஊழல் ஒழிக்கப்பட்டது. நேரடி அன்னிய முதலீட்டுக்கு மேலும் பல துறைகளைத் திறந்துவிட்டது. தொழில் நடத்துவதற்கான செலவினங்களைக் குறைத்தது. ஜன் தன் யோஜனா, சமூக முக்கியத்துவம் வாய்ந்த மற்ற திட்டங்கள் போன்றவை வளர்ச்சிக்குத் தூண்டுவிசையாக இருந்ததாக ஆய்வறிக்கை கூறுகிறது. எனினும் இவற்றால் முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவு பெருகவில்லை.

நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் தொழில்துறையின் பங்கு தொடர்ந்து 15–16 சதவீதம் என்ற அளவிலேயே இருந்து வருகிறது. கார்பரேட் நிறுவனங்கள் தொடர்ந்து செயல் பட்டாலும் தமது லாபம் ஈட்டும் திறனை நடப்பு ஆண்டில் இழந்துவிட்டன. கார்பரேட் துறையில் மேலதிகமான உற்பத்தித் திறன் உள்ளது; ஆனால் தேவைகள் இல்லை. எனவே அவற்றோடு, அவை கடன் வாங்கிய வங்கித்துறையும் நெருக்கடியில் உள்ளன.

எனினும் ஐயத்திற்கு இடமின்றி சில துறை கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன. நிதிச் சேவையும் விநியோகமும் துடிப்புடன் இயங்கியதால் சேவைகள் துறை வளர்ச்சியை முடுக்கிவிட்டது. 'தொடங்கிடு இந்தியா' திட்டத் திற்கு புதிய அடித்தளம் கிடைத்துள்ளது. நேரடி அன்னிய முதலீடுகள் பெருமளவிற்கு இல்லை என்றாலும் ஓரளவுக்கு தொடர்ந்து வந்துள்ளது. எல்லாவற்றையும் விட முந்தைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு களின் 'பெருக்க விளைவும்' நமது பொரு ளாதாரத்தைத் துடிப்புடன் இயங்கச் செய்துள்ளது.

பொருளாதார வளர்ச்சியை மீண்டும் முடுக்கிவிட, தேவைகளை உருவாக்கும் நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். அதற்கு ஒருவழி, கட்டமைப்புத் துறையில் பொதுத்துறை முதலீடு செய்வதாகும். இதற்குப் பல வாய்ப்புகள் உள்ளதோடு, அத் தகைய முதலீடுகளில் வலுவான 'பெருக்க விளைவுகளும்' ஏற்படும்.

தனியார் முதலீடு குறைந்ததற்கு ஒரு காரணம் வட்டிவிகிதம் அதிகமாக இருந்த தாகும். 2010–11க்குப் பிறகு நான்காண்டுகளில் பணவீக்கம் மிகுந்து சவாலாக இருந்ததால், ரிசர்வ் வங்கி வட்டிவிகிதத்தை உயர்த்தி இருந்தது. அந்தக் காலகட்டத்தில் முதலீடும் அதிகமாகவே இருந்தது என்றாலும் பொருளா தாரத்தில் பொறி எதுவும் பறக்கவில்லை. விவசாய விளைபொருள்கள் – குறிப்பாகத் தோட்டக்கலைத்துறை பொருட்களின் வரத்து குறைந்ததே பணவீக்கத்திற்கு முக்கிய காரணம்.

கடந்த இரண்டாண்டுகளில் பணவீக்கம் கட்டுக்குள் உள்ளது. மொத்த விலைப் புள்ளியில் எதிர்மறையாகவும், சில்லறை விலைப்புள்ளியில் ஆறு சதவீதத்திற்குக் குறைவாகவும் பணவீக்கம் உள்ளது. எனவே ரிசர்வ் வங்கியும் ரெப்போ விகிதத்தை 6.75 சதவீதமாகக் குறைத்தது. ஆயினும் அதன் பலனை வங்கிகள் கடனாளிகளுக்குக் வழங்க வில்லை. பொருளாதார ஆய்வறிக்கை இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, வட்டி விகிதத்தை மேலும் குறைத்து, தாராளமாகக் கடன் கிடைக்கச் செய்தால் வளர்ச்சி பீறிட்டு வெடிக்கும் என்று கூறுகிறது.

இந்தியா தனது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதித்துறையை முறையாகப் பயன்படுத்தவில்லை. அல்லது பயன்படுத்த அதனால் இயலவில்லை. எனினும் நமக்கு ஏற்றுமதி மிகவும் அவசியம். தொழில் துறை யினரின் வருவாயில் சுமார் 12 சதவீதம் ஏற்றுமதிகள் மூலமே வருகிறது. ஆனால் கடந்த 14 மாதங்களில் ஏற்றுமதி கணிசமாகக் குறைந்துவிட்டதால் உலக வருமானமும் குறைந்துவிட்டது.

அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வ், வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளது; மேலும் அது உயர்த்தப்படும் என்று தெரிகிறது. இதனால் உலக நாடுகள் பலவற்றின் செலா வணி மதிப்புக் குறைந்துவிட்டது. ரூபாயின் மதிப்பு, முன்பு இருந்த அடிமட்ட நிலை அளவுக்குச் சென்றுவிட்டது. ஆனாலும் நம் முடைய ஏற்றுமதிக்கு இந்தப் பணமதிப்பின் வீழ்ச்சி உதவவில்லை. அதற்குக் காரணம், ஏற்றுமதியில் நம்மோடு போட்டியிடுகின்ற நாடுகளின் செலாவணி மதிப்பு நம்மை விடவும் கீழிறங்கியதால், நமக்கு எதுவும் அனு கூலமாகவில்லை. உலக நாடுகளின் செலாவணி மதிப்புகளுக்கு இடையேயான போட்டியில் ரூபாயின் மதிப்பை உயர்த்திப்பிடிக்க ரிசர்வ் வங்கி பெரிதும் முயன்றுள்ளது. ரூபாயின் மதிப்பு அதல பாதாளத்தில் வீழ்ந்துவிட்டால் ஏற்படும் அபாயத்தையும் பொருளாதார ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

நம்முடைய ஏற்றுமதியில் சரிவுகள் ஏற் பட்டாலும், நடப்புக் கணக்குப் பற்றாக்குறை 1.1 சதவீதம் மட்டுமே. இதற்கு ஓரளவுக்குக் காரணம் சேவை ஏற்றுமதிகள்; (தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள்) மறு பாதிக்குக் காரணம், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்ததால் இறங்குமதிச் செலவு குறைந்தது ஆகும். இந்த ஆண்டில் இந்தியாவின் கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 45 டாலராக உள் ளது. இது 2016–17ல் 35 டாலராகக் குறை யும் என பொருளாதார ஆய்வறிக்கைக் கூறி யுள்ளது.

தற்போதுள்ள வளர்ச்சி வேகத்தைத் தக்க வைத்துக் கொள்வதோடு, மேலும் வேகத்தை முடுக்கிவிடுவதற்கு எந்தமாதிரியான கொள் கைகளை அறிவிக்க வேண்டும் என்பதே பலரும் எழுப்பும் கேள்வி. 'பெருக்கி விளைவு' விரைவிலேயே முற்றுப்பெற்று விடுவதோடு, முதலீடுகளும் குறைந்து விடுமாதலால், வளர்ச்சிப் போக்குத் தொடரும் என்று அனுமானித்து விடமுடியாது. நிதிநிலை அறிக்கையில் வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்பதில் நிதியமைச்சர் உறுதியாக உள்ளார். மொத்த வருவாயில் 3.5 சதவீதத்திற்குள்

பற்றாக்குறை இருக்கும். ஆனால் இப்போதைக்கு அரசாங்கச் செலவினம் மூலமாக பெருக்கி, சீர்திருத்த நடவடிக் கைகளை மேற்கொண்டாக வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில், 'ஒரு பதவி ஒரே ஓய்வூதியம்' திட்டத்திற்கும், மத்திய அரசு அலுவலர்களுக்கான ஏழாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளுக்கும் செலவிட நிதி தேவை. ஆனால் இந்தச் செலவைவிட, பொருளாதார வளர்ச்சிக்குத் துணையாகும் செலவினமே முக்கியமானது. இதற்கென மூன்று வழிகளை ஆய்வறிக்கைக் கண்டறிந்து கூறியுள்ளது.

முதலாவது கல்வித்துறை, கல்வி அறிவு இல்லாமல் தொழிலாளர்கள் செய்யும் வேலை யில் உற்பத்தித்திறன் குறைவாக இருப்பதுடன் ஊதியமும் குறைவாகவே இருக்கும்.

இரண்டாவது, ஆரோக்கியம். ஆரோக்கிய மான ஒருவரின் உற்பத்தித்திறன் அதிகமாக இருக்கும். மேலும் அவர் மருத்துவத்திற்குக் குறைவாகவும், மற்றவற்றுக்கு அதிகமாகவும் செலவிடுவார். எனவே வளர்ச்சிக்கு மூலா தாரம் கல்வியும் ஆரோக்கியமும். இதுவே பல நாடுகளின் அனுபவமும் ஆகும்.

மூன்றாவது வேளாண்மை. உணவு உறுதி யளிப்பிற்கும், வேளாண் விளை திறனைப் பெருக்குவதற்கும் பாசன வசதிகளை மேம் படுத்தி,பண்ணைப்பணிகளைஎந்திரமயமாக்கி தேவையான இடு பொருள்களை வழங்கி, சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு மர பியல் மாற்றப்பட்ட விதைகளையும் பயிர் களையும் ஏற்க வேண்டும் எனவும் பொரு ளாதார ஆய்வறிக்கை கூறியுள்ளது.

உற்பத்தித் திறனற்ற அல்லது உற்பத்தித் திறன் குறைந்த மானியங்களைக் களைவதற்கும் நிதிநிலை அறிக்கையில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. நலிந்த பிரிவின ருக்குப் பயனளிக்காத மானியங்களை அறவே நீக்கிட வேண்டுமென ஆய்வறிக்கை சொல்லி யிருக்கிறது.



பொருளாதார ஆய்வறிக்கை முக்கியமான இரண்டு ஆலோசனைகளையும் வழங்கி யுள்ளது. முதலாவது, வசதி படைத்தவர்களுக்கு தரப்படுகின்ற மானியங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். சிறு சேமிப்புத்திட்டங்கள், சமையல் எரிவாயு மானியம், ரயில்வே, மின்சாரம், விமான எரிபொருள், தங்கம், மண்ணெண்ணெய் போன்றவை மூலமாக வசதி படைத்தவர்கள் பெருகின்ற மானியம் ஆண்டொன்றுக்குச் சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது ஆலோசனை, வசதியான விவசாயிகளின் வேளாண் வருமானத்திற்கு வரிவிதித்தலும், உரமானியத்தைத் சீரமைத் தலும் ஆகும்.

இந்த யோசனைகள் நிதியமைச்சருக்கு உவப்பாக இருக்க முடியாது. ஏனெனில் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் இவற்றைக் கடுமையாக எதிர்க்கும். அவருடைய கட்சியே, எதிர்வரும் மாநில சட்டசபைத் தேர் தலைச் சந்திக்க வேண்டியுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமான சீர்திருத்த நட வடிக்கை மசோதாக்கள் ஏற்கனவே மாநிலங் களவையில் நிறைவேற்றப்படாமல் முடங்கி யுள்ளன.

வரிவருவாய் மூலமே செலவுகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும். முடியாத பட்சத்தில் கடன் வாங்கலாம். ஆனால், இந்தியாவில் தான் மிகக் குறைவாக வரிவிதிக்கப்படுகிறது.

நாட்டின் மொத்த வருவாயில் வரிகளின் பங்கு 16.6 சதவீதம் மட்டுமே. இதுவே, சீனாவில் 19.4%, ரஷ்யாவில் 23%, தென்னாப்பிரிக்காவில் 28.8%, பிரேஸிலில் 35.6%. எனினும் தனிநபர் வருமானத்தை ஒப்பிடும்போது வரிவிகிதங்கள் குறைவாக இருப்பதாகச் சொல்ல முடியாது.

நம்முடைய வளர்ச்சியில் நான்கு முக்கிய மான சீர் திருத்தங்களை மேற்கொண்டா லேயே வியத்தகு மாற்றத்தைக் காணலாம். பொதுத்துறை மற்றும் தனியார் துறை முதலீடுகளுக்குத் தடையாக இருப்பது நில எடுப்புப் பிரச்சினைகள்தான். சுமார் 25 சதவீதத் திட்டங்கள் இதனால் நிலுவையில் உள்ளன. சரக்கு சேவை வரி பற்றிப் பல காலமாக விவாதித்து வருகிறோம். இன்னும் அதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. சரக்கு சேவை வரிச்சட்டம் செயல்பாட்டுக்கு வந்திருந்தாலேயே வளர்ச்சி வீதம் இன்னும் ஒரு சதவீதம் உயர்ந்திருக்கும். நேரடி அன்னிய முதலீட்டுக்குத் தடையாக இருப்பது, வெளியேறும் கொள்கை. எவ்வித நிபந்தனையும் இன்றி உள்ளே வருவதற்கு அனுமதி உண்டெனில், வெளியேறவும் அப் படியே அனுமதி உண்டு என்றே அனுமானிக் கின்றனர். ஆனால், இந்தியாவில் தொழில் தொடங்கிவிட்டு வெளியேற நினைப் பவர்களுக்குத் தெளிவான வழிகாட்டிகள் இல்லையாதலால் நேரடி முதலீடு உள்ளே வருவதிலும் தயக்கம் உள்ளது. கடைசியாக, தரமான வேலை வாய்ப்புகளை வழங்குகி றவாறு, தொழிலாளர் கொள்கையும் மாற்றி யமைக்கப்படவேண்டும்.

ஆக, பொருளாதார வளர்ச்சி வேகத்தை முடுக்கிவிடவும், ஸ்திரத்தன்மையை உறுதிப் படுத்தவும், ஆய்வறிக்கை முன் வைத்துள்ள யோசனைகள் வருமாறு:

1. உள்நாட்டுத் தேவை பெருகுவதன் மூலம் வளர்ச்சி ஏற்பட வேண்டும். இதற்குக் கட்டமைப்புத் துறையில் செலவுகளை அதிகரிக்க வேண்டும்.
2. வசதி படைத்தவர்களுக்குப் பலன் தருகின்ற சிறு சேமிப்புத்திட்ட வட்டி விகிதம், ஓய்வூதியம், தங்கத்தின் மீதான வரிவிதிப்பு முறை போன்றவற்றை மாற்றியமைத்து ஒரு லட்சம் கோடி ரூபாய் மானியச் செலவைக் குறைக்க வேண்டும்.
3. வரி செலுத்துவோர் எண்ணிகையை அதிகரிக்க வேண்டும். எனவே குறைந்த பட்ச வரிவிலக்கு வரம்பை உயர்த்தக் கூடாது.
4. கல்வி, சுகாதாரம், வேளாண்மை ஆகிய மூன்று துறைகளுக்கு மட்டுமே அரசுச் செலவில் முன்னுரிமை தரவேண்டும்.
5. வசதி படைத்த விவசாயிகளின் விவ சாய வருமானத்திற்கு வரி விதித்து, அவர்களையும் வரி வரம்புக்குள் கொண்டுவருதல் வேண்டும்.
6. பெரும் விவசாயிகளுக்கே பலன் அளிக் கின்ற உரமான்ய முறையைச் சீரமைக்க வேண்டும்.
7. ரிசர்வ் வங்கி தனது முதலீட்டைப் பதினாறு சதவீதமாகக் குறைத்துவிட்டு, உபரியை வங்கித்துறையின் நிதியாதாரங் களுக்குப் பயன்படுத்த வேண்டும்.
8. தரமான வேலைவாய்ப்புகள் ஏற்பட ஏதுவாக தொழிலாளர் கொள்கைகள் சீர்திருத்தப்படவேண்டும்.

பொருளாதார வளர்ச்சியை, அதற்குரிய வாய்ப்புகளின் நீண்டகால அடிப்படையில் ஆய்வறிக்கை அணுகியுள்ளது. அதில் கூறப் பட்டுள்ள யோசனைகள் செயல்படுத்தபட மாட்டாது என்ற அனுமானத்தில்தான் வளர்ச்சி விகிதம் 7 முதல் 7.75 சதவீதம் வரை இருக்கலாம் என்று பழைமைப் போக்கில் மதிப்பிடப்பட்டுள்ளது. •

# பட்ஜெட் 2016–17: தனிநபர், நிறுவனங்கள் – மாநிலங்களுக்கான வரிவிதிப்பு கணக்கீடுகள்

– ஜயந்த ராய் சௌத்ரி

கச்சா எண்ணெயின் விலை இதுவரையிலும் இல்லாத அளவிற்கு விலை குறைவாக இருக்கின்ற இந்த சாதகமான அம்சத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு துணிவாக வரிவிதிப்பு நடவடிக்கைகளுடன் அறிவிக்கப்படக் கூடிய நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளாத பட்ஜெட் என்றே 2016–17 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டைக் கூற முடியும்.. கச்சா எண்ணெய் விலை குறைவு என்பது மானியங்கள் அளிக்கும் சுமையில் இருந்து அரசை நிதானமாக விடுவித்து வருகின்றது. மேலும் சர்வதேச அளவில் பொருளாதார நிலைமை மந்தமாக இருக்கின்ற சூழலில்கூட வளர்ச்சியை நோக்கி பயணிக்கும் வகையில் இந்தியப் பொருளாதாரத்திற்கு இந்த விலை குறைப்பு ஊக்கம் தர முடியும்.

தனிநபர் மற்றும் நிறுவனம் என்ற இரு நிலைகளிலும் வரிகளைக் குறைத்தல், வரி செலுத்தும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலான வருமான வரி விதிப்பு விகித அடுக்குகளை அதிகரித்தல் ஆகியன சந்தை நிபுணர்கள் மற்றும் அறிவாளிகளிடம் பாராட்டுதலைப் பெறுவதோடு நேரடி வரி வருவாய் மீதான லேஃப்பெர் வளைவு விளைவு (வரி விதிப்பு விகிதங்களுக்கும் அரசு வருவாய்க்குமான உறவைக் குறிக்கும் பொருளாதார கருத்தாக்கம்) சாதகமானதாக இருக்கும். வரிவிதிப்பு விகிதங்கள் குறைக்கப்பட்டாலும்கூட இந்த சாதகமான அம்சம் கிடைக்கும்.

ஆனால் 2016–17 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அதனளவில் சிறப்பான தன்மைகள் இல்லாத சாதாரண ஒரு நடைமுறையாகவே அமைந்து விட்டது. நீண்டகாலமாக எதிர்பார்க்கும் வரிவிதிப்பு சீர்திருத்தங்களை இது வெளிப்படையாக அறிவித்துள்ளது. வரும் ஆண்டுகளில் வரி விலக்குகளை நிறுத்திக் கொள்ளும்போது வரி விதிப்பைக் குறைப்பதை நோக்கிய கூடுதல் சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



### வரி செலுத்தும் தனிநபர்களுக்கான நிவாரணம்

குறைந்த அளவில் வரிசெலுத்துபவர்களுக்கு இந்த பட்ஜெட்டில் மார்ஜினல் நிவாரணம் அளிக்கப்பட்டு உள்ளது. வீட்டு வாடகைப்படி பெறாமல் அதே சமயம் வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்கு கிடைக்கும் வீட்டு வாடகைப்படி 2,000 ரூபாயாக மட்டுமே இருந்தது. இது, ஆண்டு வருமானம் ரூ 5 லட்சத்திற்கு மிகாமல் இருக்கும் குடிமக்களுக்கு ஒரு மாதத்திற்கான வீட்டு வாடகைப்படி ரூ5,000 என உயர்த்தப்பட்டுள்ளது.

இதே போன்று முதல்முறையாக 2016–17 நிதியாண்டில் வீடு வாங்குபவர்களுக்கு

**ஜயந்த ராய் சௌத்ரி,** முதுநிலை ஆசிரியர் (வணிகம்), த டெலிகிராஃப்.

வீட்டுக் கடன் மீதான வட்டியை செலுத்திய தொகையில் ஆண்டுக்கு ரூ.50,000 வரிக்காகக் கணக்கிடப்படும் வருவாயில் இருந்து கூடு தலாக கழித்துக் கொள்ளப்படும். வீட்டுமனை வாங்கி விற்கும் தொழில் மந்தமாக இருக்கும் இந்தக் காலகட்டத்தில் இந்தச் சலுகை புதியதாக வீடு வாங்குபவர்களுக்கு உதவி கரமாக இருப்பதோடு ரியல் எஸ்டேட் தொழிலுக்கும் உதவிகரமாக இருக்கும். இந்தச் சலுகைக்கான நிபந்தனைகள் என்பது வீட்டின் விலை ரூ50 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் வீட்டை வாங்குவதற்காகப் பெறப்பட்ட கடன் தொகை ரூ. 35 லட்சத்திற்கு அதிகமாகாமல் இருக்க வேண்டும் என்பவை ஆகும்.

வட்டித் தொகையை வருவாயில் இருந்து கழித்துக் கொள்ளும் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ள ஒருவர் தான் குடி யிருக்கப் போகும் வீட்டைக் கட்டி முடிக்க அல்லது ஆக்கிரமிப்பு செய்து கொள்வதற்கான காலகட்டம் தற்போது உள்ள 3 ஆண்டுகள் என்ற வரம்பில் இருந்து 5 ஆண்டுகள் என அதிகரிக்கப்பட்டுள்ளது.

### கோடீஸ்வரர்களுக்கான வரி விதிப்பு

இந்த ஆண்டிற்கான பட்ஜெட்டில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதிப்பவர்களுக்கான சர்சார்ஜ் 12 சதவிகிதத்தில் இருந்து 15 சத விகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. வரிவிதிப் பில் ஒரே சமநிலையைப் பெருமளவில் ஏற் படுத்தும் ஒரு முயற்சியாக இது உள்ளது. “சூப்பர்பணக்காரர்களுக்கான வரி” எனச் சொல்லப்படும் இந்த சர்சார்ஜ் அதிகரிப்பு சர்வதேச நாடுகளில் உள்ள நடவடிக்கை களுக்கு ஏற்ப எடுக்கப்பட்டு உள்ளது. தனது சக மத்தியதர மக்களை சூறையாடும் வரிவிதிப்பில் இருந்து தாங்கள் தப்பித்துக் கொள்ள இத்தகைய பணக்காரர்கள் வரி ஏய்ப்பு முறைகளைக் கையாள்கின்றனர். இவர்களைக் குறிவைத்துதான் இந்த சர்சார்ஜ் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் பொருளாதார மந்த நிலைமை இருக்கும் சூழலில் வரி விதிப்பதற்கான புதிய பிரிவாக அரசு இதனைச் செயல்படுத்த முடியும். பணக்காரர்களுக்கு எதிரானதாகப் பார்க்கப் படும் மற்றொரு நடவடிக்கையை ஏழைகளுக்கு சாதகமானது என்றும் கூறிவிட முடியாது. ஆண்டுக்கு ரூ. 10 லட்சத்திற்கும் அதிகமாக ஈவுத்தொகை ஈட்டும் பிரிக்கப்படாத இந்து குடும்பங்கள், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பெறும் மொத்த ஈவுத்தொகையில் 10 சத விகித தொகைக்கு வரி விதிக்கும் முடிவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தியாவில் கார்களின் மீது உள்ள கவர்ச்சி மற்றும் ஈர்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையும் இதேவிதமாகவே எடுக்கப்பட்டுள்ளது. பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் விற்கப்படும் சொகுசு கார்களை வாங்கும் போது வாங்கும் விலையில் 1% வரியாக கட்ட வேண்டும். இதே போன்று ஒரே நேரத்தில் ரூ. 2 லட்சத்திற்கு அதிகமாகப் பொருளை வாங்கும் போதும் அல்லது சேவையைப் பெறும்போதும் இதே போன்று வரி கட்ட வேண்டும். ஆனால் பல நிதிசார் அறிஞர்கள் ரூ. 10 லட்சம் முதல் ரூ. 15 லட்சம் வரையான கார்களை தற்போது சொகுசு கார்கள் என வகைப்படுத்த முடியாது என்று கூறுகிறார்கள். ஆனால் ஒரு நாளைக்கு இரு வேளை உணவுக்கே வழியில்லாத மக்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும் நம் நாட்டில் ரூ. 10 லட்சத்துக்கு அதிகமான விலையுள்ள கார்களை வாங்குவதும் ஒரே சமயத்தில் ஒரு பொருளை ரூ. 2 லட்சம் கொடுத்து வாங்குவதும் விசேஷமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைதான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

### கருப்பு பண வரி

கருப்புப் பணத்தை பொருளாதார நீரோட்டத்தில் இணைப்போம் என்ற அரசியல் வாக்குறுதியை தற்போதைய அரசு தந்திருந்தது. அதற்கேற்ப உள்நாட்டில் உள்ள

"கருப்பு பணத்தை" வெளியில் கொண்டுவர "வருமான அறிவிப்பு திட்டம் 2016" அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. வரி செலுத்துபவர் கள் இதுவரை வெளியில் சொல்லாத வரு மானத்தை அறிவிப்பதற்காக இந்த ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தகை யவர்கள் கணக்கில் காட்டாத வருமானத்தைச் சொல்லிவிட்டு 30% வரி, 7.5% சர்சார்ஜ் மற்றும் 7.5% தண்டம் செலுத்த வேண்டும். அதாவது வெளியில் சொல்லாத தொகைக்கு மொத்தமாக 45% வரி கட்ட வேண்டும்.

வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்தை வெளிப்படுத்துவதற்காக கடந்த ஆண்டு அறிமுகப்படுத்திய திட்டம் போன்றே இந்த ஆண்டு உள்நாட்டிற்காக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

### ஊழியர் வருங்கால வைப்புநிதி

ஏப்ரல் 1, 2016க்குப் பிறகு முதலீட்டாளர்கள் தங்களது வருங்கால வைப்பு நிதியில் சேமித்த தொகையை திரும்பப் பெறும்போது அதில் பகுதியளவு தொகைக்கு வரிவிதிக்க இருப்பதாக நிதி அமைச்சகம் தெரிவித்து உள்ளது. நமது நாட்டின் மிகப்பெரிய சேமிப்பு நிதியமாக இந்த வருங்கால வைப்புநிதி உள்ளது. தற்போது ரூ.6.5லட்சம் கோடி இதன் வைப்புநிதியாக உள்ளது. ஊழியர் வருங்கால வைப்புநிதியில் இருந்து 2016–17ஆம் நிதியாண்டில் இருந்து திரும்பப் பெறப்படும் 60% தொகைக்கு வரி விதிக்கப்படும். ஆனால் இந்தத் திரும்பப் பெறும் பணம் ஓய்வூதியம் கிடைக்கும் வகை யிலான ஏதாவது ஒரு சேமிப்புத் திட்டத்தில் மறுமுதலீடு செய்யப்படுமானால் வரி விதிக்கப் படமாட்டாது. வருங்கால வைப்புநிதியில் ஏப்ரல் 1, 2016க்கு முன்பு சேர்ந்த பங்களிப்பு தொகை மற்றும் வட்டித் தொகையைத் திரும்பப் பெறும் போது வரி விதிக்கப்பட மாட்டாது.

இந்த அறிவிப்பில் நிதி அமைச்சகம் பிறகு திருத்தம் செய்து வெளியிட்டு உள்ளது. வருங்கால வைப்புநிதியில் போடப்படும் முதலீட்டுத் தொகை திரும்பப் பெறப்பட்டால் அதற்கு வரி கிடையாது. ஆனால் வட்டித் தொகைக்கு வரி உண்டு என விளக்கம் அளிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து இன் றைய தேதியில் நிதி அமைச்சகம் உள்ள நார்த் பிளாக்கில் விவாதம் நடந்து கொண்டே இருக்கிறது. ஏனெனில் இந்த அறிவிப்புக்கு எதிராக மாதச் சம்பளம் பெறும் தனிநபர்களும் ஊழியர் சங்கங்களும் மனுக்கள் அளித் துள்ளன. பல்வேறு ஓய்வூதிய நிதியங்களுக்கு இடையில் வரிவிதிப்பில் சமநிலையை ஏற் படுத்தவும் பணத்தை அவ்வப்போது எடுப் பதைவிட சேமிக்கவே செய்ய வேண்டும் என மக்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை எந்தத் திசையில் செல்லும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அரசு ஒரு விஷயத்தில் தெளிவாக இருக் கிறது. தொழிலாளர் ஈட்டுறுதி திட்டம் என்பது ஒரு மாதத்திற்கு ரூ. 15,000 வரை யான ஊதியம் பெறுபவர்களுக்காக சட்ட ரீதியாக தொடங்கப்பட்ட திட்டமாகும். அத்தகையவர்கள் தங்களது வைப்புநிதியில் இருந்து தொகையைத் திரும்பப் பெறும் போது வரி விதிக்கப்படாது என அரசு தெரி வித்து உள்ளது. இன்றைய தேதியில் தொழி லாளர் ஈட்டுறுதி கழகத்தில் சுமார் 3.7 கோடி பேர் பங்களிப்பு செய்து வருகிறார்கள். இதில் ரூ.15,000 மாத வருமானம் என்ற வகைப்பாட்டின் கீழ் சுமார் 3 கோடி பேர் இருக்கிறார்கள். இந்தப் பிரிவு ஊழியர்களுக்கு புதிய அறிவிப்பால் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாது.

### நிறுவன வரிவிதிப்பு கணக்கீடுகள்

சர்வதேச நடைமுறை விதிகளுக்கு ஏற்ற வாறு நிறுவனங்களுக்கான வரிவிதிப்பு விகிதங்களை எளிமையாக்குவோம் என்ற உறுதிமொழியைச் செயல்படுத்தும் வகையில் 2016–17ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில்

நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. சிறிய நிறுவனங்களுக்கான ஹெட்லைன் கார்ப் பரேட் வரிவிதிப்பு விகிதங்கள் முதல்கட்ட மாகக் குறைக்கப்பட்டுள்ளன.

2014–15ஆம் நிதியாண்டில் ஆண்டுத் தொழில்தொகை ரூ5 கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்கு 29% ஹெட்லைட் வரி விகிதம் முன்மொழியப்பட்டு உள்ளது. புதிய ஸ்டார்ட்அப்களை ஊக்குவிப்பதற்காக புதிய நிறுவனங்களுக்கு 25சதவிகித வரிவிதிப்பு விகிதமும் முன்மொழியப்பட்டு உள்ளது.

ஏப்ரல் 2016 முதல் 2019வரை தொடங்கப் படும் ஸ்டார்ட்அப்கள் முதலீட்டின் மீது வரிவிலக்கு ஏதும் பெறாமல் இருந்தால் மற்றும் எந்தவிதமான நிதி பாதுகாப்புத் திட்டத்திலும் இடம் பெறாமல் இருந்தால் அத்தகைய ஸ்டார்ட் அப்களுக்கு மூன்றாண்டுகளுக்கு வரிவிதிப்பு விலக்கு அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தனிநபர்கள் மற்றும் கூட்டுக் குடும்பமாக வாழும் இந்துக் குடும்பங்களுக்கு ஸ்டார்ட் அப் நிறுவனம் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கீழ்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. குடியிருப்பு வீட்டுச் சொத்தை மாற்றித் தருவதில் இருந்து கிடைக் கும் நீண்டகால மூலதன லாபங்கள் மீது வரிவிதிப்பதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய மூலதன லாபங்கள் ஸ்டார்ட்அப் நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டு இருக்க வேண்டும். மேலும் அத் தகைய நிறுவனத்தின் பங்குகளில் 50%க்கும் கூடுதலான பங்குகளை தனிநபர் அல்லது இந்து கூட்டுக்குடும்பம் வைத்திருக்க வேண் டும். இந்தப் புதிய நிறுவனம் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையை புதிய சொத்துக்களை வாங்குவதற்குப் பயன்படுத்திக் கொள்ளும்.

### வரி விலக்குகளைப் படிப்படியாக நிறுத்திக் கொள்ளுதல்

வரிவிதிப்பு முறையை சீரமைத்தலை அறிமுகப்படுத்தும் அதே நேரத்தில் படிப் படியாக வரி விலக்குகளை நிறுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளும் சேர்த்தே அறிமுகப்படுத் தப்படும் என அரசு ஏற்கனவே எச்சரித்து இருந்தது. இதனால் புதியதாக வரி செலுத்த முனைபவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. ஆனால் இதுவே கணக்கு தனிக்கையாளர்கள் தங்களது வாடிக்கையாளர்களுக்கு வரி ஏய்ப்பு உத்திகளைக் கண்டறிந்து சொல்ல வேண்டிய தேவையையும் ஏற்படுத்தி உள்ளது. வரிவிலக்கைத் திரும்பப் பெறுதல் குறித்த திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு தற்போது இடத்தின் அடிப் படையிலும் முதலீட்டின் அடிப்படையிலும் பல்வேறு துறைகளுக்கு வரிவிதிப்பல்லாத ஆண்டுகளை வழங்கி வருகிறது. மின்சார உற்பத்தி, விநியோகம், மின்மாற்றம், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், மற்றும் தொலை தொடர்பியில் போன்ற துறைகளுக்கும் அதேபோன்று வடகிழக்கு பகுதியில் அமைக்கப்படும் உற்பத்திப் பிரிவுகளுக்கும் ஜம்முகாஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் போன்ற சிறப்புப் பிரிவு மாநிலங்களுக்கும் இத்தகைய வரிவிதிப்பில்லாத ஆண்டுகள் தரப்படுகின்றன.

இதன் அடிப்படை கருத்து என்னவென்றால் வழக்குகளைக் குறைப்பதும் வரிவிதிப்பு முறையியலை எளிமைப்படுத்துவதுமே ஆகும். தற்போது, பல்வேறு சலுகை மற்றும் விலக்குகள் மூலமாக உண்மையாகச் செலுத்தும் வரி என்பது 23% என்ற நிலையில்தான் இருக்கிறது. ஆனால் சட்டரீதியாகச் செலுத்த வேண்டிய வரியோ அதிகமாக அதாவது 30–33% என்ற நிலையில் உள்ளது. இத்தகைய வரிவிலக்குகள் மூலமாக இன்று அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு ரூ62,000 கோடியாக உள்ளது.

### அயல்நாட்டில் உள்ளவர்களுக்கான மேட் (MAT)

அயல்நாட்டுக்கான வரிவிலக்கு பெற விண்ணப்பிக்கும் அயல்நாட்டு நிறுவனங்கள் அல்லது இந்தியாவில் இல்லாமலேயே மூலதன லாபம் ஈட்டும் அயல்நாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மீதான குறைந்தபட்ச மாற்று வரிவிதிப்பு முறை (MAT) முரண்பாடாக உள்ளது என்று விவாதிக்கப்பட்டு வருகின்றது. இவற்றுக்கான வரிவிலக்கை நிறுத்திக் கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2016–17 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் மேட் ஷரத்துக்களின் கீழ் அயல்நாட்டு நிறுவனம் வரிவிலக்கு பெறுவதை பின்தேதியிட்டு அதாவது ஏப்ரல் 1, 2001 முதல் விலக்கிக் கொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்தியாவுடன் ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்ளாத நாட்டில் வசிப்பவரின் நிறுவனம் அல்லது இந்தியச் சட்டத்தின் கீழ் தனியார் பங்கு முதலீட்டாளராக இல்லாதவரின் நிறுவனங்கள் இந்த அறிவிப்பின் கீழ் வருகின்றன.

### கூகுள் வரி

இங்கிலாந்தில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "கூகுள் வரி" என்பது போலவே 2016–17 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் புதியதாக "சரிசமான தீர்வை" சேர்க்கப்பட்டுள்ளது ஒரு ஆச்சரியமான விஷயம்தான். இந்தியாவில் வசிப்பவர் ஆன்லைனில் வெளிநாட்டு நிறுவனங்களுக்குப் பணம் செலுத்தினால் அதன் மீது 6 சதவிகித வரி செலுத்தியாக வேண்டும். ஆன்லைன் விளம்பரம் போன்ற சேவைகளுக்கு இகாமர்ஸ் அமைப்புகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட அம்சங்கள் இந்த வரிவிதிப்பின் கீழ் வரும்.

### தண்டனை

வருமானத்தைக் குறைத்துக் காட்டுபவர்களுக்குத் தண்டனையாக தண்டம் விதிக்கும் புதிய பிரிவும் ஆச்சரியப்படத்தக்க வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 1, 2016 முதல் வருவாயைக் குறைத்துக் காட்டுபவர்களுக்கு செலுத்த வேண்டிய வரியில் 50% வரை அபராதமாக விதிக்கப்படும். தவறான தகவல்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு 200% அபராதம் விதிக்கப்படும். தற்போது அபராதம் விதிப்பது என்பது வருமான வரி அதிகாரிகளின் முடிவுக்கு உட்பட்டதாகும். வருவாயை மறைத்தல் அல்லது குறைத்துக் காட்டுதலுக்கு இவர்கள் 100% முதல் 300% வரை அபராதம் விதிக்கிறார்கள்.

### மாநிலங்களின் வருவாய்

நிதிசார் கூட்டாட்சியை வலுப்படுத்தும் விதமாக, மாநில அரசுகளுக்கு மாற்றித் தரப்படும் மொத்த நிதியானது 2015–16ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்போடு ஒப்பிட 2016–17 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மதிப்பீட்டில் 12% அளவுக்கு அதிகரிக்கப்பட உள்ளது. ஆனால் அதேசமயம், மாநிலங்களோடு பகிர்ந்து கொள்ளாத வகையில் இருக்கின்ற தீர்வைகளை விதிப்பது அதிகரித்து வரும் போக்கும் இருக்கிறது. மொத்த வருவாயில் சிறிதளவு சதவிகித தொகையாவது மாநிலங்களுக்கு தரப்படலாம்.

சேவைகள் மீதான கிருஷி கல்யாண் தீர்வை என்ற புதிய திட்டம் ரூ. 5,000 கோடியை ஈட்டித் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த வருவாய் முழுவதும் மத்திய அரசுக்கே செல்லும். அதே போன்று கார்கள் மீதான உள்கட்டமைப்பு தீர்வையானது ரூ. 3,000 கோடி அளவிற்கு வருவாயை ஈட்டித் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகையும் மத்திய அரசுக்கே செல்லும். 2016–17 ஆம் ஆண்டில் இத்தகைய தீர்வைகளின் மொத்த வருவாய் ரூ. 1.9 லட்சம் கோடியாகும். அதாவது அனைத்து வகையான மத்திய வரிகளும் திரட்டப்பட்டால் அந்த மொத்தத் தொகையில் இந்தத் தீர்வைகளின் மதிப்பு 12 சதவிகிதமாக இது இருக்கும். இத்தகைய வரிகளில் மத்திய அரசின் சொந்த பங்கில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதியாக இந்தத் தீர்வைகளின் மதிப்பு இருக்கும். •

# பயணிகளின் வசதிகளை மேம்படுத்த வகை செய்யும் இரயில்வே பட்ஜெட்

**– கே.என். ஸ்ரீனிவாசன்**

*2016–17ம் ஆண்டிற்கான இரயில்வே பட்ஜெட் எளியவர்களுக்கு கௌரவத்தையும் மகளிருக்கு கண்ணியத்தையும், இளைஞர் களுக்கு ஆர்வத்தையும், நடுத்தர மக்களுக்கு மகிழ்ச்சியையும் தர முனைந்துள்ளது. எதிர் காலத்துக்கு நம்பிக்கையூட்டும் அணுகுமுறையை இந்த பட்ஜெட் அளித்துள்ளது.*

*– பிரதமர் திரு. நரேந்திர மோடி*

பயணியர் கட்டணத்தில் உயர்வு இல்லாமை, கூடுதல் படுக்கை வசதி, மூத்த குடிமக்களுக் கும், மகளிருக்கும் கீழ்தள படுக்கை ஒதுக்கிடு அதிகரிப்பு, இரயில்களின் நேரந்தவறாமையை மேம்படுத்தும் நடவடிக்கைகள், கூடுதல் இரயில் நிலையங்களில் *Wi-Fi* வசதி, முதியோருக்கும், மாற்றுத்திறனாளிக்கும் "சாரதி சேவை விரிவாக்கம், மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த இரயில் நிலையங்கள், குறுஞ்செய்தி சேவையின் வாயிலாக, இரயில் பெட்டி கள் தூய்மைப்படுத்திக் கொள்ளும் வசதி, கணினி பயன்பாட்டை அதிகரித்தல், அர் பணிக்கப்பட்ட சரக்கு இரயில் பாதை, இரயில் வேயின் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவை வரும் நிதி ஆண்டிற்கான பட்ஜெட்டின் சில சிறப்பு அம்சங்கள் ஆகும். இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து இரயில்வே பட்ஜெட் தாக்கல் செய்த இத்துறைக்கான அமைச்சர், திரு. சுரேஷ் பிரபு புதிய வழித்தடங்கள், இரயில் இணைப்புகள் போன்ற அறிவிப்புகளை வெளியிடாமல், தூய்மை, பயணியர்கள் வசதி மேம்பாடு, தொழில்நுட்ப விரிவாக்கம் போன்றவற்றில் கவனம் செலுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பிரதமர் குறிப்பிட்டி ருப்பது போல் இந்தக் கொள்கை மாற்றம் ஓர் அடிப்படை மாற்றாக அமைந்துள்ளது.

**வசதிகள் மேம்பாடு:**

பயணம் இனிமையாகவும், இடர்பாடுகள் இல்லாததாகவும் அமைய இரயில்வேத் துறை செயல்படுத்தத் திட்டமிட்டுள்ள பணிகளை அமைச்சர் தமது பட்ஜெட்டில் பட்டியல் இட்டுள்ளார். அவற்றில் சில முக்கியக் கூறு களை இப்பொழுது காணலாம்.

இரயில்பயணம் மேலும் சௌகரியமாக இருக்க பயணிகளுக்கான வசதிகள் விரிவுபடுத்தப்படவுள்ளன. இரயில்களில் கூடுதலாக 65 ஆயிரம் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படும். 2500 நீர் வழங்கும் இயந்திரங்கள் அமைக்கப்படவுள்ளன. மூத்த குடிமக்களுக்கும், மகளிருக்கும் கீழ்தளபடுக்கை வசதி கிடைக்கும் வகையில், கீழ்தள படுக்கை ஒதுக்கீடு அதிகரிக்கப்படும். இதனால் வரும் ஆண்டில் இப்பிரிவினருக்கு, ஒவ்வொரு இரயிலிலும் 120 கீழ்தள படுக்கை வசதி இருக்கும். கொங்கன் இரயில்வேயில் இப்பொழுது நடைமுறையில் உள்ள "சாரதி சேவை" மூத்த குடிமக்களுக்கும், மாற்றுத்திறனாளிக்கும் உதவும் வகையில் விரிவுபடுத்தப்படும். தற்போதுள்ள அழைத்துச் செல்லும் மற்றும் கொண்டுவிடும் வசதி, சக்கர நாற்காலி சேவை ஆகியவை தவிர, கட்டணம் செலுத்தி பயன்பெறும் அடிப்படையில், மின்கலங்களால் இயங் கும் நான்குசக்கர வாகனங்கள், சுமை தூக்குவோர் சேவை போன்றவை வலுப் படுத்தப்படும். மறுமேம்பாட்டின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள இரயில் நிலையங்களில், மாற்றுத் திறனாளிக்கு உகந்த வகையில் வசதிகள் ஏற்படுத்தப்படும். அனைத்துத் தொழில்நுட்ப இரயில் நிறுத்த இடங்களை பயணிகளின் வசதிக்கு

---

**கே.என். சீனிவாசன்,** இயக்குநர் (ஓய்வு), கள விளம்பரத்துறை, திருவனந்தபுரம்.

ஏற்ப வர்த்தக நிறுத்தங்களாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.இப்பொழுது நடைமுறையில் உள்ள 12மணிநேர முன்பதிவு ஓய்வறைத் திட்டத்திற்குப் பதிலாக, மணிக் கணக்கு அடிப்படையில் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.இரயில் களில் குழந்தைகளுக்கான உணவுப் பண்ட கங்கள் துரிதமாகக் கிடைக்க வகை செய்யப் படும். குழந்தைகளுக்கான உணவு சூடானபால், வெந்நீர் போன்றவை இரயில் நிலையங்களில் கிடைப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப் படும். இளஞ்சிறார்களின் உடைகளை மாற்றும் வசதியும்ஏற்படுத்தப்படும்.பயணச்சீட்டுக்களை முன்பதிவு செய்யும்பொழுது காப்பீட்டுத் திட்டத்தை விருப்ப அடிப்படையில் வழங்கு வது இரயில்வே துறை காப்பீட்டு நிறுவனங் களுடன் கலந்தாலோசித்து வருகிறது மாற்றுத் திறனாளிகள். சக்ர நாற்காலி வசதியை ஆன்லைன் மூலம் பதிவு செய்தல், "பிரெ யில்" வசதி கொண்ட இரயில் பெட்டிகள் அறிமுகம் செய்தல் ஆகியவையும், நடை முறைப்படுத்தபடவுள்ளன.

### தூய்மைப் பணி

இரயில் நிலையங்களிலும், இரயில் பெட்டி களிலும் தூய்மையைப் பராமரிக்க, இத்துறை தொடர்ந்து பலமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் பயணிகள் குறுஞ்செய்தி சேவைகளின் மூலம் தங்களது பெட்டி, அல்லது கழிவறை சுத்தம் செய்யும் சேவையை கோரிப் பெறும் வசதி அகில இந்திய அளவில் அறிமுகப்படுத்தப்படுகிறது. வரும் நிதியாண்டில், 30ஆயிரம் உயிரிகழிவறைகளை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இரயில் நிலையங்கள், நிலை யங்களை இணைக்கும் சாலைகள், அப்பகுதி களில் உள்ள குடியிருப்புக்கள், போன்ற பகுதிகளில் தூய்மையைப் பராமரிக்க உதவும் வகையில் விழிப்புணர்வு பிரசார இயக்கத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தொழில் நுட்ப மேம்பாடு

இந்திய இரயில்வே அமைப்பில் கைபேசி செயலியுடன் இணைந்த 1780 தானியங்கி டிக்கட் வழங்கும் இயந்திரங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்பதிவு செய்யாத பயணச்சீட்டுகளையும் முன்பதிவுடன் கூடிய பயணச்சீட்டுகளையும் ரொக்கம் செலுத்தாமல் "கோ இந்தியா" அட்டைகளின் வாயிலாக பெறும் வசதி ஏற்படுத்தப்படும். கணினியை ஒரே சமயத்தில் பயன்படுத்துவோர் எண் ணிக்கையை 40 ஆயிரத்திலிருந்து 1 லட்சத்து 20 ஆயிரமாக அதிகரிப்பதன் மூலம் ஈ சேவை மூலம் டிக்கெட் வழங்கும் திறன் நிமிடத்திற்கு 2000 டிக்கெட்டிலிருந்து 7200 ஆக அதிகரிக்கப்படும். மேலும் 400 இரயில் நிலயங்களில் 'வைபை' வசதி அமைக்கப்படும். கையில் எடுத்துச்செல்லும் இயந்திரங்களின் வாயிலாக, பயணச்சீட்டு வழங்குதல், வெளிநாட்டு டெபிட்/ கிரடிட்" அட்டைகளின் மூலம் "ஈ" டிக்கெட் வழங்கும் வசதி எண் குறியீட்டு கொண்ட டிக்கட் அறிமுகம், காத்திருக்கும் பட்டியலில் உள்ள பயணிகளுக்கு குறிப்பிட்ட இரயில்களில் இடவசதியை ஏற்படுத்துவதற்கான 'விகல்ப்' திட்டம் செய்தியாளர்களுக்கான சலுகைக் கட்டண டிக்கட்களை மின்னணு முறையில் பிரிவு செய்யும் வசதி 139 என்ற உதவித் தொலை பேசி எண்ணின் வாயிலாக, டிக்கெட்டை ரத்து செய்தல் வசதி. ஆகியவையும் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.அனைத்துக் கொள்முதல் பணிகளும், மின்னணு மேடைக்கு மாற்றப்படும் வரும் நிதி ஆண்டிலேயே எரி சக்தித் துறையில் ஆண்டொன்றுக்கு ரூ.3000 கோடி மிச்சப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

### பயணிகளின் பாதுகாப்பு

மகளிருக்குரிய முன்பதிவு இடங்கள் பெட்டிகளின் மையப்பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.லெவல் கிராஸிங்குகளில் விபத்துகளைக் குறைப்பதற்காக, ஆளில்லாத இரயில் பாதைக் கடப்பு சாலை மையங்கள் அகற்றிவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பணியாளர்கள் உள்ள 350 மையங்களை மூடி விடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நடப்பாண்டில் 820 இரயில் மேம்பாலங்களும்/

கீழ்பாலங்களும் கட்டி முடிக்கப்படும். மேலும் *1350* இரயில் பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பயணிகளின் பாதுகாப்பை மேம் படுத்தும் வகையில் கூடுதலான தொலைபேசி வசதியும், ‘சிசிடிவி’ அமைப்பும் ஏற்படுத்தப்படும்.

### இரயில்வேயின் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள்

கட்டணம் தவிர்த்த மாற்று வழிகளில் இரயில்வேயின் வருவாயை அதிகரிக்க திட்ட மிடப்பட்டுள்ளது. இப்பொழுது இத்துறைக்கு கட்டணம் தவிர்த்த மாற்று வழிகளில் பெரும் வருவாய் *5* சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது. இதை அடுத்த *5* ஆண்டுகளில் உலக சராசரி அளவான *10* சதவீத்திற்கு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.இந்த இலக்கை எட்ட கீழ்கண்ட முன் முயற்சிகளைச் செயல்படுத்த இரயில்வே அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

### *1)* இரயில் நிலைய மேம்பாடு

இத்துறைக்குச் சொந்தமான காலியான நிலங்கள், மற்றும் கட்டிடங்களில் உள்ள இடவசதியை வர்த்தக ரீதியில் பயன்படுத்தி வருவாயைப் பெருக்கும் வகையில் இரயில்நிலைய மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### *2)* இருப்புப் பாதையை ஒட்டியுள்ள நிலங் களின் வாயிலாக வருவாய் ஈட்டுதல்

இரயில்பாதையை ஒட்டி அமைந்துள்ள நிலப்பரப்பில் தோட்டக்கலை மற்றும் மரம் வளர்க்கும் பணியை ஊக்குவிக்க இந்த நிலப் பரப்பை குத்தகைக்கு விடத் திட்டமிடப்பட்டுள் ளது. இதனால் எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதுடன் உணவு பாதுகாப்பும் வலுப்படுத்தப்படும். மேலும் ஆக்கிரமிப்பு தவிர்க்கப்படும். இந்த நிலப்பரப்பை சூரிய மின் உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கான சாத்யக் கூறுகள் கண்டறியப்படும்.

### *3)* மென் சொத்துகளைப் பயன்படுத்துதல்:

பயணிகளின் முன்னுரிமை, பயணச்சீட்டு வழங்குதல், பல்வேறு சேவைகள் மற்றும் இயக்கம் ஆகியவை குறித்துத் திட்டமிடப்படும். தகவல்களின் அடிப்படையில் வருவாய் காண வழி காணப்படும். இந்திய இரயில் வேயின் உணவு வழங்கல், மற்றும் சுற்றுலாக் கழகத்தின் இணையதளத்தை பெரும் எண் ணிக்கையிலானோர் அணுகுவதால், கணினி வழி வர்த்தகத்திற்கு உள்ள வாய்ப்பு பயன் படுத்தப்படும்.

### *4)* விளம்பரம்

இரயில்வேத்துறைக்குச் சொந்தமான கட் டிட அமைப்புகளை வர்த்தகரீதியில் பயன் படுத்த நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.இரயில் நிலையங்களில் உள்ள வாய்ப்புகள், இரயில் கள், இருப்புப் பாதையை ஒட்டி அமைந் துள்ள நிலப்பரப்பு ஆகியவற்றை வர்த்தக ரீதி யாக பயன்படுத்துவதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

### *5)* சரக்கு வர்த்தகப் பணியை மாற்றி அமைத்தல்:

‘இப்பொழுது நடைமுறையில் உள்ள சரக்குப் போக்குவரத்துக் கொள்கை எளிமைப் படுத்தபடும். வருவாயை அதிகரிக்கும் வகையில் இதன் சேவை விரிவுபடுத்தப்படும். வளர்ச்சி பெற்று வரும் கணினி வழித்துறைகளுக்கு கவனம் செலுத்தப்படும்.

### *6)* உற்பத்தித் துறை மேம்பாடு

உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் திறம்பட செயலாற்றும் வகையில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும், உற்பத்தித் துறைகளை நவீனப்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்படும்.

### சரக்குப் போக்குவரத்து:

இந்திய இரயில்வேயின் வருமானத்திற்குப் பெரும் பங்களிப்பு செய்துவரும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்தும் திட்டம் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப் படையில் தில்லி சென்னையை இணைக்கும் வடக்கு – தெற்குப் பாதை கரக்பூரை மும்பாயுடன் இணைக்கும் கிழக்கு – மேற்குத் தடம், கரக்பூரை விஜயவாடாவுடன்




இணைக்கும் கிழக்குக் கடற்கரைப் பாதை, ஆகிய அர்ப்பணிக்கப்பட்ட வழித்தடங்கள் அமைக்கப்படும். தனியார் பொதுத்துறை கூட்டுமுயற்சி உள்ளிட்ட புதிய முறையிலான நிதிவழங்கல் ஏற்பாட்டின் கீழ் குறிப்பிட்ட காலவரம்பிற்குள் உட்பட்ட பணிகளாக இவை மேற்கொள்ளப்படும். இந்த 3. திட்டங்களும் மிக உயர்ந்த முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும். இந்த 3 வழித்தடங்களுக் கான கட்டிட பொறியியல் பணிகளுக்கான அனைத்து ஒப்பந்தங்களும் இந்த நிதியாண் டின் முடிவிற்குள் வழங்கப்பட்டுவிடும்.

### சென்னையில் தானியங்கி இரயில் வாகன மையம்

இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத் திற்கு கொண்டு செல்லும் போக்குவரத்தில் கணிசமான அளவைக் கைப்பற்றும் நோக்கு டன் இந்தியாவின் முதலாவது தானியங்கி இரயில் வாகன மையம் சென்னையில் அமை கிறது.

இதுபோன்ற மையங்கள் நாட்டின் பிற பகுதிகளிலும் அமைக்கப்படும்.

### மாநில அரசுகளுடன் ஒத்துழைப்பு

சுற்றுலாத் தளங்களுக்கு சுற்றுவட்டப் பாதையில் இரயில்களை இயக்கவும், வருவாயைப் பகிர்ந்து கொள்ளவும் மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்யக் கூறுகள் ஆராயப்படும்.இரயில்வே அருட்காட்சியகங்கள் யுனஸ்கோவின் புரா தன இரயில் அமைப்பு ஆகியவற்றின் வாயி லாக சுற்றுலாவை ஊக்குவிப்பதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

### காலத்திட்டங்கள்

முன்பதிவு இல்லாத அதிவிரைவு அந்த்யோதயா விரைவு இரயில் அறிமுகப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 130 கிலோ மீட்டருக்கு கூடுதலான வேகத்தில் பயணிக்கக்கூடிய "தேஜஸ்" இரயில்கள் இயக்கப்படவுள்ளன. இந்த இரயிலில் பொழுது போக்கு அம்சங்கள் "வைபை" வசதியும் இருக்கும். முக்கிய தடங்களில் முன்பதிவு இல்லாத பயணிகளுக்கு உதவும் வகையில் தீன்தயாள் பெட்டிகள் இணைக்கப்படும். நெரிசல்மிக்க வழித்தடங்களில் பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் 40 சதவீத அளவிற்கு உயர்த்தும் திறன் கொண்ட, குளிர்சாதன வசதி மற்றும் குளிர்சாதன வசதி இல்லாத இரண்டு அடுக்கு இரயில்கள் அறிமுகம் செய்யப்படும். அழகிய புத்துணர்ச்சி ஊட்டக் கூடியவகையில் சிறப்பாக மாற்றி அமைக் கப்பட்ட "ஸ்மார்ட்" இரயில் பெட்டிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இவற்றில் தானியங்கிக் கதவுகள் எண்குறியீடு வாசிப்புக்



கருவிகள், உயிரிவெற்றிடக் கழிவறைகள், நீர் மட்டக் குறியீடுகள், அசதி ஏற்படுத்தாத இட வசதி, விற்பனை இயந்திரங்கள், பொழுது போக்குத்திரைகள் ஒலிபெருக்கி வசதி போன் றவை இடம் பெற்று இருக்கும். பயணச் சேவைகள் பட்டியலிடும் தகவல் பலகைகள், எதிர்வரும் நிறுத்தங்கள் பற்றிய தகவல் உடனுக் குடன் தருவதற்கு ஜி.பி.எஸ் அமைப்பு ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட உள்ளன.

புனிதத்தல யாத்திரை இரயில் நிலையங் களை மேம்படுத்தவும், வசதிகளை அதிகரிக்கவும் தேவையான பணிகள் முன்னுரிமை அடிப்படை யில் செயல்படுத்தப்படும்.திருப்பதி, வேளாங் கன்னி, வாரணாசி, நாகப்பட்டினம், பூரி, மதுரா, செங்கானூர் உள்ளிட்ட 18 நிலையங்களில் இப் பணிகள் மேற்கொள்ளப்படும். முக்கியமான யாத்திரை மையங்களை இணைக்கும் வகை யில் 'ஆஸ்தா' சுற்றுவட்ட இரயில்கள் அறி முகப்படுத்தப்பட உள்ளன.

பண்பலை வானொலி நிலையங்கள் இரயில் களில் பொழுதுபோக்கு வசதியை வழங்க அழைக்கப்படுவார்கள். அனைத்து முன்பதிவு இரயில் பெட்டிகளிலும் அனைத்துப் பிரதேச(*Rail Bandh*) மொழிகளிலும் "இரயில் பந்து" இதழ் வழங்கப்படும் ஜப்பான் நாட்டு உதவியுடன், அகமதாபாத்தில் இருந்து மும்பய் வரை உயர்வேக இரயில்பாதை அமைக்கப் படும். இரயில் இயக்கத்தால் நேரம் தவறா மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் காசியாபாத்திலிருந்து மொஹல் சராய் வரை தணிக்கைத் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**விரும்பப்படும் உள்ளூர் உணவு:**

இந்திய இரயில்வேயின் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாக் கழகம், உணவு வழங்கும் சேவையை நிர்வகிக்கும். கட்டம் கட்டமாக செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாக் கழக மான ஐ.ஆர்.சி.டி.சி.யின் சேவை உணவு தயாரித்தல், மற்றும் விநியோகம் என இரண் டாகப் பிரிக்கப்படும். இரயில்களில் இப் பொழுது நடைமுறையில் உள்ள, கட்டாய உணவு விநியோகத்தை, விருப்ப அடிப் படையில் மாற்றி அமைப்பது குறித்து ஆராயப்பட்டுவருகிறது. உணவு தயாரித்தல் வழங்குதல் சேவையில் சுய உதவிக் குழுக்களை பதிவு செய்யும் பணியை ஐ.ஆர்.சி.டி.சி. தொடங்கியுள்ளது. சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் இக்கழகத்தின் இணை யதளத்தின் மூலம், விரிவாகக் காட்சிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனால் ஊரகப் பொருளாதாரம் மேம்பட வழி ஏற்படும்.

பயணிகளின் வசதிகள் மேம்படுத்துவதின் வாயிலாக, இரயில் பயணம் இனிமையாகவும், விரும்பத்தக்கதாகவும் அமைய நிர்வாகம் செயல்படுத்தவுள்ள சிலமுக்கிய பணிகள் மேற்குறிப்பிட்டுள்ள பத்திகளில் எடுத்துரைக் கப்பட்டுள்ளன. மேலும், இரயில் இயக்கத்தைச் செம்மைபடுத்தவும், வருவாயை அதிகரிக்கவும், இத்துறையில் நவீனப் படுத்துவதற்கும் தேவை யான நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள் ளன. மறுசீரமைப்பு, மறுவடிவமைப்பு, இரயில் வேக்கு புத்துயிர் ஊட்டுதல் ஆகியவற்றின் சவால்களை எதிர்கொள்ள திட்டமிட்டு இருப்பதாக, இத்துறை அமைச்சர் திரு சுரேஷ் பிரபு கூறியுள்ளார். இதற்கான அணுகுமுறை புதிய வருவாய், புதிய நெறிமுறைகள், புதிய அமைப்புகள் ஆகிய மூன்று தூண்களின் மீதானதாக இருக்கும். "வாருங்கள் ஏதாவது புதியதொன்றை உருவாக்குவோம்" என்ற முழக்கத்திற்கு இந்த பட்ஜெட் இயைந்ததாக இருக்கும். •

# சுகாதார பட்ஜெட் 2016

– உர்மி ஏ. கோஸ்சுவாமி

"நல்ல உணவு, சிறந்த கல்வி ஆகியவை வழங்கப் பட்டு இந்திய மக்கள் கவனித்துப் பேணப்படும் வரை எந்தவிதமான அரசியலினாலும் பயன் விளையப்போவதில்லை" சுவாமி விவே கானந்தரின் இந்த வார்த்தைகளை நிதி அமைச்சர் மேற்கோள் காட்டியிருக்கிறார். கல்வியும் சுகாதாரமும் வளர்ச்சிக்கு மைய மானவை என்ற தெளிவான பார்வை 2016 பட்ஜெட்டில் இழையோடுகிறது. இந்தப் புரிதலுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் அமை யாமல் கடந்த பத்து ஆண்டுகளாக பட்ஜெட் ஒதுக்கீடு ஒரே மாதிரியாகவே நீடித்து நிலவி வருகிறது. உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 1.3 விழுக்காடு என்ற அளவை ஒட்டியதாகவே பட்ஜெட் ஒதுக்கீடு இருந்து வருகிறது. மத்திய பட்ஜெட்டில் சுகாதாரத்திற்கு தரப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.25 விழுக்காடாக இருக்கிறது. பொதுமக்களின் சுகாதாரத்திற்கென செல விடப்படும் தொகையை ஒட்டுமொத்த உள் நாட்டு உற்பத்தியில் 2.5 விழுக்காடாக உயர்த்துவது என்ற இலக்கு 2015ஆம் ஆண் டின் தேசிய சுகாதாரக் கொள்கையில் குறிப் பிடப்பட்டிருந்தது. இது நிறைவேற இன்னும் நீண்டகாலம் பிடிக்கும்.

இந்தியாவில் சுகாதாரத்திற்கான ஒதுக்கீடு நமது அண்டை நாடுகளான சீனா, இலங்கை ஆகியவற்றை விடவும் மிகவும் பின்தங்கி இருக் கிறது. சீனாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு வருவாயில் 5.4 விழுக்காடு சுகாதாரத்திற்கென 2013இல் செலவிடப்பட்டுள்ளது. இதில் பொது சுகாதாரத்திற்கு என 3.1 விழுக்காடு செலவிடப்பட்டது. அதே ஆண்டு இந்தியா வில் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 5 விழுக்காடு சுகாதாரத்திற்கு செலவிடப் பட்டது. இதே அளவு தனிநபர் வரு மானத்தைக் கொண்டிருக்கும் மற்ற வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது இது ஒத்த நிலையில் இருக்கிறது. அதே சமயம் பொது சுகாதாரத்திற்கு ஒதுக்கப்படும் தொகை 1.3 விழுக்காட்டை இன்னமும் தாண்டவில்லை.

இந்தப் பிரச்னையை பட்ஜெட் எப்படி அணுகி இருக்கிறது என்பதை அளவிடும் போது நாம் மூன்று பெரிய வினாக்களுக்கு விடை தேட வேண்டி வருகிறது. முதலில், சுகாதார நடவடிக்கைகளில் சரியான பலன்கள் வெளிப்படாமல் போனதற்கான காரணங் களை பட்ஜெட் எந்தவிதத்தில் கையாள முனைந்திருக்கிறது? இரண்டாவது, சுகாதாரச் சேவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை? மூன்றாவதாக, சுகாதார சேவை செய்யும் மருத்துவர்கள், ஆய்வாளர்கள், தொற்று நோய் கட்டுப் பாட்டாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய சுகாதாரச் சேவை உள்கட்டமைப்பு எப்படி இருக்கிறது? ஆகியன இந்த வினாக்கள். இந்தக் கூறுகள் ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவை. பொது சுகாதாரத்தில் இவைகளுக்கு முக்கியமான தொடர்பு உள்ளது.

சுகாதாரத்தை மேம்படுத்தும் சேவைகளை வழங்குவது வறுமையைக் குறைக்கும் நடவடிக் கைகளுக்கும் அவசியமானவை. சுகாதாரச் செலவினத்தில் உள்ள குறைபாடுகள் வறுமை யிலிருந்து மீளவிடாமல் தடுத்து நிலைமையை மோசமாக்கும் ஒன்றாக இருப்பது அவ்வப் போது கண்கூடாகத் தெரிகிறது. சுகாதாரச் சேவை கிடைக்காமல் போவதால் நலிந் திருக்கும் உடல்நலம் மேலும் மோசமாகி விடுகிறது. ஆக்க வளம், பொருளாதார வெளிப்பாடு, வாழ்க்கைத் தர மேம்பாடு ஆகியவற்றில் மிகப்பெரிய பாதிப்புகளை இது உருவாக்கக்கூடும்.

---

**உர்மி ஏ. கோஸ்சுவாமி**, உதவி ஆசிரியர், எக்னாமிக் டைம்ஸ்.

சுகாதாரத்திற்கு அரசு குறைவான பணத்தை செலவிடுவதால் மிகத்தீவிரமான விளைவுகள் ஏற்படும். அதேசமயம், காற்று, நீர் ஆகியவற்றின் தரம், உடல்நலம் காக்கும் முனைப்புகள் ஆகியவற்றிற்கான ஏற்பாடு களுக்கும் அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். இது நோய்கள் சம்ப விப்பதைக் குறைத்து மோசமான சுகாதார நிலைமைகளை மட்டுப்படுத்தும். இதன் காரணமாக, அரசுக்கு சுகாதார செலவீனம் ஏற்படாமல் போய்விடும் என்று கூறமுடியாது என்றாலும் பொது சுகாதாரத்தை சீர் படுத்தும் நடவடிக்கைகளுக்கு முதலீடு என்பது முக்கியமானது. தற்போது போது மான அளவில் இல்லாமல் இருக்கும் பொது சுகாதாரச் சேவை அமைப்பின் மீதான அழுத் தத்தைக் குறைப்பதற்கு இது உதவும். இந்தக் கண்ணோட்டத்தில் தான் 2016 பட்ஜெட் ஒரு முக்கியமான அடியை முன் எடுத்து வைத்துள்ளது. உடல்நலம், மனித வாழ்க்கை மேம்பாடு, ஆக்கவளம், சுகாதாரம் ஆகிய வற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளை பட்ஜெட் வெளிப்படையாக்கி காட்டியுள்ளது.

நிதி அமைச்சரின் உரையில் இந்த இடைத் தொடர்பு வெளிப்பட்டுள்ளது. சமையல் செய்யும் போது விறகை எரிப்பதால் ஏற் படும் புகையினால் உருவாகும் உடல்நலக் கோளாறுகள் பற்றி அவர் குறிப்பிடும்போது, திறந்த நிலையில் அடுப்பெரிப்பது ஒரு மணி நேரத்திற்கு 400 சிகரெட் புகைப்பதற்கு ஒப்பானது என்று தெரிவித்துள்ளார். வறுமைக் கோட்டிற்குக்கீழ் உழலும் 5 கோடி குடும்பங்களுக்கு அந்தக் குடும்பப் பெண்களின் பெயரில் சமையல் எரிவாயு உருளைகள் அடுத்த மூன்று ஆண்டுகளில் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சுகாதாரத்திற்கான நேரடி ஒதுக்கீடு அல்ல என்றாலும் சுகாதாரம் மேம்படுவதற்கு இது உதவும். சிறிய ரக பெட்ரோல், இயற்கை எரிவாயு கார்களுக்கான ஒரு சதவீத கூடுதல் வரியும், டீசல் கார்களுக்கான 2.5 சதவீத வரியும், பெரிய கார்களுக்கான 4 சதவீத வரியும், நகர்ப்புறங்களில் சுற்றுச் சூழல் மாசு குறைவதற்கு உதவும். வீட்டுக்குள்ளானாலும், வெளியிடங்களானாலும் அசுத்தமான காற்று உடல்நலத்தில் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்திவிடும்.

தூய்மை இந்தியா திட்டத்திற்கு அதி கரிக்கப்பட்டிருக்கும் ஒதுக்கீடு இதுபோன்ற இன்னொரு இடையீடாகும். பாதுகாப்பான குடிநீர், உடல்நலம் காக்கும் ஏற்பாடுகள் போன்றவை பொது சுகாதாரத்தோடு நெருங்கிய தொடர்புடையவை. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 46.9 விழுக் காடு வீடுகளில் மட்டுமே கழிப்பறைகள் இருந்தன. 2015–16இல் தூய்மை இந்தியா திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூ.6525 கோடியை விடவும் கூடுதலாக ரூ.9000 கோடி ஒதுக்கீடு சுகாதார மேம்பாட்டிற்கான ஒரு நடவடிக்கையாகும். இது ஒரு நற்செய்தி. ஆனாலும், கழிப்பறைகளைக் கட்டினால் மட்டும் போதாது. அவற்றை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையும், பழக்க வழக்கங்களில் மாற்றங்களும் ஏற்பட வேண்டும். இந்த நிலை ஏற்படுவதற்கு கழிப் பறைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தித் தக்க வகையில் இருந்தாக வேண்டும். நீர் வழங்கலும், பராமரிப்பும் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். கழிப்பறைப் பயன்பாடு அதிகரிக்கும்போது தான் சுகாதாரத்தில் மேம்பாடு கண்கூடாக வெளிப்படும். தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்திற்கான ஒதுகீடு லேசாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2015–16ல் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.4373 கோடி. இப்போது 5000 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் குடி நீரின் தரம், குடிநீர் நீடித்துக் கிடைப்பது போன்றவற்றில் பிரச்னைகள் இருப்பதால் லேசான இந்த நிதி உயர்வு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவாது என்று சில வல்லுநர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். பல மாநிலங்கள் வறட்சியின் பிடியில் இருக்கின்றன. குறை வான ஒதுக்கீடு இந்த நிலைமையை இன்னும் மோசமாக்கும்.

காற்று, நீர் ஆகியவற்றின் தரத்தை மேம் படுத்துவது, உடல் நலப்பாதுகாப்பு நட வடிக்கைகள் இவை மூலம் மட்டுமே நோய்

சம்பவிப்பதைக் குறைத்துவிட முடியாது. மிக அதிகமான அளவில் வறுமை நிலவும் மக்கள் கூட்டத்தில் சுகாதாரச் சேவையை எளிதில் பெறக்கூடிய நிலைமையை உருவாக்குவது மிக முக்கியமானது.

சுகாதாரத்திற்கான அரசின் செலவினம் குறைவாக இருப்பது என்பது மக்கள் தங்கள் வருவாயிலிருந்தும் சேமிப்பிலிருந்தும் 70 முதல் 80 விழுக்காடு அளவிற்கு செலவிட்டு வருகின்றனர் என்பதைக் குறிக்கிறது. மருத்துவ மனையில் ஒருமுறை சேர்ந்து வைத்தியம் செய்துகொள்வதற்கு ஊரகப் பகுதியில் ஆகக் கூடிய சராசரி செலவு ரூ.16956. நகர்ப்புறங்களில் இந்தச் செலவு ரூ.26455. இதில் மருந்திற்கான செலவும், மருந்து அல்லாத பிற செலவுகளும் உள்ளடங்கும். மருத்துவமனையில் சேராமல் புற நோயாளிகளாக இருப்பவர்களில் ஒரு நபருக்கு ஆகும் செலவு ஊரகப்பகுதியில் ரூ.509 ஆகவும், நகர்ப்பகுதியில் ரூ.639 ஆக வும் இருக்கிறது.

பெரும்பாலான மக்கள் தனியார் மருத் துவச் சேவையை நாடவேண்டி வருவதும் சுகாதாரத்துறையில் அரசின் செலவினம் குறைந்திருப்பதைக் காட்டும் அறிகுறியாகும். 2015ஆம் ஆண்டின் NSSO அறிக்கை தனியார் துறைதான் மருத்துவ செயல்பாட்டில் குறிப் பிடத்தகுந்த மிக அதிகப்பங்கினை வகிக்கிறது என்று தெரிவிக்கிறது. வெளி நோயாளி களைப் பொறுத்த மட்டிலும் அரசின் சேவை 11.5 விழுக்காடு மட்டுமே. இத னால் ஏற்படக்கூடிய பொருளாதாரச்சுமை கணிசமானது. அரசு மருத்துவமனைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தனியாரிடம் உள் நோயாளியாக சிகிச்சை பெறுவது 4 மடங்கு செலவாகக்கூடியது. அரசு மருத்துவ மனையில் ரூ.6120 செலவில் உள்நோயாளியாக இருப்பவர் தனியாரிடம் ரூ.25850 செலுத்த வேண்டி இருக்கும்.

கைப்பணத்தை அதிகமாக செலவிட வேண்டி இருப்பதும், மிக அதிகமான செலவில் தனியார் மருத்துவச் சேவையைப் பெற வேண்டி இருப்பதும் ஏழைகளுக்கு மிகுந்த இடப்பாடு அளிக்கக்கூடிய நிலவரமாகும். மோசமான உடல்நலப் பிரச்னைகள் வரும் போது அவர்கள் மேலும் வறுமையை அடைந்துவிடுகின்றனர். ஆபத்தான நோய்கள் ஏழை மக்களின் பொருளாதாரத்தில் கடும் சுமையை ஏற்படுத்துகின்றன. 2016 பட்ஜெட் இதற்கான தீர்வை நாடுகிறது. ஏழைகளுக்கும், பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கும் பொது சுகாதாரக் காப்பீடு வழங்குவதன் மூலம் அவர்களின் தனிப்பட்ட சொந்தச் செலவைக் குறைக்க முடிகிறது. குடும்பம் ஒன்றிற்கு 1 லட்ச ரூபாய்க்கு மருத்துவக்காப்பீட்டை நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். மூத்த குடிமக் களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் காப்பீடு வழங்கப்படும். சுகாதாரக் காப்பீட்டிற் கென பட்ஜெட்டில் ரூ. 1500 கோடி நிதி ஒதுக்கித் தரப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இதற்காகத் தரப்பட்ட நிதி595 கோடி ரூபாய்.

பொது சுகாதார காப்பீடுகள் சிறப்பான தாக இருந்தால் மக்கள் மருத்துவ சேவையை நாடுவது அதிகரிக்கும். அதிலும் குறிப்பாக, ஆபத்தான தருணங்களில் மருத்துவமனை களில் மக்கள் சேர்வது அதிகரிக்கும். ஆயினும், ஏழைகளும், விளிம்புநிலை மக்களும் அதிகமாக இருக்கும் இந்தியா போன்ற தேசத்தில் மேம்படுத்தப்பட்ட, செயலூக்கம் கொண்ட சுகாதார சேவைத் திட்டத்திற்கு மாற்றாக எதுவும் இருக்கமுடியாது. இப்போது பாதகமான சில சமிக்ஞைகள் கிடைத்து வருகின்றன. 2015ஆம் ஆண்டின் NSSO அறிக்கை (71வது சுற்று) அதன் முந்தைய 2004ஆம் ஆண்டின் அறிக்கை (60வது சுற்று) யின் படியான அளவீட்டைக் காட்டிலும் சற்றே அதிகமான, ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த திசைமாற்றம் பொது சுகாதார அமைப்பிற்கு ஆதரவாக தென்படுகிறது என்று கண்டறிந்துள்ளது. அரசின் பொது சுகாதார சேவையைப் பெற்றவர்களின் விழுக்காடு 2004ல் 22 விழுக்காடாக இருந்தது. 2015ல் இது 28.3 விழுக்காடாக அதிகரித்திருக்கிறது. இது NSSO-வின் 71வது சுற்று ஆய்வறிக்கையின் மூலம் தெரியவருகிறது. இந்த அதிகரிப்பு புறக்கணிக்கத்தக்க அளவில் தான் இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை

கணிசமாக அதிகரித்திருப்பதைக் கருத்தில் கொள்ளும்போது இந்த அதிகரிப்பு மிகவும் சொற்பம்தான்.

தேவைப்படும் அளவிற்கு அதிகரிக்காது போனாலும் பொதுசுகாதார செலவினம் அதிகரித்துத்தான் இருக்கிறது. 2015–16 நிதியாண்டின் முதல் எட்டு மாதங்களில் சுகாதாரத்திற்கான அரசின் செலவினம் 9 விழுக்காடு வளர்ச்சியைக் கண்டுள்ளது. 2012–13ல் ரூ. 27884 கோடியாக இருந்த சுகாதார ஒதுக்கீடு 2015–16ல் ரூ. 34957 கோடியாகவும், தற்போதைய பட்ஜெட்டில் இது ரூ.39533 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

ஆனால், மங்கலான இந்த நம்பிக்கை ஒளி திடீரென மேலும் மங்கிவிட்டது. இந்தியாவில் ஆண்டுக்கு 52 லட்சம் பேர் மரணமடைகின்றனர் என்றும், 2021ல் இது 42 விழுக்காடு அதிகரிக்கும் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. இந்தியாவில் ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் பக்கவாதத்தால் உயிரிழக்கிறார். 40 வயதுக்குக் குறைவானவர்களில் ஆறில் ஒருவர் புற்றுநோய், இதய ரத்தக்குழாய் நோய்களால் பலியாகின்றனர். 2016க்கும் 2030க்கும் இடையில் தொற்றுநோய் அல்லாத பிற நோய்களினால் ஏற்படக்கூடிய பொருளாதாரச் சுமை 6.2 டிரில்லியன் டாலர் அளவுக்கு இருக்கும். எனவே, ஒரே திசையை நோக்கிய பெருமளவு பொது சுகாதார ஒதுக்கீடும், அரசின் செலவினமும் தேவைப்படுகிறது என்பதை மறுக்க இயலாது. தனி நபரின் சுகாதாரத்திற்கு அரசு செலவிட்டு வரும் பணத்தின் அடிப்படையில் பார்த்தால் உலக நாடுகளில் இந்தியா 157வது இடத்தில் இருக்கிறது. ஒரு நபருக்கு அரசு செய்யும் சுகாதாரச் செலவு வெறும் 44 டாலர். ஆபத்தான நிலையில் மருத்துவ உதவி தேவைப்படுபவர்களுக்கு சிறப்பான காப்புறுதித் திட்டங்கள் உதவிபுரியும். ஆனால் சிறந்த சுகாதார நிலைமையைக் கொண்டு வருவதற்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அவற்றின் கிளை மையங்கள் ஆகியவை புரட்சிகரமாக மாற்றியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும். இதற்கு பயிற்சி பெற்ற சுகாதாரச் சேவை அலுவலர்களும் மருந்துகளும் இத்தகைய மையங்களில் அதிகமாகத் தேவைப்படுகின்றன.

மருந்துகளைப் பொறுத்தவரை, 2008 முதல் அரசு **ஜன் ஔஷதி** திட்டத்தின் மூலம் மக்களுக்கு மருந்துகள் கிடைக்கும் நிலையை மேம்படுத்த முயற்சி செய்துவருகிறது. ஆயினும், இத்திட்டம் சிறப்பாக செயல்படவில்லை. வெறும் 164 மக்கள் மருந்தகங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் 87 மருந்தகங்கள் மட்டுமே செயல்பட்டுவருகின்றன. 2015–16ல் இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ.16.9 கோடி. இதற்கு இப்போது 35 கோடி ரூபாயை ஒதுக்கித்தந்து 3 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் அமைக்கப்படும் என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் இந்தத் திட்டத்தைப் பீடித்திருக்கும் உண்மையான பிரச்னைகளை அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டும்.

பொது சுகாதார மையங்களின் மோசமான செயல்பாடு ஒரு பெரிய பிரச்னை. முதல் நிலை, இரண்டாம் நிலை சுகாதார மையங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் கூட உண்மை நிலையில் அவை செயல்படாமல் இருக்கின்றன. பணி இடங்கள் நிரப்பப்படுவதில்லை. பயிற்சி பெற்ற சுகாதார ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. சிறப்புத் தகுதி பெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மயக்கமருந்து வல்லுநர்களின் பற்றாக்குறையினால் சுகாதாரச் சேவை கிராமங்களில் எட்டாக்கனியாக இருந்து வருகிறது.

தேசிய ஊரக சுகாதாரத்திட்ட ஆய்வு 2011ஆம் ஆண்டு ஏழு மாநிலங்களில் நடத்தப்பட்டது. உத்தரப்பிரதேசம், மத்தியபிரதேசம், ஜார்கண்ட், ஒடிசா, அசாம், ஜம்முகாஷ்மீர், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவ ஊழியர்களின் பற்றாக்குறை 95 விழுக்காடு வரை இருப்பதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது. அறுவை சிகிச்சை செய்யக்கூடிய மருத்துவர்களின் தேவையில் 83 விழுக்காடு அளவுக்குப் பற்றாக்குறை நிலவி வருவதாக 2015ஆம் ஆண்டின் ஊரக சுகாதாரப் புள்ளி

விவரம் தெரிவிக்கிறது. சிறப்பு மருத்துவர் பணி இடங்களில் 27 விழுக்காடு பணி இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டிருப்பதாகவும் இது தெரிவிக்கிறது. இந்தியாவில் சுகாதாரச் சேவை வலுப்பெற வேண்டுமெனில் திறமையாகவும், செலவு குறைவாகவும் இருக்க வேண்டுமெனில் பொது நிதியில் உருவாக்கப் படும் அமைப்புகள் செம்மையாகச் செயல்பட வேண்டும். இல்லாவிடில், அதிக செலவில்தான் மருத்துவ உதவியைப் பெற வேண்டி வரும். இதைத்தவிர வேறு வழி இருக்காது. இந்தியா போன்ற தேசத்தில் இது சாத்தியமற்றது. மருத்துவக்காப்பீட்டு திட்டங்களைக் கொண்டுவருவது மட்டுமே முழுமையான தீர்வாகிவிடாது. தேசிய சுகாதாரத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ஓரளவுக்குதான் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2015–16ல் தரப்பட்ட ரூ. 19122 கோடி ஒதுக்கீடு தற்போது ரூ. 20037 கோடியாக அதிகரித்துள்ளது. இங்குதான் அரசாங்கம் மிகப்பெரிய அளவில் தனது கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். இதற்கு ஒரு தொடக்கமாக, காலிப்பணி இடங்களை நிரப்புதல், சுகாதார மையங்களில் எல்லா நிலைகளிலும் போதுமான பணியாளர்கள் இருப்பதை உறுதி செய்தல். தேவைப்படும் கட்டுமான வசதிகளை உருவாக்குதல், ஆம்பு லன்சுகள், நடமாடும் மருத்துவமனைகள் ஆகியவற்றை அதிகப்படுத்துதல் போன்றவை செய்யப்படவேண்டும்.

2025ல் 70 விழுக்காடு அளவுக்கும் மேலான மக்கள் வேலைபார்க்கும் வயதுடையவர்களாக இருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் பெருகிக்கொண்டே வரும் மக்கள் தொகை ஆதாயங்களைத் தரக்கூடிய மனித வளமாக மாறப்போகிறது என்று இந்தியத் தலைவர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர். இந்த மனிதவள ஆற்றலை சிறப்பாகப் பெறு வதற்கு சுகாதாரத்திற்கான பொது செலவினம் அதிகரிக்கப்பட வேண்டும். கல்வி, சுகாதாரம், நோய்த்தடுப்பு ஆகியவற்றில் இது அவசிய மாகிறது. 2016 பட்ஜெட் சில முக்கியமான முன்னெடுப்புகளை எடுத்துள்ளது. ஆனாலும் இவற்றிற்கான செலவுகள் அதிகரித்துக் கொண்டே போகக்கூடிய தன்மை கொண் டவை.

மக்கள் தொகை வருவாயைப் பெருக்கித் தரும் இதன் நடுவாந்திர நிலையில் இந்தியா இப்போது இருக்கிறது. இந்த வருவாய்ப் பெருக்கம் மெய்ப்படுவதற்கு சுகாதாரத் திட் டங்களில் வளர்ச்சி தேவைப்படுகிறது. மேம் படுத்தப்பட்ட சுகாதாரமும், அவற்றின் வெளிப்பாடும் அனைவருக்குமான தொடர்ச்சி யான வளர்ச்சிக்கு நிச்சயம் அவசியமாகிறது. உடல் நலத்தின் தரத்தை மேம்படுத்துவது வளர்ச்சியின் முக்கியமான ஒரு குறியீடாகும். பொருளாதார வளர்ச்சி அதிக அளவில் ஏற்படுவதற்கும், அனைவருக்குமான வளம் தொடர்ச்சியாக உருவாகவும் இது உதவும். சுகாதாரம் உடைய மக்கள் திறள் உற்பத்திப் பெருக்கத்தின் அறிகுறி. சுகாதாரத்திற்கும் கல்விக்கும் செலவிடுவது வளங்களை வீண டிப்பதாக கருதப்படும் ஒரு தோற்றம் இருக் கிறது. இதற்கான அழுத்தத்தின் ஒரு பகுதி மருத்துவத்தைத் தனியார் மயமாக்க விரும்பு பவர்களிடமிருந்து வருகிறது. இதில் அரசு பின் வாங்குவது ஒரு பெரிய தவறாகப் போய் முடியும். சுகாதாரத்திற்கு செலவிடுவது வளர்ச்சிக்கான திறவுகோல்.

ரஷ்ய சிந்தனையாளர் அலெக்சாண்டர் ஹெர்சன் 170 ஆண்டுகளுகு முன்பு கேட்டார்; “வளர்ச்சி ஒன்றுதான் குறிக்கோள் என்றால் யாருக்காக நாம் வேலை செய்கிறோம்? யாரோ சிலர் ஏதோ ஒரு நாள் ஆனந்தக் கூத்தாடு வதற்காக இப்போது வாழும் அத்தனை மனிதர்களையும் சுமைதாங்கிகளாகவும், உதவாக்கரைகளாகவும் மாற்றிட நீங்கள் விரும்புகிறீர்களா? முழங்கால் வரை சேற்றில் புதையுண்டபடி விளங்காத செல்வத்தைச் சுமந்து வரும் எதிர்கால முன்னேற்றம் என்று எழுதப்பட்டிருக்கும் ஒரு படகு சுமந்து வரும் விளங்காத செல்வத்தை முழங்கால் சேற்றில் புதைந்தபடி கரைக்கு இழுத்துவரும் அடிமை களாக, துன்பத்தில் உழலும் மாக்களாக மக்களை நீங்கள் சபிக்க நினைக்கிறீர்களா?” ஹெர்சனின் இந்தக் கேள்வி இன்னமும் பொருத்தமுடையதாகவே தொடர்கிறது. ●

# மத்திய பட்ஜெட் வங்கித்துறையை மீட்டெடுக்குமா?

– என்.ஆர். பானுமூர்த்தி & மனிஷ் பிரசாத்

தற்போது இந்தியா எதிர்கொண்டுள்ள இரண்டு இடர்பாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. பொருளாதார ஆய்வறிக்கை. ஒன்று, வங்கித் துறையின் மோசமான நிதி நிலைமை, குறிப்பாக பொதுத்துறை வங்கி களில். இரண்டாவது கார்பரேட் நிறுவனங் களின் நிலைமை. இரண்டு பிரச்சினைகளுக்கும் தொடர்பு உண்டு. 2016–17 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், இந்த இரு பிரச்சினைகளை எதிர்கொள்ளுவதற்கான வழிகள் அறிவிக்கப் படும் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறே, வங்கித்துறையின் புத்துயிர்ப்புக்காகப் பல நடவடிக்கைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில நேரடியான நடவடிக்கைகள்; வேறுசில மறைமுகமான கொள்கைகள் நட வடிக்கைகள். இவற்றைப் பற்றி விவாதிப்பதற்கு முன்பாக, வங்கித்துறையின் பிரச்சினையைப் புரிந்துகொள்வது அவசியம்.

### வங்கித்துறை எதிர்கொண்டுள்ள சிக்கல்

உலகப் பொருளாதார நெருக்கடியை அடுத்து, மற்ற நாடுகளைப் போலவே, நிதித் துறையில் பல தூண்டுவிசை நடவடிக்கைகளை இந்தியாவும் மேற்கொண்டது. பொருளாதாரம் மீண்டெழ அவை உதவினாலும், இந்தியாவின் நிதிப்பற்றாக்குறை மிக அதிகமாகிவிட்டது. நிதிப்பொறுப்புடமை மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்தில் குறிப்பிட்டிருந்த மூன்று சதவீத அளவிற்குள் நிதிப்பற்றாக் குறையை கட்டுக்குள் வைக்கும் நிலையில் 2008–09 ஆம் ஆண்டில் நாம் இருந்தோம். ஆனால், அது இரட்டை இலக்க அளவிற்கு உயர்ந்துவிட்டது. அதன் காரணமாக, நாட் டின் உள்நாட்டு உற்பத்தி குறைந்து, பணவீக்கம் பெருகி, நடப்புக் கணக்குப் பற்றாக்குறையும் அதிகரித்து விட்டது. அதன் காரணமாகப் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக, பல காலமாக வட்டி விகிதம் அதிகரிக்கப் பட்டிருந்தது. இவை எல்லாம் சேர்ந்து நாட்டின் பொருளாதார நிலைமை சீர் குலைந்து, எதிர் கால வளர்ச்சி கேள்விக்குறியானது.

நிதித்துறையின் முக்கிய தூண்களில் ஒன் றான வங்கித்துறை, பொருளாதாரச் சீர் குலை வால் ஆட்டம் கண்டது. இரண்டு விதமாக வங்கித்துறை இன்னலை எதிர்கொண்டது. முதலாவது, நிதிப்பற்றாக்குறையைச் சமாளிக்க அரசாங்கம் வங்கித்துறையில் பெற்ற கடன்கள்; இரண்டாவது, வட்டிவிகிதம் அதிகமானதால், கார்ப்ரேட்களின் லாபம் குறைந்து அதனால் ஏற்பட்ட நெருக்கடி. இதனால் ரிசர்வ் வங்கி விதித்திருந்த மூன்று சதவீதம் என்ற அளவைவிட 4.5 சதவீதம் என்ற அளவிற்கு லீவரேஜ் விகிதம் உயர்ந்துவிட்டது. ஆயினும் பல வங்கிகள் ரிசர்வ் வங்கி விதித்திருந்த வரம்புக்குள்ளாகவே இருந்தது. ரிசர்வ் வங்கி யின் வழிகாட்டி நெறிகளை வங்கிகள் பின் பற்றாததால், அவற்றின் வாராக்கடன்கள் அதிகரித்தன.

உலகப்பொருளாதார நெருக்கடியின் போதும் அதற்குப் பின்னருமான தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகளின் வாரக்கடன் அளவைப் பார்க்கும்போது, ஆரம்பத்தில் இரு பிரிவு வங்கிகளிலும் அது மூன்று சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்துள்ளது. தனியார் வங்கிகளைவிட பொதுத்துறை வங்கிகளில் அது மேலும் 0.01 சதவீதமாவது குறைவாக இருந்திருக்கிறது. நிதிப்பற்றாக்குறை குறைவாக இருந்ததும், அரசின் சேமிப்புகள் அதிகமாக இருந்ததும் அதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால், உலகப் பொருளாதார நெருக்கடிக்குப் பிந்தைய காலகட்டத்தில், பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன்கள் அதிகரிக்க,

---

**என்.ஆர். பானுமூர்த்தி & மனிஷ் பிரசாத்,** புதுதில்லியில் உள்ள பொதுநிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள்.

தனியார் துறை வங்கிகளிலோ அது மூன்று சதவீதத்திற்குள்ளாகவே கட்டுக்குள் இருந்தது. தற்போது பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் அளவு ஆறு சதவீதமாக மதிப்பிடப் பட்டுள்ளது. இது மிகவும் அபாயகரமான நிலையாகும். மேலும் இது, இந்த வங்கிகளின் லாபம் ஈட்டும் திறனைக் குறைத்துவிடும். நீண்ட காலத்திற்குப் பிறகு, 2015 செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான மூன்றாவது காலாண்டில் பதினொரு வங்கிகள் நஷ்டத்தை அடைந்துள்ளன. இத்தகைய எதிர்மறைப் போக்கு முதலீட்டையும், வளர்ச்சியையும் பாதித்து, பொருளாதார மீட்டெடுப்புக்கும் பெரும் தடையாகிவிடும்.

வாராக்கடன்கள், மறு கட்டமைக்கப்பட்ட கடன்கள், தள்ளுபடி செய்யப்பட்ட கடன்கள் ஆகியவற்றிலும் இதே போக்கு நிலவுகிறது. இந்த மூன்று கடன்களின் அளவும், பொதுத் துறை வங்கிகளில், அவை வழங்கியுள்ள மொத்தக்கடன் தொகையில் 17 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஆனால் தனியார் துறை வங்கிகளிலோ இந்த அளவு 6.7 சதவீதமாக உள்ளது. (அட்டவணை 1-ஐக் காண்க)

வாராக் கடன்களின் அளவு இவ்வளவு வளர்ந்ததற்கு எந்தத்துறை காரணம் என்று அறிவதும் அவசியம். அட்டவணை-2ல் கொடுத்துள்ள விவரங்களைப் பார்க்கும்போது, நாம் பொதுவாக நினைத்திருப்பதுபோல் அல்லாமல் விவசாயத்துறையினால் வாராக் கடன்கள் அதிகரிக்கவில்லை. சொல்லப் போனால் வேளாண்துறை வாராக் கடன் களின் அளவுதான் மிகவும் குறைவானது. மேலும், பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைவாக இருந்த காலகட்டத்தில், விவசாயத் துறையின் வாராக் கடன்களும் குறைந்தன. ஆனால் 2015-16ல் விவசாயத்துறைக்கான கடன் தொகை அதிகரித்தது. அதற்குக்கார ணம் அடுத்தடுத்து வந்த இரண்டு வறட்சிகள். ஆனால், மத்தியத்தர தொழில் நிறுவனங் களின் வாராக் கடன்கள் அதிகரித்துள்ளன. தொழில்துறையில் தொடர்ந்து ஏற்பட்ட மந்தப்போக்கினால் இவ்வாறு ஏற்பட்டிருக் கலாம்.

**விளைவு**

வங்கிகளின் வாராக்கடன் அதிகரிப்பதால் பொருளாதாரத்தில் எத்தகைய விளைவு ஏற்படும்? கடன் வழங்குதல் மற்றும் வட்டி விகிதம் என்ற இரண்டு கோணத்தில் இதைப் பார்க்கலாம். பணவீக்க அளவை நிர்ணயிப் பதில் சமீபகாலமாக உள்ள தாராளப் போக்கினாலும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை சரிந்ததாலும், உள்நாட்டுப்

அட்டவணை 1

**பொதுத்துறை வங்கிகளிலும் தனியார் துறை வங்கிகளிலும் கடன்களின் தராதரம்**

| | பொதுத்துறை வங்கிகள் | | | | தனியார்துறை வங்கிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மார்ச் 13 | மார்ச் 14 | மார்ச் 15 | செப்டம்பர் 15 | மார்ச் 13 | மார்ச் 14 | மார்ச் 15 | செப்டம்பர் 15 |
| நிகரவாராக்கடன் (%) | 2.0 | 2.7 | 3.2 | 3.6 | 0.5 | 0.7 | 0.9 | 0.9 |
| மறுகட்டமைக்கப்பட்ட கடன்கள் (%) | 7.2 | 7.2 | 8.1 | 7.9 | 1.9 | 2.3 | 2.4 | 2.4 |
| மொத்தம் + மறுகட்டமைக்கப்பட்ட கடன்கள் (%) | 11.0 | 11.9 | 13.5 | 14.0 | 3.8 | 4.2 | 4.6 | 4.6 |
| மொத்தம் + மறுகட்டமைக்கப்பட்டவை + தள்ளுபடி செய்யப்பட்டவை % | 13.4 | 14.1 | 16.1 | 17.0 | 5.4 | 6.4 | 6.7 | 6.7 |

ஆதாரம்: ரிசர்வ் வங்கியின் இணையதளம்.

அட்டவணை – 2

**துறைவாரியாக வங்கிகளின் வாராக்கடன் நிலவரம்**

| எல்லா வங்கிகளும் (மொத்தம் + மறுகட்டமைக்கப்பட்ட கடன் + தள்ளுபடியானவை (%) | | | | |
|---|---|---|---|---|
| | மார்ச் 13 | மார்ச் 14 | மார்ச் 15 | செப்டம்பர் 15 |
| விவசாயம் | 8.2 | 7.4 | 7.5 | 7.9 |
| குறுந்தொழில்கள் | 10.2 | 10.0 | 10.5 | 12.3 |
| சிறு தொழில்கள் | 13.2 | 13.3 | 14.8 | 16.8 |
| நடுத்தர தொழில்கள் | 20.2 | 23.6 | 27.0 | 31.5 |
| பெருந்தொழில்கள் | 16.3 | 19.0 | 23.0 | 23.7 |

ஆதாரம்: ரிசர்வ் வங்கியின் இணையதளம்

பணவீக்கம் 5.6 சதவீதமாக குறைந்துள்ளது. இதையடுத்து வங்கிகளின் வட்டிவிகிதங்களும் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2014 டிசம்பர் மாதம் முதற்கொண்டு, ரிசர்வ் வங்கியும், மற்ற வங்கிகளுக்குத் தான் வழங்கும் கடனுக்கான வட்டியை (ரெப்போ விகிதம்) படிப்படியாக 125 புள்ளிகள் வரை (1.25%) குறைத்துவிட்டது. ஆனால் வங்கிகளோ (பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள்) தாம் அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதத்தை 40 புள்ளிகள் மட்டுமே (0.4%) குறைத்துள்ளன. வங்கிகள் தமது டெபாஸிட்டு களுக்கான வட்டி விகிதத்தையும் குறைவாகவே குறைத்துள்ளன. ஏனெனில் தமது லீவரேஜ் விகிதத்தை அதிகரிக்க சேமிப்பை அதிகரித்தாக வேண்டிய நிலை. வேறுவிதமாகச் சொல்வ தானால், ரெப்போ விகிதங்கள் குறைந்தாலும், முதலீட்டுச் சுழற்சியை மீண்டும் துடிப்புடன் இயக்குமளவிற்கு வங்கிகளின் வட்டிவிகிதங்கள் குறையவில்லை. இந்தப் பின்னணியில், மேலும் வட்டி விகிதங்களைக் குறைக்க ரிசர்வ் வங்கி தயங்குகிறது.

இந்திய வங்கித்துறையின் வாராக்கடன் அதிகரித்துவருவது, இந்திய நிதித்துறை சீர் குலையும் வாய்ப்பை உயர்த்தி உள்ளதாக சர்வதேச செலாவணி நிதியம் தனது சமீ பத்திய அறிக்கையில் கூறியுள்ளது. "இந்தியா வில், பொருளாதாரத்திற்கு நெருக்கடி தரும் வெளிக்காரணிகளின் வேகம் மட்டுப்பட்டு, எதிர்பார்த்ததை விட விரைவாக பணவீக்கம் குறைந்துவிட்டபோதும், அதிகப்படியான நிதிப்பற்றாக்குறையும். பணவீக்கம் உயரு மென்ற எதிர்பார்ப்பும் பெரும் சவாலாக உள்ளன. பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர் பார்ப்புகள், நீண்டகால நோக்கில் குறைவாக இருக்கும்படி பணக்கொள்கையைச் செயல் படுத்த வேண்டும். எல்லா விகிதத்திலும் வரிச் சீர்த்திருத்தங்களை மேற்கொண்டு மானியங் களை மேலும் குறைக்கும் வேலைகளையும் தொடரவேண்டும். இவ்வாறு கவனம் செலுத்தா விட்டால், கார்பரேட் நிறுவனங்களின் நிதி நிலைமையும், வங்கிகளின் வாராக்கடனும் இந்தியாவின் நிதி ஸ்திரத் தன்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாகிவிடும்" என்ற சர்வதேச செலா வணி நிதியம் தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது.

### மத்திய பட்ஜெட் என்ன செய்திருக்கிறது?

பொதுத்துறை வங்கிகளுக்கும் கூடுதல் மூலதனம்தேவையாகஇருப்பதால்மறுமூலதன ஆக்கத்திற்காக மத்திய பட்ஜெட்டில் ரூ. 25,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையானால் இன்னும் ஒதுக்கீடு செய்ய அரசு தயாராக உள்ளதாகவும்நிதியமைச்சர்தெரிவித்துள்ளார். இது நேரிடையான நடவடிக்கை. இது தவிர வங்கிச் செயல்பாடுகளில் தரக்குறவை ஏற் படுத்தும் மறைமுக நடவடிக்கைகள் சிலவும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை யாவன:

- நிதி நிறுவனங்களைக் கலைத்து விடு வதற்கான புதிய நெறிமுறைகள்.

- *2002ஆம் ஆண்டின் SARFAESI சட்டத் தில் திருத்தம் கொண்டுவந்து, கடன் மறு கட்டமைப்பு நிறுவனங்களில், அவற்றைத் தோற்றுவிக்கும் நிறுவனங்கள் 100 சதவீத மூலதனத்தை வைத்திருக்க வகை செய்தல்.*
- *கடன் வசூல் தீர்ப்பாயச் சட்டங்களில் திருத்தங்களை செய்து, அவை ஆன்–லைன் வழியாக இயங்க வகை செய்வது.*
- *பங்குபத்திர மேல்முறையீட்டுத் தீர்ப் பாயங்களின் உறுப்பினர்கள் மற்றும் கிளை களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.*
- *பிரதம மந்திரியின் முத்ரா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் அளவை ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்துதல்.*

*இந்த நடவடிக்கைகள் யாவும் தாராளமாகக் கடன் கிடைப்பதை உறுதி செய்தாலும், பொதுத்துறை வங்கிகளைப் பாதித்துள்ள அவலங்களில் இருந்து அவற்றை மீட்டெடுக்க உதவுமா? வங்கித்துறையை மீண்டும் ஆரோக் கிய நிலைக்குக் கொண்டுவர மேலும் பல வற்றைச் செய்தாக வேண்டும்.*

*இந்த நடவடிக்கைகளோடு அரசு கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம், கடன் மறுகட்டமைப்பு நிறுவனங்களின் பங்கு. வங்கி களின் வாராக் கடன்களைச் சரியான நேரத்தில் சரியான விலைக்கு விற்றுவிடுவதற்காக தேசிய கடன் மேலாண்மை நிறுவனம் ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, கியான் சங்கம் (வங்கித்துறை, நிதித்துறை மற்றும் ரிசர்வ் வங்கியின் மூத்த அலுவலர் கள் ஆண்டுதோறும் சந்தித்துப் பேசுவது) மூலமாகவும் வங்கிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு பட்ஜெட் தாக்கலான உடனேயே கியான் சங்கக் கூட்டம் கூடி, கடன் வசூல் சட்டங்கள் பற்றி சில பரிந்துரைகளையும் தந்துள்ளது.*

*பட்ஜெட்டில் சில நேரடி நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டு இருந்தாலும், ஏற்கனவே அரசிடம் அளித்துள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்துவதன் மூலம் வங்கிகளின் வாராக்கடன் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணலாம். வங்கிகளின் நிதி நிலைமையைப் பொறுத்தே தற்போதைய முதலீட்டுச் சுழற்சி வேகம் பெறும்.* ●

**ஏற்கனவே பி.ஜே. நாயக் கமிட்டியின் பரிந்துரைகளும் உள்ளன. அவற்றில் முக்கியமானவை சில:**

- *வங்கிகள் நாட்டுடைமையாக்கச் சட்டம் 1970 மற்றும் 1980, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் சார்பு வங்கிகள் சட்டம் ஆகியவற்றைத் திரும்பப் பெற வேண்டும்.*
- *வங்கிகள் யாவும் கம்பெனிகள் சட்டத்தின்படி செயல்படவேண்டும். அரசு வங்கிகளில் வைத்திருக்கும் தனது பங்கினை மாற்றிவிடுவதற்கு வங்கி முதலீட்டு கம்பெனி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.*
- *வங்கி வாரிய அமைப்பின் உதவி யோடு, மூன்று கட்டங்களாக, வங்கி களுக்கு முழுநேர இயக்குநர்களை நியமிக்க வேண்டும்.*
- *வங்கிகளில் அரசின் பங்கு மூல தனத்தை 50 சதவீதத்திற்குக் கீழாகக் குறைக்க வேண்டும்.*
- *வங்கிகளின் மேல்மட்ட நிர்வாகத்தில் இளைய தலைமுறையைப் பணி அமர்த்துவதற்கு ஏதுவாக மனித ஆற்றல் கொள்கையை அறிவிக்க வேண்டும்.*
- *அரசாங்கத்தின் வளர்ச்சித் திட்டங் களின் இலக்குகளை அடைய உதவு கின்றவாறு பொதுத்துறை வங்கி களுக்கு உத்தரவிடும் போக்கை அரசு கைவிட வேண்டும்.*
- *பொதுத்துறை வங்கிகளை மட்டுமே கட்டுப்படுத்துகின்ற ஒழுங்குமுறை விதிகளை அறிவிக்கின்ற போக்குக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.*

# விவசாயிகளின் நலன்களுக்கம், நலிவடைந்த பிரிவினருக்கும் ஊரக மேம்பாட்டிற்கும் முன்னுரிமை அளிக்கும் பட்ஜெட்

– கே.என். ஸ்ரீனிவாசன்

*இந்தியாவை மாற்றி அமைக்கும் பட்ஜெட்*

*– நிதி அமைச்சர் திரு. அருண்ஜேட்லி*

இந்தியா தொழில்துறையிலும், சேவைத் துறையிலும் வேகமாக வளர்ச்சிபெற்று வந்தாலும் நமது நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை தொடர்ந்து முக்கிய இடம் பெற்றுள்ளது. நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் விவசாயம் 17 சதவீதத்திற்கும் கூடுதலான பங்களிப்பை செய்து வருகிறது. கிட்டத்தட்ட 50 சதவீத மக்கள் வேலை வாய்ப்பிற்காக வேளாண்மையையும், அதனைச் சார்ந்த தொழில்களையும், ஊரகத் தொழில்களையும் நம்பியுள்ளனர். கடந்த 2 ஆண்டுகளாக நமது வேளாண்மைக்கு ஆதாரமாக இருக்கும் தென்மேற்குப் பருவமழைப்பொழிவில் ஏற்பட்ட பற்றாக்குறை, விவசாயத்திற்கும், விவசாயிகளின் நலனுக்கும் பாதகமாக அமைந்துவிட்டது. இதனிடையே உலகப் பொருளாதார வளர்ச்சியும் மந்த நிலையில் இருந்து வருகிறது. இந்த நிலமை தொடரும் என்றும் பொருதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். உலகளவில் இந்த பாதகமான சூழல் இருந்த போதிலும் இந்தியப் பொருனாதாரம் "ஒளிமிக்கதொரு பகுதியாக இயங்குகிறது" என்று சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. இந்தப் பின்னணியில் 2016–17ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஊரகப் பொருளாதாரம் எதிர் கொண்டுள்ள நெருக்குதலையும், இன்னல்களையும் களையும் வகையிலான நடவடிக்கைகளை வரும் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை எடுத்துரைத்துள்ளது. விவசாயிகளின் நலன்களுக்கும் நலிவடைந்த பிரிவினருக்கும், ஊரக மேம்பாட்டிற்கும் நிதி அமைச்சர் திரு. அருண் ஜேட்லியின் 3 வது பட்ஜெட் முன்னுரிமை அளித்துள்ளது. இவற்றின் முக்கிய கூறுகளை இப்பொழுது காணலாம்.

அர்ப்பணிக்கப்பட்ட நீண்டகால அடிப்படையின் பாசனநிதியம், எளிய மக்களுக்கு சமையல் எரிவாயு, மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2018ம் ஆண்டு மே மாதத்திற்கு முன் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி, திறன் பயிற்சி நிறுவனங்கள், கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கு கணிசமான அளவு மான்ய உதவி, அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடு, ஒருங்கிணைந்த வேளாண் சந்தை போன்றவை வரும் நிதி ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ள சில முக்கியத் திட்டங்கள் ஆகும். இவற்றின் விவரங்கள் இவற்றின் பயனை எடுத்துக்காட்டும்.

**பாசனம்:**

விவசாயிகளின் வருமானத்தை 2022ம் ஆண்டு வாக்கில் இரட்டிப்பாக்கப்படும் என்ற பிரதமரின் வாக்குறுதிக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் பல்வேறு வேளாண் திட்டங்கள் இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. விவசாயிகளுக்கு உணவு பாதுகாப்புடன், வருவாய் பாதுகாப்பு உணர்வையும் அளிக்கும் வகையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப் படவுள்ளன. வேளாண்மை மற்றும் விவசாயிகளின் நலனுக்கென ரூ.35 ஆயிரத்து 984 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயிர் செய்யப்படும் 141 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் சுமார் 65 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பு பாசனவசதி பெற்றுள்ளது 28.5 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் பிரதம மந்திரி பாசனத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. விரிவுபடுத்தப்பட்ட ஒருங்கிணைந்த பயன் பாட்டுத் திட்டத்தின் கீழ் 89 திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் பயனாக 80

**கே.என். சீனிவாசன்,** இயக்குநர் (ஓய்வு), களவிளம்பரத்துறை, திருவனந்தபுரம்.

லட்சம் ஹெக்டேருக்கு கூடுதலான நிலப் பரப்பு பாசன வசதி பெறும். இந்த திட்டங் களுக்காக வரும் நிதியாண்டில் ரூ 17 ஆயிரம் கோடியும் அதற்கு அடுத்த ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 86 ஆயிரத்து 500 கோடியும் தேவைப்படும். நபார்டில் நீண்டகால அடிப் படையிலான பாசன அர்ப்பண நிதியம் ஒன்று உருவாக்கப்படும். இதற்கான துவக்க மூலதனம் ரூ.20 ஆயிரம் கோடியாக இருக்கும். இதைப் போன்று நிலத்தடி நீர்வளத்தைப் பராமரிக்க ரூ. 6000 கோடி மதிப்பீட்டில் திட்டமொன்றை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழான ஒதுக்கீட்டைப்பயன்படுத்தி சுமார் 5 லட்சம் பண்ணைக் குட்டைகள் மற்றும் கிணறுகள் அமைக்கப்படும்.

### கம்போஸ்ட் உரம்

கம்போஸ்ட் உரம் இயற்கை உர உற்பத்திற்காக 10 லட்சம் கம்போஸ்ட் உரக் குழிகள் உருவாக்கப்படும். 2017ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மண்வள அட்டைத் திட்டம் 14 ஆயிரம் கோடி குடும்பங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இதனால் விவசாயிகள் உரப்பயன்பாட்டை மேம்படுத்த இயலும். அடுத்த மூன்று ஆண்டுகளில் உர நிறுவனங் களில் 2000 மாதிரி சில்லறை விற்பனை நிலயங்களில் மண் மற்றும் விதை சோதனை வசதிகள் ஏற்படுத்தப்படும். நகரங்களில் உருவாகும் கழிவுகள் கம்போஸ்ட் உரமாக மாற்றுவதற்கான கொள்கை பற்றிய விவரங் களும் அறிவிக்கப்பட்டுள்ளன. உரக் கம்பெனிகள் இந்த கம்போஸ்ட் உரத்தை விற்பனை செய்யும். பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இயற்கை விவசாயம் மேம்படுத்தப்படும். தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பயிரிடப்படும் மாவட்டங்களில் எண்ணிக்கை 622 அதிகரிக் கப்படும்.

### வேளாண் சந்தை

ஈசேவை அடிப்படையிலான ஒன்றுபட்ட வேளாண் சந்தை இந்த ஆண்டு டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14ம் தேதி நாட்டிற்காக அர்ப்பணிக் கப்படும்.

### சாலைகள்

பிரதமமந்திரி கிராம சாலைத் திட்டப் பணிகள் நிறைவு செய்வதற்கான இலக்கு 2021ம் ஆண்டியிலிருந்து 2019 என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒதுக்கீடு ரூ.19 ஆயிரம் கோடி யாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் தகுதி யுள்ள 65 ஆயிரம் குடியிருப்புக்கள் சாலை இணைப்பைப் பெறும்.

### ஆதரவு விலை

எல்லா விவசாயிகளுக்கும் குறைந்த பட்ச ஆதரவு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மூன்று முன் முயற்சிகள் மேற்கொள்ளப் படும். முதலாவது பகிர்ந்து அளிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தை மேற்கொள்ளுமாறு எஞ்சிய மாநிலங்கள் ஊக்குவிக்கப்படும். இந்திய உணவுக்கழத்தின் வாயிலாக “ஈசேவை” கொள்முதல் திட்டம் மேற்கொள்ளப்படும். பருப்பு கொள்முதலுக்கு திறன்பட்ட ஏற் பாடுகள் செய்யப்படும். விலைகள் நிலைப் படுத்துதல் நிதியத்திற்கு ரூ.900 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

### பால் பண்ணை

பால்பண்ணைத் தொழில் விவசாயிகளுக்கு இலாபகரமாக அமைய உதவும் வகையில் 4–முன் முயற்சிகளும் செயல்படுத்தப்படவுள்ளன. அவைகளானவை: “பசுதான் சஞ்சீவினி” என்ற கால்நடை உடல்நலத்திட்டம் மற்றும் “நகுல் ஸ்வஸ்த்யாபத்ரா” எனும் கால்நடை சுகாதார அட்டைகள். 2வது நவீன இனப் பெருக்கத் தொழில்நுட்பத் திட்டம், மூன்றாவது பசுதான் “ஹாத்” என்ற மின்னணு சந்தை இணையதளம், உருவாக்கும் திட்டம், இது விவசாயிகளுக்கும் இனப்பெருக்கப் பணியை மேற்கொண்டிருப்பவர்களுக்கும் இடையே இணைப்பாக இருக்கும். நான்காவது உள் நாட்டு இனப்பெருக்கத்திற்கான தேசிய மையம் அமைக்கும் திட்டம் ஆகும். இந்த

நான்கு திட்டங்களும் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.850 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

### கடன் உதவி

விவசாயிகளுக்கு போதுமான கடன்உதவி உரிய காலத்தில் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் வரும் நிதி ஆண்டிற்கு ரூ. 9 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது நடப்பு நிதி ஆண்டு ஒதுக்கீட்டை விட ரூ. 5 லட்சம் கோடி கூடுதலாகும். மேலும் விவசாயிகள் கடனைச் திருப்பி செலுத்துவதில் ஏற்படும் சுமையைக் குறைப்பதற்காக வரும் நிதி ஆண்டில் வட்டித் தள்ளுபடிக்கு ரூ.15 ஆயிரம் கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

### காப்பீடு

பிரதமமந்திரி காப்பீட்டுத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த 2016–17ம் ஆண்டு நிதி அறிக்கையில் ரூ.5500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் குறைந்த அளவிலான தொகையை காப்பீட்டு பிரீமிய மாகச் செலுத்தி விரிவான காப்பீட்டைப் பெற இயலும். அதனால் எந்த விதமான பாதிப்பிற்கும் அதிக அளவில் இழப்பீட்டை பெறமுடியும்.

### கிராம மேம்பாடு

வறட்சியும் கிராம அளவில் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் ஒவ்வொரு வட்டாரமும், "தீன்தயாள் அந்த்தோதயா" இயக்கத்தின் கீழ் தீவிர கண்காணிப்பிற்கு உரிய வட்டாரங்களாக எடுத்துக்கொள்ளப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத் திற்காக வரும் நிதி ஆண்டில் ரூ. 38500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. "ஷியாம் பிரசாத் முகர்ஜி ரூர்பன்" இயக்கத்தின் கீழ் 300 ரூர்பன் தொகுப்புக்கள் மேம்படுத்தப்படும். 2018ஆம் ஆண்டு மேமாதத்திற்கு முன்பாக 100 சதவீத கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப்புறங்களுக்கான புதிய டிஜிட்டல் எழுத்தறிவுத் திட்டத்தின் வாயிலாக அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 6 கோடி குடும்பங்கள் பயன் அடையும் வகையில் திட்டம் வரையப்பட்டுள்ளது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்கள் நிர்வாகத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் "ராஷ்ட்ரிய கிராம் சுவராஜ் அபியான்" என்னும் தேசிய கிராம சுய ஆட்சித் திட்டம் என்ற புதிய திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ.665 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் ஊரக மேம்பாட்டிற்காக ஒட்டு மொத்தமாக ரூ.87,665 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14வது நிதிக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப கிராம பஞ்சாயத்துகளுக்கும், நகர சபை களுக்கும் நிதி உதவியாக ரூ. 2.87 லட்சம் கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும் ரூ. 81 லட்சம் கிடைக்கும். உள்ளாட்சி அமைப்பு களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 228 சதவீதம் கூடுதலாகும்.

### திறன்மேம்பாடு

பிரதம மந்திரியின் திறன் மேம்பாடு திட்டத்தின் வாயிலாக இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுக்கு உதவும் வகையில் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.இதற்காக 1500 பல்வகை திறன் பயிற்சி கழகங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான ரூ.1700 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### புகையிலை மறுப்பு

புகையிலை மற்றும் புகையிலைப் பொருட் களின் பயன்பாட்டைக் குறைக்கும் முயற்சியாக பீடியைத் தவிர மற்றெல்லா புகையிலைப் பொருட்களுக்கும் 10 சதவீதம் முதல் 15 சதவீதம் வரை வரி உயர்த்தப்படுகிறது.

### மான்யம்

அரசு மானியங்கள் மற்றும் நிதி உதவிகள் உரிய பயனாளிகளை சென்று அடைவதை உறுதி செய்யும் வகையில், ஆதார் அடிப் படையில் திட்டத்தை வரைதல், உரமான் யத்தை நேரடியாக வழங்குவதற்கான முன் னோடித் திட்டத்தை அறிமுகம் செய்தல், மொத்தமுள்ள 5 லட்சத்து 35 ஆயிரம் நியாய

விலைக்கடையில் 3 லட்சம் கடைகளில் அடுத்த நிதியாண்டின் இறுதிக்குள் கணினி வழி தானியங்கி வசதியை ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும்.

### மருத்துவக் காப்பீடு

எளிய மக்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தையும் நிதி அமைச்சர் அறிவித்தார். இதன்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு லட்சம் ரூபாய் வரை மருத்துவ காப்பீடு கிடைக்கும். இக்குடும்பங்களைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடி மக்களுக்கான காப்பீட்டுத் தொகை ரூ.30 ஆயிரம் கூடுதலாக இருக்க இத்திட்டம் வகை செய்கிறது. இதனால் எளிய மக்கள் சிகிச்சைக் கென மருத்துவமனையை அணுகுவது எளிதாகிறது. தரமான மருந்துகள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதை உறுதிச் செய்யும் வகையில் பிரதமர் மக்கள் மருத்துவத் திட்டத்தின் கீழ் 3 ஆயிரம் மருந்துக் கடைகள் வரும் நிதி ஆண்டில் திறக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் இறுதிநிலை சிறுநீரக நோயால் பாதிக்கப்படும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்கென "டயாலிஸிஸ்" மையங்கள் பெரும்பாலும் தனியார் துறையில் உள்ளன. மேலும் இவை நகரங்களில்தான் உள்ளன. இதற்காக கூடுதலான செலவும் ஆகிறது. இந்தப் பிரச்சனையை எதிர் கொள்ளும் வகையில் அனைத்து மாவட்ட மருத்துவ மனைகளில் இந்தச் சேவையை வழங்க தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் டயாலிஸிஸ் மையம் அமைக்கப்படும். தனியார் பொதுத்துறை பங்கேற்பின் வாயிலாக இது அமைக்கப்படும். "டயாலிஸிஸ்" செலவைக் குறைக்க உதவும் வகையில் இதற்கென கருவியின் சில பாகங்களுக்கு அடிப்படை சுங்கத்தீர்வை, கலால் வரி, சிறப்புக் கூடுதல் வரி, சமன்படுத்தும் வரிகள் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

### சமையல் எரிவாயு

எளியநிலையில் உள்ள குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணப்பு வழங்குவதற்கான பெரிய இயக்கம் நடைமுறைப்படுத்தப்படும். இதனால் 2016–17ம் ஆண்டு வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 1.5 கோடி குடும்பங்கள் பயன்பெறும். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மொத்தம் 5 கோடி குடும்பங்கள் பயன் அடையும் வகையில் இந்தத் திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகள் செயல்படுத்தப்படும். இந்தத்திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு இணைப்புகள் குடும்பத்தில் உள்ள பெண்களின் பெயரிலேயே வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்கு என 2016–17ம் ஆண்டு ரூ.2000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.இந்தத் திட்டத்தினால் மகளிரின் உடல்நலம் பாது காக்கப்படும்.அவர்களது வேலைப்பளு குறைவதுடன், நேரமும் மிச்சமாகும். மேலும் கிராமப்புற இளைஞர்களுக்கு சமையல் எரிவாயு விநியோகத்தில், வேலை வாய்ப்பு அதிகமாகும்.

### க்ரிஷி கல்யாண்

வரிவதிப்பிற்கு உட்பட்ட அனைத்து சேவைகளின் மீதும் கூடுதலாக 0.5 சதவீத கூடுதல் வரி விதிக்கும் யோசனையையும் நிதி அமைச்சர் முன் மொழிந்துள்ளார். க்ரிஷி கல்யாண் என்று அழைக்கப்படும் இந்த கூடுதல் வரி விதிப்பு 2016 ம் ஆண்டு ஜூன் 1ம் தேதி நடைமுறைக்கு வருகிறது. இந்த வரி விதிப்பினால் கிடைக்கும் வருவாய் முழுவதும் விவசாயம் மற்றும் விவசாயிகளின் நலன்களை மேம்படுத்தும் பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

மொத்தத்தில் விவசாய மேம்பாட்டிற்காகவும், விவசாயிகளின் நலன்களுக்காகவும் எளிய மக்களின் மேம்பாட்டிற்காகவும் வரையப்பட்டுள்ள புதிய திட்டங்கள் கிராமப்புற பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என உறுதியாக நம்பலாம். இந்தத் திட்ட செயல்பாட்டினால் வேளாண்மை ஊக்கம் பெறும். விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப்படுவதுடன் வாழ்க்கைத்தரம் மேம்படும், எளிய மக்களும் மேன்மை பெறுவர். கிராமங்களும் பொலிவு பெற வழி ஏற்படும். ●

# பெண்களுக்கான திட்ட ஒதுக்கீடுகள்

– டாக்டர் ஷாஹின் ராஸி

*"பெண்களை வலிமையற்றவர்கள் என்று கூறுவது அவர்களை அவமதிப்பதாகும்; ஆண்கள் பெண்களுக்கு இழைக்கும் அநீதி யாகும். வலிமை என்பதை முரட்டு வலிமை யாக எடுத்துக் கொண்டால் பெண் என்ன முரட்டு வலிமையற்றவளா? அதையே மன வலிமை என்று எடுத்துக் கொண்டால் அவள் ஆணை விட மேன்மையானவளே. அவளுக்கு உள் உணர்வு அதிகமாகவே உள்ளது. அவள் தன்னைத்தானே அதிகமாக தியாகம் செய்ய வில்லையா? எதையும் தாங்கும் வலிமை அவளிடம் மிகுந்து காணப்படவில்லையா? அவளுக்கு அதிக வீரம் இல்லையா? அவள் இல்லாமல் அவன் இல்லை. வன்முறையற்ற வாழ்வே நம் வழி என்றால் எதிர்காலம் பெண்கள் கையிலேதான் உள்ளது."*

*– மகாத்மா காந்தி*

மத்திய அரசின் 2016–17 பட்ஜெட்படி பிரதம மந்திரியின் எல்லோரையும் உள்ளடக்கிய அதாவது, விவசாயிகள், ஏழை எளியவர்கள், பெண்கள், சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் உள்ளிட்ட மத்திய வர்க்கத்தின் பெரும் பாலோர் ஆகியவர்களுக்கான திட்டங்கள் தொடருகின்றன. ஒன்பது தூண்கள் என்ற கொள்கையுடன் அது பொருளாதார வளர்ச் சியை ஊக்குவிப்பதோடு இந்திய பொருளாதார வளர்ச்சியில் அனைவரையும் இணைக்க முயற் சிக்கிறது.

உள் கட்டமைப்பு முதலீடுகளுக்கு முக்கியத் துவம் அளித்து சமுதாய மற்றும் கிராமப்புறத் துறைகளில், சுகாதார காப்பீடு, விவசாயி களுக்கான வருமானம் தரும் திட்டங்கள், கல்வி மற்றும் திறன் வளர்ப்பு ஆகியவைகளில் முதலீடுகளுக்கு நிதியமைச்சர் ஒரே சீரான முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அவர்



தற்போது மிகவும் தேவையான நிதிநிலை மற்றும் நிதித்துறை சீர்திருத்தங்கள், தொழில் வணிகத்தை எளிமையாக்க கொள்கை மாற்றங்கள், நிதி நிலை நெறிமுறைகள் மற்றும் வரிகளில் சீர்திருத்தங்கள் ஆகியவற்றிற்கான செயல்முறை மாற்றங்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்.

ஆண், பெண் சமச்சீருக்கு திட்டமிடுதல், நிதி ஒதுக்குதல் மற்றும் செயல் திட்டங்களை தணிக்கை செய்தல் ஆகியவற்றிற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் 2016–17 வலியுறுத்துகிறது.

ஆண், பெண் சமச்சீர் நிலைமை என்பது இந்தியாவில் ஒரு மிகப்பெரிய வளர்ச்சி சார்ந்த சவாலாகும். உலகலாவிய ஆண், பெண் சமச்சீர் நிலைமை தரவரிசையில் 142 நாடுகளில் இந்தியாவிற்கு 114வது இடம் கிடைத்துள்ளது. இந்த தர வரிசை ஒரு நாடு நான்கு வழிகளில் ஆண், பெண்களுக்குண்டான ஏற்றத்தாழ்வை நீக்குவதை ஆதாரமாக கொண்டதாகும்; பொருளாதார வாய்ப்புகள் மற்றும் ஈடுபாடு, கல்வி, அரசியல் அதிகாரமயம் மற்றும் சுகா தாரமும் உயிர் வாழும் தன்மையும் ஆகும். தனிமையிலும், பொது இடங்களிலும் பெண்

**டாக்டர் ஷாஹின் ராஸி,** பொருளாதார வல்லுனர், ஆசிரியர், மேன்மிகு உறுப்பினர் – பல்கலை மானியக் கமிஷன்.

களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் எதிரான வன்முறைகள் தொடர்ந்து கொண்டே உள்ளன.

இந்த சவால்களை எதிர் கொள்ளும் வகையில் 2005ல் ஆண், பெண் சமச்சீர் வரவு செலவு திட்டத்தை இந்தியா மேற்கொண்டது. இதன்படி பெண்களின் சமச்சீர் நிலைமைகளையும், உரிமைகளையும் மேம்படுத்தும் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்வடிவம் கொடுக்கப்பட்டு நிதி ஒதுக்கப்படும். இது இந்த கொள்கைக்கு எந்த அளவு அரசு மதிப்பு கொடுக்கிறது என்பதையும் உணர்த்தும். இதுவரை இந்தியாவில் 57 அரசு அமைச்சகங்களும், துறைகளும் பெண்களுக்கு சமச்சீர் வழங்கும் பட்ஜெட் குழுக்களை அமைத்துள்ளன. இதனால், கோடிக்கணக்கான பெண்களின் வாழ்க்கை மேம்பட வாய்ப்புள்ளது.

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் வளர்ச்சி திட்டங்களின் பலன்கள் சென்றடைய இந்த பெண்களுக்கான சமச்சீர் பட்ஜெட் முறை ஒரு முக்கிய கருவியாகும். இப்படி செய்ய வேண்டியதற்கான காரணம் என்னவென்றால் பொதுவாக பட்ஜெட்டுகளில் ஏற்படும் ஒதுக்கீடுகளால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறு விதமான பயன்களும், பாதிப்புகளும் ஏற்படுகின்றன என்பதால்தான். இந்திய மக்கள் வளத்தில் பெண்கள் 48 சதவிகிதம் உள்ளனர். ஆனால், சமூக இலக்குகளான சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளில் அவர்கள் ஆண்களைவிட பின்தங்கிய நிலைமையிலேயே உள்ளனர். ஆகவே, அவர்களுடைய ஏழ்மையை போக்கவும், வளங்களை அளிக்கவும் தனி கவனம் தேவை. அரசு பட்ஜெட் ஒதுக்கீடு செய்வதில் மாற்றம் செய்து ஆண், பெண் சமஉரிமையை ஏற்படுத்த முடியும். ஆகவே, பெண்களுக்கு சமஉரிமை வழங்குவதற்காக பெண்கள் சமஉரிமை பட்ஜெட் பரிந்துரைக்கப்படுகிறது.

இந்தியாவை மாற்றியமைக்கும் கொள்கையுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிதியமைச்சரின் பட்ஜெட் வெற்றி பெறுவதற்கு ஆண், பெண் சமச்சீர் நிலைமை அவசியமாகும். பட்ஜெட்டில் பெண்கள் சார்ந்த அமைச்சகத்தின் ஒதுக்கீடுகள் மற்றும் பெண் சமச்சீர் பட்ஜெட் அறிக்கை ஆகியவற்றை ஆராய்வதன் மூலம் 2016–17 பட்ஜெட்டில் பெண்களுக்கு சமச்சீர் ஒதுக்கீடு இருக்கிறதா என்பதை ஆராய முடியும்.

பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் தேசிய திட்டத்திற்கு ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப்பட்டு ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு மற்றும் மகளிருக்கான தேசிய கமிஷன் ஆகியவற்றிற்கும் ஒதுக்கீடுகள் அதிகமாக்கப்பட்டுள்ளன. பெண்கள் சமச்சீர் பட்ஜெட் அறிக்கையின் மூலம் ஒவ்வொரு அமைச்சகமும் எப்படி பெண்களுக்கான பிரச்சினைகளை அணுகுகின்றன என்பதை விளக்குகின்றது.

பெண்களுக்கான வன்கொடுமைகள் போன்ற தீவிர பிரச்சினைகளை களைவதற்கு பட்ஜெட்டில் ஒதுக்கீடுகள் அதிகரிக்க வேண்டும். அதன்படி பெண்களை தீய பணிகளில் ஈடுபடுத்துவதை தடுக்கவும், இளம் பெண் குழந்தைகளுக்கு அதிகாரங்களை அளிக்கவும், நிதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு வேலை கிடைப்பதில் உள்ள குறைபாடுகளும் மிகுந்த கவலையளிக்கிறது. சமூகத்துறை செலவினங்களை குறைப்பதால் பெண்களின் வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, அடிப்படை திட்டங்களான ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தை மேம்பாடு திட்டங்கள், இந்திராகாந்தி மகளிர் தாய்மை உதவி திட்டம் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2013ல் இந்த திட்டத்திற்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் 2013ன் கீழ் மகளிருக்கான தாய்மைக்கால உதவித்தொகை ரூ.4000லிருந்து ரூ.6000மாக உயர்த்தப்பட்டது. இந்த திட்டம் அனைவருக்கும் விரிவாக்கப்பட வேண்டிய நிலையில் இதற்கு ரூ.400 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு திட்டத்தில் 200 மாவட்டங்களில் மாதிரி திட்டங்களில் இது செயல்படுத்தப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில், பணி அமர்த்தப் படுபவர்களில் 55 சதவிகிதம் பேர் பெண்களாக உள்ளனர். இதன் திட்ட ஒதுக்கீடு ரூ.38500 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆகவே, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் இந்த திட்டம் கடைசி மூன்று மாதங்களில் பல மாநிலங்களில் செயல் பட இயலாத நிலையில் அடுத்த ஆண்டிற் கான நிதி ஒதுக்கீடு 11 சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளது.

"MGNREGA திட்டத்திற்கு 2016–17க்கு ரூ.38,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை முழுமையாக செலவிடப்பட்டால் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்தத் திட்டத்தில் செலவினம் இருக்கும் என்று நிதியமைச்சர் கூறியுள்ளார்.

2015–16ல் ஒதுக்கப்பட்ட ரூ.34600 கோடி தொகையை விட இப்போது ஒதுக்கப் பட்டுள்ள MGNREGA திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.3900 கோடி அதிகம். 2014–15ல் இந்த ஒதுக் கீடு ரூ.34000 கோடியாக இருந்தது. ஏழைக் குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் வழங்கப்படும் சிறப்பு சமையல் எரிவாயு திட்டமும் பெண்களுக்கான திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டுள்ளதை எடுத்துக் காட்டுகிறது. 2016–17 பட்ஜெட்டில் இந்த திட்டத்திற்கான முதல் கட்ட செலவுக்காக ரூ.2000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் மூலம் அரசு இரண்டு முக்கிய பிரச்சினைகளை தீர்க்க முயலுகிறது. முதலா வதாக கிராமப்புறங்களில் ஏழைப் பெண்கள் விறகு, வறட்டி அல்லது விவசாயக் கழிவுகளை சமையலுக்கு பயன்படுத்தி உடல் உபாதைகள் பெறுவதை தவிர்ப்பது. இரண்டாவது வீட்டிற் குள் உருவாகும் உயர் அளவு சுற்றுப்புற மாசை கட்டுப்படுத்துவது ஆகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு அவர்களின் சுகாதாரம் மேம்படும். அவர்கள் சமையல் செய்வதில் ஏற்படும் துன்பங்கள் பெருமளவு குறையும். இது அல்லாமல் கிராமப்புறங்களில்



இளைஞர்களுக்கு சமையல் எரிவாயு வழங்கு செயல்களில் வேலை வாய்ப்புகளும் கிடைக்கும்.

இந்தியாவில் ஆண்டொன்றிற்கு ஐந்து லட்சம் பேர் வீட்டிற்குள் இருக்கும் மாசு சீரழிவால் இறந்து விடுகிறார்கள் என்று அரசு மற்றும் பிற அமைப்புகளின் ஆய்வு கள் கூறுகின்றன. "2016–17 மத்திய அரசின் பட்ஜெட் கிராமப்புறங்களில் உள்ள வீடு களில் மாசுக்காற்றை ஒழிப்பதற்கு இந்த கிராமப்புற மகளிருக்கான சமையல் எரிவாயு திட்டம் உதவும்" என்று சுற்றுச்சூழல் ஆய்வு நிறுவனம் தேரியின் உலக அறிவியல் மற்றும் பருவ நிலை மாற்று பிரிவின் உறுப்பினர் டாக்டர் அரிந்தம் தத்தா கூறுகிறார்.

இந்த திட்டத்தால் 2016–17ல் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள ஒன்றரை கோடி குடும்பங்கள் பயன்பெறும் என்று அரசு கருது கிறது. இந்த திட்டம் குறைந்தபட்சம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு செயல்பட்டு ஐந்து கோடி குடும்பங்களுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டத்தின்படி சமையல் எரிவாயு குவளை என்பது உயர் நடுத்தர வர்க்கத் தினரின் மகிழ்வுப் பொருளாக இருந்து எல்லோருக்கும் கிடைக்கும்வண்ணம் செயல் படுத்தப்படும். இந்த மகிழ்வுப் பொருள் மெல்ல மெல்ல நடுத்தர வர்க்கத்தினருக்கும் கிடைக் கிறது என்றாலும் ஏழை மக்களுக்கு இன்னும் சென்றடையவில்லை என்று நிதி அமைச்சர் கூறியுள்ளார். ஆனால் இப்போது வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்களுக்கும் அரசு

மானியத்தோடு சமையல் எரிவாயு ஏழை மக்களுக்கும் வழங்கப்படுகிறது.

ரூ.2000 கோடி செலவில் "உஜ்வலா" என்ற பெயரில் செயல்படும் இந்த திட்டத்தால் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஒன்றரை கோடி குடும்பங்களுக்கு சுத்தமான எரி பொருள் கிடைத்து பெண்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ளவர்கள், அவர்களின் உடல் நலனும் பொதுவான சுற்றுச்சூழலும் மேன்மை பெறும்.

பட்ஜெட் மூலம் சமையல் எரிவாயு இணைப்புகளுக்கு வழங்க நிதி ஒதுக்கப் பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும். வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள குடும்பத் தினரின் மகளிர் பெயரில் இணைப்பு வழங்க அரசு ஒவ்வொருவருக்கும் ரூ.1,600 மானியம் வழங்குகிறது.

இதுவரை, இது போன்ற மானியம் எரி சக்தி வினியோகிப்பவர்களின் நிறுவன சமூக பொறுப்பின் அடிப்படையால் செய்யப்பட்டு வந்தது. இந்த திட்டம் குறைந்தது மூன்று ஆண்டு கள் செயல்பட்டு 2018–19க்குள், வறுமைக்கோட் டிற்கு கீழே உள்ள ஐந்து கோடி மக்களுக்கு பயனளிக்கும். புதிய இணைப்புகளை வழங்கும் போது ஏழை மக்கள் இதுவரை அதிகம் பயன் பெறாத மாநிலங்களில் குறிப்பாக கிழக்கு மாநிலங்களில் செயல்படுத்தப்படும். சமையல் எரிவாயு திட்டத்திற்கு இதுவரை வழங்கப்பட்ட மானியத்தை பயனாளிகளுக்கு அவர்களுடைய வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தும் "பஹல்" திட்டத்தின் மூலம் அரசு உலகிலேயே பெரிய திட்டமாக ஒரு கின்னஸ் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், தற்போது உள்ள 60 சதவிகித பயன் பாட்டை உயர்த்த அரசு முனைகிறது. இதற்கு முக்கிய தூண்டுகோலாக, அசுத்தமான எரி பொருள்களை பயன்படுத்துவதால் ஐந்து லட்சம் பெண்கள் இந்தியாவில் மடிகின்றனர் என்ற உலக சுகாதார அமைப்பின் மதிப்பீடு உள்ளது.

ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் ஷெட்யூல்டு பழங்குடி மக்களினை தொழிற்முனைவர் களாக்கி அதிகாரமளிக்கும் வகையில் 2016–17 பட்ஜெட்டில் "எழுந்து நில் இந்தியா" என்ற திட்டத்தின் கீழ் ரூ.500 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. இதன்படி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவு அமைச்சகத்தில் தேசிய ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கான மையம் ஒன்று துவங் கப்படுகிறது.

"ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் ஷெட்யூல்டு பழங்குடி மக்கள் புதிய வியாபார தொழில் முனைவுகளை துவக்கி நடத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள்" என்று நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

இரண்டரை லட்சம் தொழில் முனைவோர் பயன்பெறும் என்ற இலக்கின் அடிப்படையில் **மகளிர் தொழில்முனைவோறும்** பயன்பெற்று ஒவ்வொரு வங்கி கிளைகளிலும் குறைந்தது இருவர் பயன்பெறுவர் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த புதிய மையம் தொழிற் அமைப்பு களின் கூட்டோடு அமைக்கப்பட்டு மத்திய அரசின் 2012ன் கொள்முதல் கொள்கையின் அடிப்படையில் ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடி வகுப்பினருக்கு ஆதரவு அளிக்கும். நாம் இப்போது டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் 125வது பிறந்த நாள் ஆண்டு நிறைவை கொண்டாடி வருகி றோம். ஆகவே இந்த ஆண்டு ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடி வகுப்பினர் மற்றும் மகளிர் தொழில் முனைவோருக்கான ஆண்டாக அமைய வேண்டும்.

இந்த பட்ஜெட் தகுந்த நேரத்தில் மேற் கொள்ளப்பட்ட பயண மாற்றம் என்று நாம் முடிவாகக் கூறலாம். இதில் கவனம் செலுத்தப் பட்டிருப்பது அடிப்படை அமைப்புகளை பலப்படுத்தி, ஆண், பெண் சமச்சீர் பிரச் சினைகளை தீர்க்கவல்ல திட்டங்களுக்கு போதிய நிதி அளித்து அவைகளை சிறப்பாக செயல்படுத்துவதாகும்.


உலகளாவிய பொருளாதார மந்த நிலைமை உள்ள நேரத்தில் இந்தியா ஒரு "ஒளிமயமான பகுதியாக" திகழ இந்த 2016–17 பட்ஜெட் உறுதி செய்கிறது. இந்த முன்னேற்றத்தை கொண்டுவர மகளிருக்கு அதிகாரமளித்தலும், ஆண், பெண் சமச்சீர் பிரச்சினைகளை எதிர்கொள்வதைத் தவிர நல்ல கருவி வேறு இருக்க முடியாது. ●

# ரயில்வே பட்ஜெட் – நிறைகளும், குறைகளும்!

– சாந்தி நாராயண்

இந்தியாவில் தொடர்வண்டித்துறை கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கான அணுகுமுறையில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதற்காக தொடர்வண்டித்துறை அமைச்சரை பாராட்டியே தீர வேண்டும். புதுமையான நிதி திரட்டல் உத்திகளின் மூலம் இதை செய்ய அவர் முயற்சி செய்கிறார். இந்தியாவில் தொடர்வண்டி கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக கடந்த பல பத்தாண்டுகளாக பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்படாத நிலையில், அனைத்து முக்கிய பாதைகளும் அதன் முழுப் பயன்பாட்டை எட்டிவிட்டன. இத்தகைய சூழலில் மத்திய தொடர்வண்டித்துறை அமைச்சரின் இந்த அணுகுமுறை தொடர்வண்டிக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பெருமளவில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருப்பதுடன், இது தனித்த ஒற்றை நடவடிக்கை அல்ல என்பதையும் உறுதி செய்திருக்கிறது. தொடர்வண்டித்துறையில் செய்யப்படும் முதலீட்டின் அளவை 2014–15 ஆம் ஆண்டில் ரூ.60,000 கோடியாக நிர்ணயித்த அமைச்சர், அதை 2015–16ஆம் ஆண்டில் ஒரு லட்சம் கோடியாகவும், 2016–17 ஆம் ஆண்டில் 1.21 லட்சம் கோடியாகவும் உயர்த்தியிருக்கிறார். 2020–21 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக ரூ.8.54 கோடி முதலீடு செய்யப்பட வேண்டும் என்ற இலக்கின் ஓர் அங்கமாக இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இலக்குகள் மட்டும் எட்டப்பட்டால், முந்தைய ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்ட முதலீடுகளை விட நடப்பு ஐந்தாண்டில் 3 மடங்கு அதிக முதலீடு செய்யப்பட்டிருக்கும்.

இந்த ஆண்டிற்கான ரயில்வே பட்ஜெட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இன்னொரு முக்கிய



நடவடிக்கை என்னவெனில், தொடர்வண்டி பாதைகளை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் முதலீடு செய்வது என்பது தான். வருவாய் ஈட்டுவதற்கு உதவாத மற்ற திட்டங்கள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. இந்த பணிகள் எந்த மாநிலத்தில் நடைபெற வேண்டுமோ, அந்த மாநில அரசுகள் இந்திய ரயில்வேயுடன் இணைந்து கூட்டு நிறுவனத்தைத் தொடங்கி, திட்டத்திற்கான முதலீட்டில் பாதியை வழங்க ஒப்புக்கொண்டால் மட்டுமே இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படும். இரட்டை ரயில்பாதைகளை அமைத்தல், சரக்குப் போக்குவரத்துக்காக தனி ரயில் பாதைகளை அமைத்தல், துறைமுகங்களை இணைக்கும் வகையில் ரயில் பாதைகளை அமைத்தல் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை விரைவுபடுத்துவதற்காக நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 6 ஆண்டுகளில் இத்தகைய திட்டப்பணிகள் ஒரு நாளைக்கு 4.3 கி.மீ என்ற வேகத்தில் மிகவும் மந்தமாக நடைபெற்று வந்த நிலையில், தினமும் 13 கி.மீ. என்ற வேகத்தில் பணிகளை விரைவுபடுத்த

**சாந்தி நாராயண்,** இந்திய ரயில்வே பணி (போக்குவரத்து), வடக்கு ரயில்வே.

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தொடர்வண்டித்துறை நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ள மேலும் சில சாதகமான திட்டங்கள் பின்வருமாறு:

தொடர்வண்டி டிக்கெட் பதிவு செய்வது உள்ளிட்ட பயணிகள் சார்ந்த வசதிகளை மேம்படுத்த தகவல் மற்றும் அறிவியல் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் தொடர்வண்டி நிலையங்களில் எஸ்கலேட்டர்கள், தங்கும் அறைகள், பேட்டரியில் இயங்கும் வண்டிகள் ஆகியவற்றை ஏற்படுத்தி பயணிகளுக்கு கூடுதல் வசதிகளை செய்து தருவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்வண்டிகளில் வழங்கப்படும் உணவு வகைகளின் தரத்தையும், தூய்மையையும் மேம்படுத்தும் நோக்குடன் உணவு தயாரித்து வழங்கும் சேவை IRCTC –க்கு படிப்படியாக மாற்றப்படும். IRCTC மூலம் நடத்தப்படும் உணவு தயாரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். ஆன்லைன் முறையில் உணவுக்கு பதிவு செய்யும் வசதியை அறிமுகம் செய்வது இன்னுமொரு புதுமையான நடவடிக்கை ஆகும்.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள இன்னொரு முற்போக்கு நடவடிக்கை என்னவென்றால், ரயில் விபத்துக்களை குறைக்கும் நோக்குடன், ஆளில்லாத/ ஆட்களால் இயக்கப்படும் கடவுப் பாதைகளை அகற்றிவிட்டு, அவற்றுக்கு பதிலாக ரயில்வே மேம்பாலம்/ சுரங்கப்பாதை அமைக்கப்படும். ரயில் விபத்துக்களில் 40% கடவுப்பாதைகளில் தான் நடைபெறுகிறது என்பதால் இந்த நடவடிக்கைகளின் மூலம் ரயில் விபத்துக்களும், உயிரிழப்பும் பெருமளவில் குறையும்.

தொடர்வண்டி வாரியத்தில் முடிவெடுக்கும் நடைமுறையை விரிவுபடுத்துவதற்காக நிர்வாக அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முக்கியமான கொள்கை சார்ந்த சிக்கல்கள் குறித்த காலத்தில் தீர்க்கப்படுவதையும், இலக்குகள் குறித்த காலத்தில் எட்டப்படுவதை கண்காணிக்கவும் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்வண்டித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 7 இயக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இயக்கங்கள் அனைத்தும் இயக்குனரின் தலைமையில் செயல்படும். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் குறித்து ஆய்வும், கலந்தாய்வும் நடத்தும் இந்த இயக்கங்கள் அதன் முடிவுகளை தொடர்வண்டி வாரியத்தின் தலைவரிடம் நேரடியாக தெரிவிப்பார்கள். ஆண்டு தோறும் செயல்பாட்டு இலக்குகள் நிர்ணயிக்கப்படும். அவற்றை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டியது இயக்க இயக்குனர்களின் பொறுப்பு ஆகும்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 7 இயக்கங்களில் ஒன்று தொடர்வண்டித்துறையால் உருவாக்கப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகளை முழுமையாக பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கானது ஆகும். சரக்குப் போக்குவரத்துக்கான தனிப் பாதை உருவாக்கப்பட்ட பிறகு அதை முழுமையாக எவ்வாறு பயன்படுத்துவது? என்பதற்கான திட்டத்தை தயாரித்து தொடர்வண்டி வாரியத்திடம் அளிக்க வேண்டும். சரக்குப் போக்குவரத்துக்காக தனிப் பாதை ஏற்படுத்தப்பட்டவுடன், அதை முழுமையாக பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் வெண்மைப் பொருட்கள், பார்சல்கள், வாகனங்கள் உள்ளிட்ட சரக்குகளின் அளவை அதிகரிப்பதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதால் இது மிகவும் முக்கியமான பணியாக இருக்கும். சரக்குப் போக்குவரத்தில் ரயில்வேயின் பங்கு குறைவதை தடுத்து நிறுத்தி, வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதையும் உறுதி செய்வது இந்த இயக்கத்தின் முக்கியப் பணியாகும். இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் தான் தொடர்வண்டித்துறையின் வளர்ச்சி விகிதத்தை விரைவுப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



அதிக அளவில் சரக்குகளை கையாளும் வகையில் தனிப்பாதைகள் ஏற்படுத்தப் படுவதால் மற்ற போக்குவரத்து முறைகள் மூலம் கையாளப்படும் சரக்குகளை தொடர் வண்டிக்கு மாற்றுவதை உறுதி செய்யும் வகையில் புதிய சந்தைப்படுத்தும் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக கீழ்க் கண்ட உத்திகளை கடைபிடிக்கலாம்.

அ. பெட்டகங்களில் அடைத்து ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் 20% மட்டுமே இப்போது ரயில் மூலம் கையாளப் படுகின்றன. கட்டணக் குறைப்பின் மூலம் இந்த அளவை 40 முதல் 50 விழுக்காடாக அதிகரிக்க வேண்டும். சரக்குகளை கையாளு வதற்கான கட்டணம் அடிக்கடி உயர்த்தப் படுவதால் பெட்டக சரக்குகள் சாலைப் போக்குவரத்துக்கு மாறுகின்றன. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

ஆ. சரக்குத் தொடர்வண்டிகளில் ஏற்றிச் செல்லக்கூடிய அளவை விட குறைவான அளவு கொண்ட பொருட்கள் நீண்ட தொலைவுக்கு சாலை வழியாக கொண்டு செல்லப்படுகின்றன. இது இந்திய பொருளா தாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். இந்த நிலையை மாற்றி இந்த பொருட்களை வசதி உள்ள இடங்களுக்கு ரயில் மூலம் கொண்டு செல்லும் நிலையை உருவாக்க வேண்டும்.

இ. சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் சரக்கு லாரிகளை தொடர்வண்டிகளில் ஏற்றிச் சென்று தேவையான இடத்தில் இறக்கி, அங்கிருந்து லாரிகள் மூலம் பொருட்களை கொண்டு செல்லும் வசதியை ஏற்படுத்துதல்.

ஈ. சரக்குகளை ஏற்றிச் சென்று இறக்கி விட்டு திரும்பி வரும் போது காலியாக வரு வதை தவிர்த்து, திரும்பும் போதும் ஏதே னும் சரக்கு ஏற்றி வருவதை உறுதி செய்யும் வகையில் குறைவான கட்டணத்தை நிர்ண யித்தல்.

உ. அதிக அளவில் சரக்குகளை கொண்டு செல்வோருக்கு கட்டணத் தள்ளுபடி வழங்கு வதன் மூலம் சாலை வழியாக கொண்டு செல்லப்படும் பொருட்களை மீண்டும் ரயில் களுக்கு கொண்டு வர வேண்டும்.

தொடர்வண்டித்துறை நிதிநிலை அறிக்கை யில் ஆக்கபூர்வமான அம்சங்கள் இவ்வளவு இருக்கும் போதிலும், முக்கியமான ஓர் அம்சம் கண்டுகொள்ளப்படவில்லை. அது சரக்குக் கட்டணங்களை திருத்தி அமைப்பது ஆகும். பயணிகள் போக்குவரத்தின் மூலம் ஆண்டுக்கு ரூ.30,000 கோடி இழப்பு ஏற்படுகிறது. சரக்குப் போக்குவரத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தான் இந்த தொகை மானியமாக வழங்கப்படுகிறது. புறநகர் ரயில்கள் மற்றும் பிற ரயில்களில் இரண்டாம் வகுப்புக் கட்டணத்தை உயர்த்த அரசு மறுப்பதால் சரக்குக் கட்டணத்தை அடிக்கடி உயர்த்த வேண்டிய தேவை ஏற்படு கிறது. இந்தியாவில் சரக்குக் கட்டணம் உலக அளவில் வசூலிக்கப்படும் கட்டணத்தை விட இரு மடங்குக்கும் அதிகமாக இருப்பதால், பொருட்களின் உற்பத்தி செலவு அதிகரித்து இந்திய உற்பத்தியாளர்களால் உலக சந்தையில் போட்டியிட முடியாத நிலை ஏற்படுகிறது.

ரயில்களில் பயணிகள் வசதிகளை அதிகரிக்க இந்த நிதிநிலை அறிக்கையில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் ரயில் கட்டணங்களை ஓரளவு உயர்த்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தொடர்

வண்டிகளில் வழங்கப்படும் சேவை ஓரளவு மேம்படுத்தப்பட்டால் ரயில் கட்டண உயர்வை தாங்கிக் கொள்ள பயணிகள் தயாராக இருக்கின்றனர் என்பது தான் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் இருந்து தெரிய வரும் உண்மையாகும். அந்த அடிப்படையில் தொடர்வண்டிக் கட்டணங்களை உயர்த்துவதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்த போதிலும் அது தவறவிடப்பட்டிருக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் எஞ்சிய பதவிக்காலத்தில் ஆண்டுக்கு 10% வீதம் கட்டணங்களை உயர்த்தினால் பயணிகள் கட்டணத்தை சமநிலைப்படுத்த முடியும். இதை செய்வதற்கு இன்னும் வாய்ப்புகள் உள்ளன.

கடந்த ஆண்டுக்கான தொடர்வண்டித் துறை நிதிநிலை அறிக்கையில் தொடர்வண்டி ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. கட்டணங்களை முறைப்படுத்துவதற்கான அமைப்பும் உருவாக்கப்படவில்லை. இந்த அமைப்புகள் இனியும் தாமதமின்றி உருவாக்கப்பட வேண்டும்.

இன்னொரு கோணத்தில் பார்க்கும் போது, சமூகத்தின் நலைவடைந்த பிரிவினருக்கு வழங்கப்படும் அனைத்து மானியங்களையும் மறு ஆய்வு செய்தல், தேவைப்படுபவர்களுக்கு மட்டும் மானியங்களை வழங்குதல் என்ற வரவேற்கத்தக்க நிலைப்பாட்டை இந்த அரசு எடுத்திருக்கிறது. குறைந்த கட்டண சலுகை பெறக்கூடிய ஒரே பிரிவினர் நகர்ப்புறங்களில் சுய தொழில் செய்பவர்கள் மட்டும் தான். மற்ற அனைவரும் தங்களது போக்குவரத்து செலவை தாங்கள் வேலை செய்யும் இடத்திலிருந்து பெறுகின்றனர். கிராமப்புறங்களில் தொழில் செய்பவர்கள் கூட அடிக்கடி ரயில் போக்குவரத்து இல்லாததால் ரயில் கட்டணத்தை விட 4 மடங்கு அதிகமாக உள்ள பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு செல்ல வேண்டிய மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் பயணச் சலுகை அட்டை வழங்கப்படுவதால் அவர்களுக்கு பிரச்சினை இல்லை.

தொடர்வண்டித் துறையின் இயக்கச் செலவு தொடர்ந்து அதிகரித்து வருவது கவலை அளிக்கும் இன்னொரு அம்சமாகும். 2014–15 ஆம் ஆண்டில் மொத்த வருவாயில் 88.2% ஆக இருந்த இயக்கச் செலவுகள் 2015–16 ஆம் ஆண்டில் 90% ஆகவும், 2016–17 ஆம் ஆண்டில் 92% ஆகவும் அதிகரித்திருக்கின்றன. செலவுகளை குறைத்து வருவாயை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. தொடர்வண்டித் துறையின் நிதி நிலைமை மோசமடைந்து வருவதற்கு மறுக்க முடியாத காரணங்கள் இருக்கும் போதிலும், இந்த விஷயத்தில் நாம் அலட்சியமாக இருந்து விடக்கூடாது. இதற்காக நாம் செய்ய வேண்டிய முக்கியமான விஷயம் வருவாய் தரும் அம்சங்களில் மட்டும் முதலீடு செய்வதும், திட்டச் செலவுகள் அதிகரிக்காத வகையில் குறித்த காலத்தில் பணிகளை முடிப்பதும் ஆகும். இதை சாதிக்க கண்காணிப்பு அமைப்புகள் வலுப்படுத்தப்படுவதுடன் ஒப்பந்த மேலாண்மைத் திறனும் மேம்படுத்தப்பட வேண்டும்.

நிறைவாக, அரசு – தனியார் கூட்டு முயற்சி, தொடர்வண்டித்துறை நிலங்களை பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நிதி திரட்டும் முயற்சி வெற்றி பெறாததற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும். முக்கியமான சுற்றுலா மற்றும் ஆன்மிக நகரங்களில் பட்ஜெட் ஹோட்டல்களை அமைப்பதன் மூலம் வருவாய் ஈட்ட முடியும். இந்த யோசனை 15 ஆண்டுகளுக்கு முன்பே தெரிவிக்கப்பட்ட போதிலும் இது சார்ந்த துறைகளில் நிலவும் ஒற்றுமையின்மை காரணமாகவே இது தாமதமாகியிருக்கிறது. அதே போல், தொடர்வண்டி நிலையங்களை நவீனமயமாக்குவதும் அவசரமாக செய்யப்பட வேண்டிய பணியாகும். •

# வரவு செலவு பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்திற்கு பிறகான ஆய்வு பலதரப்பட்ட பற்றாக்குறை காரணிகளை ஆய்வு செய்து அரசு மொத்த வரவு செலவு விவேகத்தை அறிதல்

– டாக்டர் அமியா குமார் மோஹாபாத்ரா

ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மைக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் தேவையான முக்கிய மானவைகளில் ஒன்று அரசின் மொத்த வரவு செலவு விவேகத்தின் மூலம் கிடைக்கும் மொத்த வரவு செலவு வலுவாகும். தொடர் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தவும் வேகமான பொருளாதார முன்னேற்றம் பெறவும் அரசின் வரவு செலவு வலுப்பெற்று விவேகமான வரவு செலவு மேலாண்மையை அடைய இந்திய அரசு வரவு செலவு பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்தை *(FRBMA)* இயற்றியுள்ளது. இந்த இலக்கை அடைய, வரவு செலவு அமைப்புகள் மூலம், செலவினங்களை சீர்படுத்தியும் முன்னுரிமை களை மாற்றி அமைத்தும் செயல் திறமையை வலுப்படுத்தியும், வருவாயை அதிகரித்து வருவாய் பற்றாக்குறையையும், மொத்த வரவு செலவு பற்றாக்குறையையும், அடுத்த சில ஆண்டுகளில் தேவைப்பட்ட அளவிற்கு நிலைநிறுத்த அரசு முயற்சி செய்கிறது.

இந்த சட்டத்தின் பின்னணியில், நன்கு வகுக்கப்பட்ட அளவுகளைக் கொண்ட பல வரவு செலவு கருவிகளைக் கொண்டு *2016–17*ன் பட்ஜெட்டின் செயல்பாட்டு திறமையை நாம் ஆய்வு செய்து நாட்டு பொருளாதாரத் தின் மீது அது ஏற்படுத்தும் தாக்கங்களை அறியலாம்.

மேல்மட்ட பொருளாதார விளைவுகளை, பலதரப்பட்ட பற்றாக்குறை அடையாளக் குறியீடுகளை ஆய்வு செய்வதன் மூலம் அறிந்து பட்ஜெட்டின் வனப்பையும் நிலைத்து நிற்கும் தன்மையையும் தெரிந்து கொள்ளலாம். வருவாய் பற்றாக்குறை, மொத்த வரவு செலவு பற்றாக்குறை, அடிப்படை பற்றாக்குறை ஆகியவைகளை வரவு செலவு சார் பெரிய கருவிகளாக கொள்ளலாம். இந்த பற்றாக்குறைகளைக் கொண்டு பட்ஜெட்டின் மேல்மட்ட விளைவுகளை அறிந்து, பொருளா தாரத்தின் நீண்டகால நோக்கங்களை அடைய அரசு மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். எல்லோரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைத்து நிற்கும் மேம்பாட்டு நோக்கத்தோடு இன்றைய நிலைமைகளையும், நீண்டகால நாட்டு வளர்ச்சியையும் கவனத்தில் கொண்டு

அட்டவணை1: வருவாய் பற்றாக்குறை மதிப்பீடு மற்றும் உண்மையில் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் %மாக

| வருடம் | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 | 2008-09 | 2009-10 | 2010-11 | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட வருவாய் பற்றாக்குறை % | 2.5 | 2.7 | 2.1 | 1.5 | 1 | 4.8 | 4 | 3.4 | 3.4 | 3.3 | 2.9 | 2.8 | 2.3 | *1. | *1. |
| உண்மையான வருவாய் பற்றாக்குறை % | 2.5 | 2.6 | 1.9 | 1.1 | 4.5 | 5.2 | 3.3 | 4.4 | 3.6 | 3.1 | 2.9 | - | - | - | - |

ஆதாரம்: பட்ஜெட் பத்திரங்களிலிருந்து ஆசிரியர் தயாரித்தது. (*வருங்கால இலக்குகளை பிரதிபலிக்கிறது)

**டாக்டர் அமியா குமார் மோஹாபாத்ரா,** கூடுதல் பேராசிரியர் (பொருளாதாரம்), ஃபார்சூன் இன்ஸ்டியூட் ஆப் இண்டர்நேஷனல் பிஸினஸ் (FIIB), புது தில்லி.

வருவாய் பற்றாக்குறையையும் வரவு செலவு பற்றாக்குறையையும் எப்படி கட்டுப்படுத்துவது என்பதில்தான் பட்ஜெட்டின் வெற்றி உள்ளது.

### வருவாய் பற்றாக்குறையும் அதனால் வரவு செலவு விவேகத்தின் மீதான தாக்கமும்

“ஒரு அரசின் வரவு தொகையைவிட அதிக வரவுசார் செலவையே வருவாய் பற்றாக்குறை என்பர். வரவு செலவு பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டம் இயற்றப் பட்ட காலத்திற்கு பின் மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருவாய் பற்றாக் குறைசார் விவரங்கள் கீழே (அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ளன. நன்கு புரிந்து கொள்வதற்காக தொடர் இலக்குகளும் கொடுக்கப்பட்டுள்ளன.


### வருவாய் பற்றாக்குறை நிலைமைகள் மற்றும் அதன் தாக்கம்

வருவாய் பற்றாக்குறையை சமாளிக்க அரசு மூலதன வருவாய்களை எதிர்பார்க்கிறது. ஏனெனில், வரிசார்ந்த வருவாய்க்கு மேலும் வாய்ப்புகள் குறைவு என்ற நிலைமை. மூலதன வருவாய்கள் மூலம் பற்றாக்குறையை சமாளிப்பது மிகவும் ஆபத்தானது. மூலதன வருவாய் உயர்வால் சொத்துக்கள் குறையும் அல்லது கடன்கள் அதிகரிக்கும். மேன்மேலும் கடன் வாங்குவதால் புதிய கடனுக்கான வட்டி மேலும் பாரத்தை அதிகரித்து வரிசார் வருவாய் பற்றாக்குறையை அதிகரிக்கிறது. அதுபோலவே, பொதுத்துறை சொத்துக்களை அல்லது மற்ற சொத்துக்களை விற்பதால், நாட்டின் சொத்து குறைகிறது. இதனாலும், வருவாய் மேலும் குறைந்து பற்றாக்குறை அதிகரிக்கும். வருவாய் பற்றாக்குறையை சமாளிக்க வரி அல்லது பிற வருவாய்களை உயர்த்த வேண்டும்.

### வரவு செலவு பற்றாக்குறையும், வரவு செலவு சார் பொறுப்புணர்வும்

அரசின் மொத்த செலவினத்தைவிட, கடன்கள் அல்லாத மொத்த வரவு ஓராண் டில் குறைவாக இருந்தால் அந்தக் குறை பாட்டை வரவு செலவு பற்றாக்குறை என்று கூறுவார்கள். ஒரு நிதியாண்டில் ஒரு அரசு பற்றாக்குறையை சமாளிக்க எந்த அளவுக்கு கடன்களை நம்பியிருக்கிறது என்பதை இது

மதிப்பிடப்பட்ட வரவு செலவு பற்றாக்குறை (உள்நாட்டு மொத்த உற்பத்தியில் %)




படம் 1

விளக்கும். வரவு செலவு பற்றாக்குறை, பொருளாதார வளர்ச்சியின் தன்மையையும், ஒரு நாட்டின் நிலுவைக் கடன்களையும் பிரதிபலிக்கும். இது அரசின் நிதி செழுமை யையும், நாட்டு மக்களின் பொதுவான பொருளாதாரத்தையும்கூட குறிக்கும். இந்தத் தகவல்களின் அடிப்படையில் அரசு தன்னு டைய செலவினங்களுக்கு எந்த எந்த விதத்தில் வருமானத்தை திரட்டுகிறது என்பதையும், எந்த அளவுக்கு கடன் வாங்குகிறது என் பதையும் அறிந்து கொள்ளலாம்.

## வரவு செலவு பற்றாக்குறை நிலைமைகளும் அவற்றின் தாக்கங்களும்

வரவு செலவு பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்துக்கு பிறகான (2004–05 லிருந்து 2016–17) மதிப்பிடப்பட்ட வரவு, செலவு பற்றாக்குறையை ஆய்வு செய்வதன் மூலம் இதுவரை ஏற்பட்ட விளைவுகளையும், இன்றைய தேவைகளையும் நாட்டின் நாளைய நிலைமைகளையும் தெரிந்து கொள்ள முடியும். இந்த சட்டத்தை செயல்படுத்தி நிதிநிலை சீரமைப்பு மேற்கொண்டதற்குப் பிறகு, மதிப்பிடப்பட்ட வரவு செலவு பற்றாக்குறை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது; 2004–05 முதல் 2008–09 வரை முறையே 4.4% 4.3% 3.8% 3.3% மற்றும் 2.5%. அதன் பிறகு வரவு செலவு பற்றாக்குறை 2009–10ல், உலகளாவிய பொருளாதார மந்த நிலைமையை ஈடுகட்ட ஊக்குவிப்பு நிதி திட்டங்கள் மேற்கொண்டதன் காரணமாக நாட்டின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 6.8%மாக உயர்ந்தது.

ஆனால் 2009–10க்குப்பிறகு மதிப்பிடப் பட்ட வரவு செலவு பற்றாக்குறையின் அளவு குறைந்து 2010–11ல் 5.5 சதவிகிதமாக இருந்தது. 2011–12ல் மேலும் குறைந்து 4.6 சதவிகித மாக இருந்தது. பிறகு 2012–13ல் சிறிதளவு அதிகரித்து 5.1 சதவிகிதமாக இருந்தது. அதற்கு காரணம் ஐரோப்பிய நாணய பிரச்சினையும் பொருளாதாரத்தில் தொடர்ந்த மந்த நிலை யுமேயாகும். பிறகு, 4.8 சதவிகிதமாகக் குறைந்து, பிறகு 4.1 சதவிகிதமாக குறைந்து 2015–16ல் இந்த அளவு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 3.9 சதவிகிதமாக இருந்தது. ஆனால், தற்போது நிதியமைச்சர் அறிவித்த 2016–17 பட்ஜெட்டில் கேள்கர் குழு பரிந்துரை களின்படி வரவு செலவு பற்றாக்குறையை உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 3.5 சதவிகித மாக வைத்திருக்கிறார்.


நாட்டில் விலைவாசி உயர்வும் மற்ற பிரச்சினைகளும் இருந்தாலும் அரசின் மொத்த கடன் பல மடங்கு உயர்ந்துள்ளது மிகவும் கவலையளிக்கிறது. 2008–09லிருந்து 2015–16வரை ஏற்பட்ட இறுதியான வரவு செலவு பற்றாக்குறை ரூ.1,33,287 கோடியிலிருந்து ரூ.5,55,649 கோடியாக அதாவது 7 ஆண்டு களில் நான்கு மடங்கு உயர்ந்துள்ளது.

அட்டவணை: 2 வரவு செலவு பற்றாக்குறை - மதிப்பீடு மற்றும் உண்மையில் - உள்நாட்டு மொத்த உற்பத்தியில் %மாக

| ஆண்டுகள் | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 | 2008-09 | 2009-10 | 2010-11 | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட வரவு-செலவு பற்றாக்குறை% | 4.4 | 4.3 | 3.8 | 3.3 | 2.5 | 6.8 | 5.5 | 4.6 | 5.1 | 4.8 | 4.1 | 3.9 | 3.5 | *3.0 |
| உண்மையான வரவு செலவு% | 4 | 4.1 | 3.5 | 2.7 | 6.0 | 6.4 | 4.9 | 5.7 | 4.8 | 4.4 | 4.1 | - | - | - |

ஆதாரம்: பட்ஜெட் பத்திரங்களிலிருந்து ஆசிரியர் தயாரித்தது % (வருங்கால இலக்குகளை பிரதிபலிக்கிறது)

வரவு செலவு பற்றாக்குறை மதிப்பீடு - ரூ. கோடிகளில்




படம் 2


ஆனால், இந்த பட்ஜெட்டில் அரசு வரவு செலவு பற்றாக்குறையை விகிதாச்சார அடிப்படையில் மட்டுமல்லாமல் மொத்த அளவிலும் குறைத்து மற்ற ஆண்டுகளை ஒப்பிட்டு பார்க்கும்போது மேன்மையான நிலையில் ரூ.5,33,904 கோடியாக குறைத்து வைத்துள்ளது. இந்திய அரசின் வரவு, செலவு, விவேகமும், வரவு செலவு பொறுப்பும், வரவு செலவு பற்றாக்குறையை விகிதாச்சார அடிப்படையில் மட்டுமல்லாமல் மொத்த அளவையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

ஆகவே, வரவு, செலவு பற்றாக்குறை மற்றும் வருவாய் பற்றாக்குறையை விகிதாச்சார அடிப்படையில் மட்டுமல்லாமல், மொத்த அளவிலும் கட்டுப்படுத்தினால் மட்டும் இந்திய அரசுக்கு வரவு செலவு பற்றாக்குறை விவேகமும், பொறுப்பும் இருக்கிறது என்று கொள்ள முடியும்.

## வருவாய் மற்றும் வரவு செலவு பற்றாக்குறை இடையே உள்ள தொடர்புகள்

வருவாய் பற்றாக்குறை மற்றும் முதலீட்டிற்கான செலவுகள் வரவு, செலவு பற்றாக் குறையின் முக்கிய பகுதிகளாகும். ஆகவே, அரசு முதலீடுகள் செய்வதற்காக கடன்களை வாங்கினாலும், வருவாய் பற்றாக்குறையை சரிசெய்ய கடன் வாங்காமல் இருப்பது நல்லது. ஆகவே, வருவாய் பற்றாக்குறையை சமாளிக்க அரசு என்ன செய்கிறது என்பதை பொறுத்துதான் நிதிசார் விவேகம் மதிப் பிடப்படுகிறது. நிதிசார் வலிமை பெறுவதற்கு வருவாயை பெருக்க வேண்டும், அதே சமயம் செலவுகளை குறைக்கக் கூடாது. செல வினங்களை குறைத்து வரவு செலவு பற்றாக் குறையை ஒரு குறிப்பிட்ட அளவிற்குள் வைத் திருப்பது மக்களுடைய சமூகப் பொருளாதார நல்வாழ்வை பாதிக்குமானால் அது வரவேற் கப்படக் கூடிய செயலல்ல. ஆகவே, பற்றாக் குறையை குறைக்க வரிகளை உயர்த்தியும், பரவலாக்கியும் வருமானத்தைப் பெருக்க வேண்டும். வருவாய் பற்றாக்குறைக்கும், வரவு செலவு பற்றாக்குறைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அடுத்த படத்தில் காணலாம். 2009–10ல் 4.8 சதவிகிதமாய் இருந்த வருவாய் பற்றாக்குறை 2016–17ல் 2.3 சதவிகிதமாக குறைந்தாலும், வரவு செலவு

1. வரவு செலவு பற்றாக்குறை மதிப்பீடுகள்
2. வருவாய் பற்றாக்குறை மதிப்பீடுகள்




படம் 3

பற்றாக்குறை தொடர்ந்து இருந்து கொண்டே தான் இருந்தது.

தேவையான அளவுக்கு வரவு செலவு பற்றாக்குறையை, வருவாய் பற்றாக்குறையை குறைப்பதன் மூலம் செய்ய முடியுமே தவிர முதலீடு செலவினங்களை குறைப்பதால் அல்ல. இதனை, வருவாயை பெருக்குவதிலும், செல வினங்களை ஒழுங்குபடுத்துவதாலும் செய்ய முடியும். நிதிசார் வலிமைக்கு செலவினங்களை திறமையாகவும், சிறப்பாகவும் கையாள்வதன் மூலம் செய்ய முடியும். ஆகவே தான், திட்டம் சாராத வருவாய்சார் செலவினங்களை முறைப்படுத்த அரசு செலவினங்களுக்கான சீர்திருத்த கமிஷனை உருவாக்கியுள்ளது. இந்த கமிஷனின் முக்கிய நோக்கம் ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்படும் நிதியில் திறமையை கொண்டுவருவதும், வீணாகும் செலவுகளை தவிர்ப்பதும், சட்டத்தில் உள்ள இடைவெளிகளை நீக்குவதுமாகும்.

## நிதிநிலை தொடரும் தன்மை மற்றம் தர ஆய்வு

ஒரு பட்ஜெட்டின் தரத்தை அதில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை கருத்தில் கொள்ளாமல் அதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் பொருளாதாரத்தின் மீது ஏற்படும் மொத்த தாக்கத்தை கணக்கில் கொண்டுதான் அறிய வேண்டும். வரவு செலவு பற்றாக்குறையை கட்டுப்படுத்துவது என்பது ஒரு எண்ணிக்கை குறியீட்டை அடைவது மட்டுமல்ல. அதனால், பலதரப்பட்ட தரம் சார் விளைவுகளும் பாதிப்புகளும் உள்ளன. தற்போது 2016–17க்கான பட்ஜெட் வரவு செலவு பற்றாக்குறையை சமாளிக்க, நிலைத்து நிற்கும் ஒரு முன் மாதிரியை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த வகையில் வரவு செலவு பற்றாக்குறை கட்டுப்பாடு, செலவினங்களை குறைக்காமல், அதற்கு மாறாக பலதரப்பட்ட சொத்துக்களுக்கான முதலீடுகளையும் பலதரப்பட்ட நலவாழ்வு திட்டங்களுக்கான செலவை அதிகரித்தும் மேற்கொள்ளப் படுவதாகும். ஆகவே, வருவாய் பற்றாக்குறையையும், நிதி நிலைப் பற்றாக்குறையையும் குறைப்பதற்கு ஒரே வழி, வருவாய்க்கான வாய்ப்புகளையும் அதன் அளவுகளையும் விரிவுபடுத்துவதாகும். இதை வரவு செலவு பற்றாக்குறையை கட்டுப்



படுத்தும் $M_3$ மாடல் என்று கூறலாம். (அதாவது மிகையான செலவினங்கள் மற்றும் மிகையான வருமானம்) இதைத்தான் மத்திய நிதி அமைச்சர் வெளியிட்டிருக்கும் பட்ஜெட் வெளிப் படுத்துகிறது. வருமானத்தைக் கூட்டி செலவினங்களையும் அதிகரித்து அதே சமயம் வரவு செலவு பற்றாக் குறையை உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 3.5 சதவிகிதத்திற்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். இங்குதான் நிலைத்து நிற்கும் தன்மையும் தரத்தின் வெளிப்பாடும் தெரிகிறது. குறிப்பாக 2015–16ல் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் 2016–17 மதிப்பீட்டில் திட்டம் சார்ந்த ஒதுக்கீடுகள் 15.3 சதவிகிதமும் திட்டம் சாராத முதலீடுகள் 9 சதவிகிதம் உயர்ந்துள்ளன.

மற்றொரு புறம் நிதியமைச்சர் வருவாய் துறையில் குறிப்பாக வரிகள் விதிப்பதில் நிலைத்து நிற்கும் வரிசார்ந்த அணுகுமுறையில் உயர் வருமானம் உள்ளவர்களுக்கு அதிக வரி விதித்து ஏற்றத்தாழ்வை குறைக்கும் முயற்சியை எடுத்திருக்கிறார். அது போலவே உடல் நலத்திற்கும் மனித வாழ்விற்கும் கேடு விளைவிக்கக்கூடிய பொருள்களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார். அதே சமயம் விவசாயத் துறைக்கும், ஊரகத் துறைக்கும் குறிப்பாக வறுமை கோட்டிற்கும் கீழே உள்ள மக்களுக்கு சமூக பொருளாதார சேவைகளை அளிக்கும் வகையில் ஒதுக்கீட்டை உயர்த்தியிருக்கிறார். அது அல்லாமல், உலகளாவிய பொருளாதார நிச்சயமற்றத் தன்மையை எதிர் கொள்ளும் வண்ணம் வரவு செலவு பற்றாக்குறையை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அல்லாமல் ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்குள் வகுத்திருக் கிறார்.

நிதிநிலை வலிமை கூட்டுவதற்கு அரசின் முயற்சிகள் கேள்கர் கமிட்டி அறிவுரை செய்த படி வரவு செலவு பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள வரவு செலவு பற்றாக்குறை அளவான 2016க்குள் உள்நாட்டின் மொத்த உற்பத்தியில் 3 சதவிகிதம் என்ற இலக்கை ஓராண்டு காலம் தாமதம் ஏற்பட்டாலும் தற்போதைய அரசு இப்போது இருக்கும் நிதி நிலை சூழலுக் குட்பட்டு நிதி நிலைமையில் வலிமை பெற தீவிர முயற்சிகள் எடுத்துவருகிறது. இந்த வரவு செலவு குறிக்கோள்களை நாம் பொருளாதார விரிவாக்கத்தின் மூலமாகவும் அதிகமான வரிகளாலும், வரி வசூலிப்பாலும், சிறந்த வரி நிர்வாகத்தாலும் உள் நாட்டு மொத்த உற்பத்தியில் வரிகளின் பங்கை உயர்த்து வதாலும், செலவினங்களை திறமையாகச் செய்வதாலும், மேல்மட்ட பொருளாதார சூழ்நிலைகளை மேம்படுத்துவதாலும், நன்கு செயல்படக்கூடிய அரசு நிர்வாகத்தாலும்



அடைய முடியும். வரவு செலவு பற்றாக்குறை ஒரு குறிப்பிட்ட இலக்குக்குள் வைப்பதற்கு உலகளவில் எடுக்கப்படும் சில முயற்சிகளை இங்கு காண்போம்:

### *1.* செலவுகளை முறைப்படுத்துதல்

அரசு செலவினங்களை முறைப்படுத்தி ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்படும் தொகை வீணாகாமலும், தவறாக பயன்படுத்தப்படா மலும் சிக்கனமாக செலவு செய்தும் இலக்கு களின் முன்னுரிமைகளை மறு பரிசீலித்தும், ஆனால் அதே சமயம் மக்களுக்கான நல் வாழ்வு திட்டங்களை பாதிக்காமலும் செயல் படுத்த வேண்டும். திறமையை அதிகரித்தும், லஞ்சத்தை கட்டுப்படுத்தியும், நிர்வாக நஷ்டங்களைக் குறைத்தும், பெறமுடியும். வருவாய்மூலதன செலவுகளில் உள்ள ஏற்றத் தாழ்வை சரிசெய்வதன் மூலமும், செல வினங்கள் சார்ந்த சீர்திருத்தங்களை நாம் செய்ய முடியும்.

### *2.* வருவாயை பெருக்குதல்

வருவாயை பெருக்குவது இந்த அரசின் தீவிர நோக்கமாகவும், செயல்பாடாகவும் உள் ளது. வரி மற்றும் வரி அல்லாத வருவாய் களை பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வரியின் பங்கை கூட்ட வரும் காலங்களில் வரிகளை அதிகரித்தும், மொத்த வரி வரு மானத்தைக் கூட்டியும், வரி வசூல் நிர்வாகத்தை செம்மையாக்கவும், பட் ஜெட்டில் முயற்சிகள் விளக்கப்பட் டுள்ளன. இதனால், வரவு செலவு பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள நிதி நிலை நன்நெறியை அடைய வரவு செலவு பற்றாக்குறையை பெருமளவு குறைக்க நிச்சயம் பயன் கிடைக்கும்.

### முடிவான கருத்துக்கள்

பட்ஜெட்டின் வெற்றி அதனால் ஏற்படும் விளைவுகளில் உள்ளதே தவிர. ஒதுக்கீடுகளில் அல்ல. அதன் செயல்திறமை அரசு எந்த அளவுக்கு பலதரப்பட்ட திட்டங்களை கண் காணித்து, குறிப்பாக ஏழை, எளிய மக்களுக் கான திட்டங்களின் பயன்கள் அவர்களுக்கு செல்கிறதா என்பதை உறுதி செய்வதில் உள்ளது. நிதி நிலை வலிமை பெறுவதற்கும், நிதிநிலை நன்நெறி மேலாண்மைக்கும் அவசியமானது செலவினங்களை திறமையாக நிர்வகித்து, வருவாய் அடித்தளத்தை விரி வாக்கி, வரி வருமானத்தை கூட்டுவதாகும். அரசு பொதுத்துறை நிறுவனங்களை சிறப் பாக நிர்வகித்து அதன் மூலம் கிடைக்கும் லாபத்தால் வரி அல்லாத வருவாயை கூட்ட முடியும். திறமையை அதிகரித்து, லஞ்சத்தை கட்டுப்படுத்தி, நிர்வாக செலவினங்களை குறைப்பதன் மூலம் இதை அடைய முடியும். இதனால், வருவாய் பற்றாக்குறையோடு வரவு செலவு பற்றாக்குறையும் பெருமளவு குறைந்து, வரவு செலவு பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்தில் கூறியிருப்பது போல நிதிநிலை வலிமையை பெற்று நிதி நிலை நிலைப்புத் தன்மையை அடைய முடியும். •

# திட்டம்

## புத்தக வெளியீட்டு பிரிவு

### விளம்பர கட்டண விகிதம் (யோஜனா தமிழ்)

(மார்ச் 15, 2016 முதல்)

| Sl. No. | Name of Journal | Inside Text Page | | | | Back Cover | 2nd Cover Page | 3rd Cover Page |
|---|---|---|---|---|---|---|---|---|
| | THITTAM | Colour (Full Page) | Colour (Half Page) | Black & White (Full Page) | Black & White (Half Page) | Full Page | Full Page Full Page | Full Page Full Page |
| 1 | Yojana Tamil | **13000** | **8000** | **10000** | **6000** | **20000** | **17000** | **15000** |
| **Mechanical Details** - Yojana / Tamil | | | | | | | | |
| Overall Size 19.5 x 27 cms | | | | | | | | |
| Print Area 17 x 23 cms | | | | | | | | |
| Advertisement material - Artpull/ Artwork / CD / Positives | | | | | | | | |

திட்டம் இதழில் விளம்பரம் செய்வதற்கு திட்டம் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**திட்டம்**

சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, சென்னை – 600, 006. தொலைபேசி: 044 – 2827 2382
மின்னஞ்சல்: editorthittam@yahoo.co.in

அடுத்த இதழில்...

# வடகிழக்கு மாநிலங்கள்

பற்றிய சிறப்புக்கட்டுரைகள் இடம்பெறும்.

வரும் ஏப்ரல் 2016ல் இருந்து திட்டம் மாத இதழின் விலை விபரம்:

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ. 22/- |
| ஓர் ஆண்டு | ரூ. 230/- |
| இரண்டாண்டு | ரூ. 430/- |
| மூன்றாண்டு | ரூ. 610/- |


# இந்தியாவில் தயாரியுங்கள், வளர்ச்சியையும் எண்ணற்ற வேலை வாய்ப்புகளையும் அளிக்கக் கூடிய 'ஸ்டார்ட்அப்' ஆகியவற்றுக்கான வலுவான சூழல் அமைப்பு

– நீரஜ் பாஜ்பாய்

"ரோம் நகரம் ஒரே நாளில் கட்டி முடிக்கப் பட்ட நகரம் அல்ல" என்பது புகழ்பெற்ற ஒரு பழமொழியாகும். அதே போன்று ஸ்டார்ட் அப், தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்குத் தேவையான வலுவான சூழல் அமைப்பு உருவாவது என்பதும் ஒரே நாளில் நடந்து முடிந்துவிடக் கூடிய செயல் அல்ல. இந்தச் சூழல் என்பது அதிக எண்ணிக்கையில் உருவாகி வரும் வேலை யில்லாதவர்களுக்கு வேலை அளிக்கும் திறனு டையதாக இருந்தாக வேண்டும் என்பது கட்டாயம் ஆகும். எனவே சூழல் அமைப்பு உருவாக்கல் குறுகிய காலகட்டத்திற்குள் சாத்தியம் ஆகாது.

நிதியமைச்சர் அருண் ஜேட்லியின் அண்மைக்கால பட்ஜெட் உரையில் கீழ்வரும் உண்மை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இன் றைய அரசு இந்தியாவின் மாறிவரும் எதிர் பார்ப்புகளையும் அடிப்படை தேவைகளையும் நிறைவு செய்வதற்கான அடிப்படை யதார்த்தத் தையும் சவால்களையும் புரிந்து வைத்துள்ளது என்று உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொருளாதாரம் தீவிரமான நெருக்கடியில் இருக்கும் தற்போதைய சூழலில் எடுக்க வேண்டிய முயற்சி கடினமானதாகவே இருக்கும். பொருளாதார நெருக்கடி நிதிச் சந்தைகளை உருக்குலைக்கின்றது. சர்வதேச வியாபாரம் சுருங்கி விட்டது. சர்வதேச அள வில் பொருளாதாரத்தில் இத்தகைய பெரும் பிரச்சனைகள் இருந்தாலும்கூட, நம் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமாகவே உள்ளது. சர்வதேச பண நிதியம் (ஐ.எம்.எஃப்) இந்தி யாவை தற்போது இருக்கும் ஒரே "பிரகாச



மான இடமாகப்" புகழ்ந்துரைத்து உள்ளது.

*2016–17* ஆம் ஆண்டின் பட்ஜெட் உரையைப் படிக்கும் போது நிதி அமைச்சர் நாட்டின் பொருளாதார நிலைமையையும் அதேபோன்று சர்வதேச பொருளாதார சூழலையையும் தொகுத்துச் சுருக்கி எடுத்துக் கூறினார். நரேந்திர மோடியின் தலைமையி லான தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்.டி.ஏ) அரசின் முன்னோடித் திட்டங்களை வெற்றிகர மாகச் செயல்படுத்துவதற்கான பொறுப்பு களை நிறைவு செய்ய முடியும் என்ற நம்பிக்கை யையும் நிதி அமைச்சர் பட்ஜெட் உரையில் வெளிப்படுத்தி உள்ளார். ஸ்டார்ட்அப் இந்தியா, இந்தியாவில் தயாரியுங்கள், திறன் மேம்பாடு, வேலைவாய்ப்புக்கான களங்களை உருவாக்குதல் போன்ற திட்டங்களைச் செயல் படுத்தவும் பிற எண்ணற்ற திட்டங்களை உரிய காலகட்டத்துக்குள் நடைமுறைப்படுத்தவும் பட்ஜெட்டில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச அளவில் பொருளாதார நிலைமை மந்தம் அடைந்தாலும் கொந்தளிப்பு ஏற்பட்டாலும் இந்த முன்னோடித் திட்டங்கள் செயலாக்கப்படும்.

நீரஜ் பாஜ்பாய்,

பிரதம மந்திரி மிகத் தெளிவாக தனது தாரக மந்திரம் "ஸ்டார்ட்அப் இந்தியா, ஸ்டேன்ட் அப் இந்தியா" என்பதை வெளிப்படுத்தி உள்ளார். ஸ்டார்ட்அப்புகளுக்கான சரியான சூழல் அமைப்புகளை உருவாக்குவதற்கு, பட்ஜெட்டில் வரிகளுக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. நமது தலித் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் இப்போது தொழில் முனைவோர்களாக மாற விரும்புகின்றனர். இனிமேலும் வேலை தேடுபவர்களாக அலைவதற்கு அவர்கள் விரும்பவில்லை. அதற்கு மாறாக வேலை அளிப்பவர்கள் என்ற நிலையை அடைய விரும்புகின்றனர். அவர்களது கனவுகளை உண்மையாக்கும் வகையில், ஒரு தொழில்முனைவோர் மையம் உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது. எதிர்காலத்துக்கான பொருளாதாரத் திட்டங் களைப் புகழ்ந்து சொல்லும் போது திரு.மோடி மேற்கூறியவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசு "இந்தியாவில் தயாரியுங்கள்" என்ற திட்டத்துக்கு முக்கியத்துவம் தந்து வருகின்றது. இத்திட்டம் இப்போது வேலைவாய்ப்பு உரு வாக்கலுக்கு அதிகக் கவனம் செலுத்துகின்றது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க அரசு பல வரிச் சலுகைகளை அறிவித்துள்ளது.

வர்த்தக நடைமுறைகளை எளிதாக்கு வதற்காக வரிச் சலுகைகளும் விதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறிய தொழிற்சாலை கள் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அதிகபட்ச அனுகூலங்களைப் பெற முடியும். சட்டப்பூர்வமாக வழக்குகள் தொடுப்பதைக் குறைக்கவும் தொழிற்சாலையை நடத்துவதில் தோல்வி ஏற்பட்டால் விலகிக் கொள்ள வழிவகை ஏற்படுத்தவும் இந்த நடவடிக்கை உதவும்.

சுங்கம் மற்றும் கலால் வரிவிகிதங்களில் மேற்கொண்டுள்ள திருத்தங்கள் இந்தியாவில் தயாரியுங்கள் திட்டத்துக்கு சிக்கனமும் லாபமும் தருவதாக உள்ளன. குறிப்பாக ஐ.டி.வன்பொருள், மூலதனப் பொருட்கள். ஜவுளி, பாதுகாப்பு தளவாட உற்பத்தி மற்றும் ஏனைய பொருட்களை உற்பத்தி செய்வதில் ஏற்படும் செலவைக் கட்டுப்படுத்த இந்த வரிவிகித திருத்தம் உதவும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

உதாரணமாக, தொலைதொடர்பு துறையை எடுத்துக் கொள்வோம். மொபைல் போன் களுக்கான உபரி பாகங்களை இறக்குமதி செய்வதைத் தடுக்கும் வகையில் அரசு சுங்க வரி விலக்குகளைத் திரும்பப் பெறுவதோடு தீர்வை சலுகைகளையும் விலக்கிக் கொண் டுள்ளது. மொபைல் போன்கள் மற்றும் உபரி பாகங்களை உள்நாட்டிலேயே தயாரிக்கும் முயற்சிக்கு ஊக்கம் அளிப்பது போன்று இந்த நடவடிக்கை உள்ளது.

உள்நாட்டு தொழிலக உற்பத்தி, ஸ்டார்ட் அப் மற்றும் இந்தியாவில் தயாரியுங்கள் போன்ற நடவடிக்கைகளுக்கு உதவும் வகை யில் தற்போது மத்திய அரசும் பல மாநில அரசுகளும் முதலீடுகளை ஈர்க்கும் வகை யிலான சூழலை உருவாக்கி வருகின்றன. இத்தகைய முயற்சிகள் கூடுதலான வேலை வாய்ப்புகளை உருவாக்கும். பட்ஜெட்டில் உறுதி அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் ஒட்டு மொத்தமாக நிதி மற்றும் சமூக வளர்ச்சி மீது சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

முதலீட்டாளர்கள் கலந்து கொள்ளும் மாநாடுகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய சர்வ தேச முதலீட்டாளர்கள் சந்திப்பு கூட்டம் ஒன்று அண்மையில் அரியானாவில் நடந்தது. இதில் கலந்து கொண்ட நிதி அமைச்சர் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் சீர்திருத் தங்களை மேற்கொள்ளுமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டார். கொள்கை சார்ந்த கட்டுப்பாடுகள் குறுக்கீடு செய்வதை முதலீட் டாளர்கள் விரும்புவதில்லை. அதிக அளவு சாதகமான அம்சங்களுடன் வர்த்தக மற்றும் அரசியல் சூழல் எங்குள்ளதோ அங்குதான் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் விரும்புகின்றார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். ஒத்துழைப்பு முறையிலான கூட்டாட்சி என்ற செயல்வகையில் இருந்து இந்தியா போட்டி முறையிலான கூட்டாட்சி

என்ற செயல்வகைக்கு மாறிக்கொண்டு இருக்கிறது. எதிர்காலம் போட்டிமுறையிலான கூட்டாட்சிக்குத்தான். மத்திய அரசு மாநில அரசு உறவு முறை மாற்றத்தால் இவ்வாறு கூறவில்லை. மாறாக முதலீடுகளை தங்களின் மாநிலத்துக்கு ஈர்ப்பதற்காக மாநிலங்கள் தங்களுக்குள் போட்டி போடுகின்றன. சீர்திருத் தங்களை மேற்கொள்ளாத மாநிலங்கள்; முதலீட்டாளர்களுக்கு சாதகமான பொருளா தார, வர்த்தக மற்றும் அரசியல் சூழலை ஏற்படுத்தித் தரும் மாநிலங்கள் என்ற போட்டி தான் முக்கியமாகும். சீர்திருத்தம் செய்யாத மாநில மக்கள் பாதிக்கப்படுவார்கள். சீர் திருத்தம் மேற்கொள்ளும் மாநில மக்கள் அதன் பலன்களைப் பெறுவார்கள்.

”சீர்திருத்தம் செய் அல்லது நசிந்து போ” எனக் கூறுவது இன்றைய காலகட்டத்துக்குத் தான் மிகவும் பொருந்தும், என நிதி அமைச்சர் மேலும் தெரிவித்து உள்ளார். அண்மையில் மக்களவையில் பொது பட்ஜெட்டைச் சமர்ப்பித்த போது திரு.ஜேட்லி ஸ்டார்ட் அப் குறித்து விரிவாகப் பேசினார். அவை வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றன, புத்தாக்கங்களை உருவாக்குகின்றன மற்றும் இந்தியாவில் தயாரியுங்கள் திட்டத்துக்கான முக்கிய பங்குதாரர்களாக இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். ஏப்ரல் 2016க்கும் மார்ச் 2019க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைக்கப்படும் ஸ்டார்ட்அப்புகளுக்கு 5 ஆண்டுகளில் 3 ஆண்டுகளுக்கு 100 சதவிகித லாபமும் வரிவிதிப்புக்கான வருவாயில் இருந்து கழித்துக் கொள்ளப்படும். இந்தச் சலுகை ஸ்டார்ட்அப்புகள் அதிக அளவில் தொடங்கப்பட உதவும் என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். அத்தகையவர்களுக்கு மேட்(MAT) பொருந்தக்கூடும். எனினும் மூலதன லாபங்களுக்கும் வரி விதிக்கப்படாது. ஆனால் நிபந்தனைகள் என்னவென்றால் இத்தகைய மூலதன லாபங்கள் சீரமைப்பு/அறிவிப்பு நிதியங்களில் முதலீடு செய்யப்பட வேண்டும். அதேபோன்று அதிகப்படியான பங்குகளை வைத்திருக்கின்ற தனிநபர்கள் அறிவிக்கப்பட்ட ஸ்டார்ட்அப்புகளில் முதலீடு செய்ய வேண்டும்.

ஒரு சிறப்பு காப்புரிமை முறைமையை நிதியமைச்சர் முன் மொழிந்துள்ளார். இந்தியா வில் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட காப்புரிமைகளை உலக அளவில் பயன்படுத்தும் போது கிடைக்கும் வருவாய்க்கு 10% வரிவிதிப்பு முன்மொழியப்பட்டுள்ளது. இந்தியாவில் தயாரியுங்கள் என்ற பிரச்சாரத்துக்கு உள் நாட்டு தயாரிப்பு பொருட்களுக்கு மதிப்பு கூட்டுவதற்கு ஊக்கம் தருவதற்கு சுங்கம் மற்றும் கலால் வரிவிதிப்பு முறை முக்கிய பங்காற்றும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட உள்ளீட்டு பொருட்கள், மூலப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், உபரி பாகங்கள் மற்றும் குறிப்பிட்ட இதர பொருட்கள் ஆகியவற்றுக்கான கலால் மற்றும் சுங்க வரியில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தவும் அரசு முன்மொழிந்துள்ளது. அதே போன்று வரிவிதிப்பு நடைமுறைகளை எளிமைப்படுத்தவும் முன்மொழிந்துள்ளது. இதன் மூலம் தகவல் தொழில்நுட்ப வன் பொருள், மூலதனப் பொருட்கள், பாதுகாப்பு தளவாடப் பொருட்கள், ஜவுளி, கனிமங்கள், எரிபொருள், கனிம எண்ணெய்கள், வேதிப் பொருட்கள், பெட்ரோலிய வேதிப் பொருட் கள், காகிதம், காகித அட்டை, செய்தித்தாள் காகிதம் ஆகிய பிரிவுகளில் உள்நாட்டுத் தொழில் துறையில் போட்டியை அதிகப் படுத்தவும் செலவைக் குறைக்கவும் முடியும். விமானங்களை பராமரித்தல், பழுதுபார்த்தல், முழுமையான சரிபார்ப்பு ஆகிய பணிகளிலும் கப்பல்களைப் பழுதுபார்த்தலிலும் போட்டி யையும் சிக்கனத்தையும் ஏற்படுத்த முடியும்.

வளர்ந்து வரும் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் திறன்பெற்ற ஊழியர்களை வேலைக்கு அனுப்பவும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காகவும் அரசு நாடு முழுவதும் 1,500 பல்திறன் பயிற்சி நிலையங்களை அமைக்க முடிவெடுத்துள்ளது. இதற்காக இந்தப் பட்ஜெட்டில் ரூ 1,700 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. பிரதம மந்திரி கௌஷால் விகாஸ் திட்டத்தின் மூலம் (PMKVY) இளைஞர்களின் வாழ்விடத்திலேயே தொழில்முனைவு திறமை




அளிக்கும் நடவடிக்கையை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற அரசின் நிலைப்பாட்டை நிதியமைச்சர் எடுத்துக்காட்டி உள்ளார்.

நிதியமைச்சரின் கூற்றுப்படி, திறன் இந்தியா இயக்கமானது நாட்டின் குடிமை யியல் அனுகூலத்தைப் பயன்படுத்த முனைந் துள்ளது. தேசிய திறன் மேம்பாட்டு இயக்கம் (NSDM) தொடங்கப்பட்டதில் இருந்து இது வரை 76 லட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் திறன் மேம் பாட்டுக்கான சூழல் அமைப்பு விரிவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில்துறை மற்றும் கல்விப்புலம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் திறன் மேம்பாட்டு சான்றிதழ் தேசிய வாரி யம் அமைக்க அரசு முடிவெடுத்து உள்ளது. அடுத்த மூன்றாண்டுகளுக்குள் மேலும் ஒரு கோடி இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கும் வகையில் பிரதம மந்திரி கௌஷால் விகாஸ் திட்டத்தை அதிகரிக்க நாங்கள் முன்மொழிந்து உள்ளோம் என நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அடுத்த மூன்றாண்டுகளில் ஒரு கோடி இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்றுவிடுவார்கள் என்றால் அது வேலைவாய்ப்பில் ஒரு புதிய காலகட்டமாகத் தொடங்கும் என்றும் மேலும் உற்பத்தித் திறன் நாடு முழுவதும் படிப் படியாக அதிகரிக்கும் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களின்படி, 2,200 கல்லூரிகள், 300 பள்ளிகள், 500 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் (ஐ.டி.ஐ), 50 தொழிற்பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் திறந்தநிலை ஆன்லைன் வகுப்புகள் மூலம் தொழில்முனைவுக் கல்வியும் பயிற்சியும் பெரு மளவில் வழங்கப்படும். நாட்டின் தொலைதூர பகுதிகளைச் சேர்ந்த தொழில் தொடங்கும் ஆர்வமுள்ளவர்களுக்கு வழிகாட்டும் புரவலர் கள் கிடைக்கவும் கடன் வசதிகள் கிடைக்கவும் உதவிகள் செய்யப்படும்.

வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற முன்னுரிமையின்படி அரசாங்கம் முறை சார் தொழில் பிரிவில் புதிய வேலை வாய்ப்பு களை உருவாக்குவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி, தொழிலாளர் ஈட்டுறுதி கழகத்தில் பதிவு செய்து கொள்ளும் அனைத்து புதிய ஊழியர்களுக்கும் அவர்களது வேலையின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊழியர் வருங் கால வைப்புநிதியின் கீழ் 8.33% தொகையை அரசாங்கமே செலுத்தும். ஆனால் இந்தச் சலுகை மாதம் ரூ. 15,000க்குக் கீழ் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இந்தச் சலுகை திட்டத்துக்காக பட்ஜெட்டில் ரூ. 1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் நிதி மசோதா 2016ல் வருமான வரிச்சட்டத்தின் 80 ஜேஜேஏஏ (80JJAA) பிரிவின் கீழ் வேலைவாய்ப்பு உருவாக்கலுக்கான ஊக்க நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் அவற்றுக் கான கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் சில அம்சங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் வேலைவாய்ப்பை உரு வாக்கும் திட்டத்தை விவரித்து கூறிக் கொண்டு வரும்போது நிதியமைச்சர் ஜுலை 2015ல் தேசிய வேலைவாய்ப்பு சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரி வித்தார். இந்த அமைப்பில் முன்பே 35 மில்லியன் வேலைதேடும் நபர்கள் பதிவு செய்து உள்ளனர். புதிய பட்ஜெட்டில், 2016 17ஆம் நிதியாண்டின் இறுதியில் செயல்படும் வகையில் 100 மாதிரி வேலைவாய்ப்பு சேவை மையங்களை திறப்பதற்கு அரசு உத்தேசித் துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வேலைவாய்ப்பு சேவை மையத் துடன் மாநில வேலைவாய்ப்பு அலுவலகங் களை இணைக்கின்ற அம்சமும் முன் மொழியப்பட்டு உள்ளது. மேலும் கம்பெனிகள் சட்டம் 2013ஐத் திருத்துவதற்கான சட்ட மசோதா நடப்பு பட்ஜெட் தொடரிலேயே நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்தத் திருத்தம் வர்த்தகம் செய்வதில் உள்ள சிரமங்களையும் தடை களையும் நீக்குவதற்கு உதவும். மேலும் இந்தச் சட்டத் திருத்த மசோதா ஸ்டார்ட் அப்புகளுக்கு உகந்த சூழலை மேம்படுத்தவும் உதவும். மேலும் கம்பெனிகளைப் பதிவு செய்யும் செயலும் ஒரே நாளில் முடிந்து விடும். இத்தகைய முன்மொழிவுகளுக்கு அடிப் படையாக இருக்கும் முதன்மை நோக்கம் என்னவென்றால் பொருளாதார வளர்ச்சி யின் மூலமாக வேலைவாய்ப்பு உருவாக்கலை அதிகரிப்பதுதான் என்று கூறுகிறார் நிதி அமைச்சர்.

மானியங்கள் அளிப்பது, ஓய்வூதியம் மற்றும் வீட்டுவசதி வாய்ப்பு அனைவருக்கும் கிடைப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியன "இந்தியாவில் தயாரியுங்கள்" திட்டத்தின் இதர குறிக்கோள்கள் என்கிறார் அமைச்சர். பொருளாதார வளர்ச்சியையும் வேலை வாய்ப்பையும் அதிகரிக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஒன்று: ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2019 வரை தொடங்கப்படும் ஸ்டார்ட் அப்புகளுக்கு 5 ஆண்டுகளில் 3 ஆண்டுகளுக்கு வரிக்காக கணக்கிடும் வருவாயில் இருந்து 100% லாபத்தைக் கழித்தல். சில வரையறைகளுக்கு உட்பட்டு புத்தாக்க கண்டுபிடிப்புகளை அதிகப்படுத்த இம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தியாவில் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட காப் புரிமைகள் உலக அளவில் பயன்படுத்துவதால் கிடைக்கும் வருமானம் மீது 10% வரிவிதிப்பு கொண்ட சிறப்பு காப்புரிமை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வங்கி சாராத நிதி நிறுவனங்கள் தங்களது சந்தேகத்துக்கிடமான மற்றும் வாராக் கடன் களுக்காக தங்களது வருமானத்தில் 5% வரை கழித்துக் கொள்ள தகுதி பெறுகிறார்கள். மார்ச் 2015வரை முடிந்த நிதியாண்டில் ரூ5 கோடி வரை ஆண்டுத் தொழில் தொகை உடைய சிறிய தொழிலகங்களுக்கான நிறுவன வருமான வரி அடுத்த நிதியாண்டில் 29% என குறைக்கப்பட முன்மொழியப்பட்டுள்ளது. இந்த வரியோடு சர்சார்ஜ் மற்றும் செஸ் தீர்வையும் சேர்க்கப்படும்.

மார்ச் 1, 2016 அன்று அல்லது அதற்குப் பிறகு பதிவு செய்யப்படும் புதிய உற்பத்தி சார்ந்த நிறுவனங்கள் லாபம் சார்ந்த அல்லது முதலீடு சார்ந்த தள்ளுபடிகளை கோரா விட்டால், முதலீட்டு ஊக்கத் தொகையை பெற்றிருக்காவிட்டால் அவை 25% வரி மற்றும் சர்சார்ஜ், செஸ் தீர்வை என்ற வரிவிகித வாய்ப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தீன தயாள் உபாத்யாய கிராமீன் கௌசல்ய திட்டத்தின் கீழான சேவைகள் மற்றும் திறன் மேம்பாடு, தொழில்முனைவு அமைச் சகம் அங்கீகரித்துள்ள மதிப்பீட்டு அமைப்பு கள் வழங்கும் சேவைகள் மீதான சேவை

வரிக்கு விலக்கு அளிக்கவும் முன்மொழியப் பட்டுள்ளது.

நம்நாட்டில் சில்லறை விற்பனைப் பிரிவு தான் வேலைவாய்ப்பை அளிக்கும் மிகப் பெரிய சேவைப் பிரிவாகும். இதில் தற்போது உள்ள விதிமுறைகள் எளிமைப்படுத்தப் பட்டால், இப்பிரிவில் மேலும் கூடுதலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படலாம் என அரசு கருதுகின்றது.

ஷாப்பிங் மால்கள் வாரம் ஏழு நாட்களும் திறந்திருக்கும் என்றால் ஏன் நடுத்தர மற்றும் சிறிய கடைகளும் அதுபோன்று ஏழு நாட்களும் திறந்திருக்கக் கூடாது என நிதி அமைச்சர் கேள்வி எழுப்புகிறார். விருப்பப்பட்டால் இத்தகைய கடைகள் வாரத்தின் அனைத்து நாட்களிலும் திறந்திருக்கக் கூடிய வாய்ப்பு தரப்பட வேண்டும். அதேநேரம் தொழிலாளர் நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். அதாவது தொழிலாளர்களுக்கு வாராந்திர விடுமுறை அளிக்கப்பட வேண்டும். ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் வேலை என்பதும் வரையறுக்கப்பட வேண்டும்.

மத்திய அரசு மாதிரி கடைகள், நிறு வனங்கள் மசோதாவை சுற்றுக்கு விடுவதற்கு நினைத்துள்ளது. விருப்பப்பட்டால் மாநிலங் கள் இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளலாம்.

இந்தியாவில் 65 சதவிகித மக்கள் தொகை யினர் 35 வயதிற்கும் குறைவானவர்கள்தான். இதைக் கருத்தில் கொண்டு அரசு வேலை வாய்ப்பை உருவாக்கும் அனைத்து வழி முறைகளையும் பயன்படுத்தி வருகின்றது. அதிக எண்ணிக்கையில் உள்ள வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் வலுவான சூழல் அமைப்பை உருவாக்குவதுதான் தற்போது சவாலாக உள்ளது. இதற்கு குறிப்பிட்ட காலவரையறை தேவைப்படும்.

ஊழியர் வருங்கால வைப்புநிதியின் (இ.பி.எஃப்) வட்டி மீது வரி விதிக்கப்படும் என்ற பட்ஜெட் முன்மொழிவு ஊழியர்களின் மத்தியில் சந்தேக அலைகளை உருவாக்கி உள்ளது. ஆனால் இந்த அறிவிப்பு இப்போது திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல அணுகுமுறை ஆகும். தொழிற்சாலைகளின் முதுகெலும்பாக உள்ள தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமான சூழ் நிலையை கட்டமைத்துத் தருவதற்கு இது உதவும்.

ஓய்வூதிய காலத்தில் பணக் கஷ்டம் இல் லாமல் இருப்பதற்காக ஓய்வூதியத் திட்டங் களில் முதலீடு செய்ய வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களை ஊக்குப்படுத்துவதற் காகத்தான் வருங்கால வைப்பு நிதி மீது வரி விதிப்பது என முடிவெடுத்ததற்குக் காரணம் ஆகும். ஆனால் பல மக்களவை உறுப் பினர்களும் பல நிறுவனங்களும் இது குறித்த அளித்த புகார் மனுக்களின் அடிப்படையில் நிதி அமைச்சர் இந்த அறிவிப்பை திரும்பப் பெற்றுக் கொண்டார். ஆனால் தேசிய ஓய்வூதிய திட்டம் குறித்த வரிவிதிப்பு முன் மொழிவு அப்படியே உள்ளது என அமைச்சர் தெளிவுபடுத்தி உள்ளார். மத்திய பட் ஜெட்டில், இந்த ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் ஊழியர் வருங்கால வைப்பு நிதியில் சேர்ந்துள்ள தொகையில் 60% திரும்பப் பெறப்பட்டால் வரி விதிக்கப்படும்; 40% தொகைக்கு வரி இல்லை என அறிவிக்கப் பட்டு உள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளுக்கு விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்கு ஆக்குதல்; ஊரக வேலைவாய்ப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதி; சுகாதாரப் பராமரிப்பு; கல்வி, தொழில் திறன்கள், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்; உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு; நிதித்துறை சீர்திருத்தங்கள்; ஆட்சிமுறை மற்றும் வர்த் தகத்தை எளிமையாக மேற்கொள்ளுதல்; நிதிய ஒழுங்கு, வரிவிதிப்பு சீர்திருத்தங்கள் ஆகிய நடவடிக்கைகள் மூலம் இந்தியாவை உருமாற்ற அரசு முயற்சி எடுத்து வருகிறது. •

# ADVERTISEMENT UNIT
# PUBLICATIONS DIVISION
# MINISTRY OF INFORMATION & BROADCASTINGS

## COMMERCIAL ADVERTISEMENT RATES FOR DPD JOURNALS
## (w.e.f 15th March , 2016)

| Sl. No. | Name of Journal | Inside Text Page | | | | Back Cover | 2nd Cover page | 3rd cover page |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (Rate for each Journals for one edition) | Colour (Full Page) | Colour (Half Page) | Black & White (Full Page) | Black & White (Half Page) | Full Page | Full Page | Full Page |
| 1 | Yojana (English ) | 35000 | 20000 | 25000 | 15000 | 100000 | 70000 | 70000 |
| 2 | Yojana ( Hindi) | 25000 | 15000 | 18000 | 11000 | 75000 | 50000 | 50000 |
| 2 | Kurukshetra (English & Hindi) | 20000 | 12000 | 15000 | 10000 | 30000 | 27000 | 25000 |
| 3 | Ajkal (Hindi & Urdu) | 10000 | 6000 | 7000 | 5000 | 15000 | 12000 | 11000 |
| 4 | Yojana ( Urdu/Punjabi/ Oriya/ Assamese/ Gujrati/ Malayalam ) | 7000 | 4500 | 5000 | 3000 | 10000 | 9000 | 8000 |
| 5 | Bal Bharti, | 10000 | | | | 15000 | 12000 | 11000 |
| 6 | Yojana (Bengali/ Telgu/ Marathi/ Tamil/Kannada) | 13000 | 8000 | 10000 | 6000 | 20000 | 17000 | 15000 |

COMMERCIAL ADVERTISEMENT RATES FOR INDIA/BHARAT**

| | India | | Bharat | |
|---|---|---|---|---|
| | Colour | Black & White | Colour | Black & White |
| Full Page | 40000 | 25000 | 25000 | 15000 |
| 2nd Cover page | | | | |
| 3rd Cover page | 70000 | | 50000 | |

**Rates of Advertisement tariff in India & Bharat annual reference are inclusive for print & electronic version.

Note :

2nd cover page of magazines will be reserved for the DAVP and Government Organizations. The above rate are only for PSU advertisement

* 2% extra discount on each additional insertion of advertisement subject to maximum discount of 40%.

**Mechanical Details**

| | Yojana | Ajkal/Kurukshetra | Bal Bharti |
|---|---|---|---|
| Overall Size | 19.5 x 27 cms | 21 x 28 cms | 18 x 24 cms |
| Print Area | 17 x 23 cms | 17 x 24 cms | 15 x 19.5 cms |
| | Advertisement material - Artpull/Artwork/CD/Positives | | |

**Full advance payment by D.D. in favour of ADG(I/c), Publications Division, M/o I&B payable at New Delhi.** Advertisement material and payment to be sent to the Business Manager (Advt.), Advertisement Unit, Publications Division, Room No. 48-53, Soochna Bhawan, CGO Complex, Lodi Road, New Delhi 110 003 Email: pdjucir@gmail.com. For any other query please contact at 011-2436 7453